janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூன் 19 - ஜூன் 25 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 11







அணிதிரள **ஆயத்தமாவீர்!**

நமது அமைப்புகளின் மாநாடுகள் உற்சாகப் பெருக்குடன் நடந்தும், நடைபெற்றும் வருகின்றன. நாம் அரசியலில் மிகத் >>> ப 02



எங்கே **2 கோடி வேலை?**

கடந்த 2014ல் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு என்ற முழக்கத்தோடுதா >>> ப 03



**சைவ** சித்தாந்தம்

இந்திய கருத்துமுதல்வாதத் தத்துவங்களில் காலத்தால் பிந்தியது சைவசித்தாந்தம். இது சங்கரர், ராமானுசர், மத்துவர், >>> ப 05


## ஹிட்லர் வழியில் நாட்டை பிளவுபடுத்த ‘இனத்தூய்மை’ ஆய்வு!


# அறிஞர்கள் எதிர்ப்பு!


**இந்தியாவில் வாழும் மக்களின் இனத் தூய்மை மற்றும் மரபியல் தொடர்ச்சியை கண்டறி யும் வகையில், புதிய மரபணு (DNA) ஆராய்ச்சி யை ஒன்றிய அரசு மேற்கொள்ளவிருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.**

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு ஒன்றிய கலாச்சாரத்துறை செயலாளர் கோவிந்த் மோகன், பிரபல தொல்பொருள் ஆராய்ச்சியாளரும், பேராசிரியருமான வசந்த் ஷிண்டே மற்றும் லக்னோவில் உள்ள பழங்கால அறிவியல் கல்வி நிலையத்தை சேர்ந்த விஞ் ஞானி களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். அதைத்தொடர்ந்து பேட்டியளித்த பேராசிரியர் வசந்த் ஷிண்டே, “மனிதர்களின் மரபணுக்கள் 10,000 ஆண்டுகளில் எப்படி உருமாற்றம் அடைந்துள்ளன. ஒரு மரபணு வரிசையுடன் மற்றொரு மரபணு வரிசை எவ்வாறு கலக்கிறது? என்பது தொடர்பாக ஆராய்ச்சி செய்ய இருக்கிறோம்” என்றார்.

அத்துடன் “இந்த ஆராய்ச்சியை இந்திய மக்களின் இனத்தூய்மையை கண்டறிவதற்கான முயற்சியாகவும் பார்க்கலாம்” என்று ஒன்றிய அரசின் திட்டத்தை பகிரங்கமாக்கினார். இதற்கு கடும் எதிர்ப்புகள் எழுந்தன. ஏற்கெனவே சாதிய மற்றும் மத அடிப்படை யிலான பல்வேறு ஏற்றத்தாழ்வுகள், பல்வேறு சிக்கல்கள், மோதல்களில் இருக்கும் இந்திய சமூகத்தில், ‘இனத்தூய்மை’ கண்டறியும் ஒன்றிய அரசின் திட்டம் புதிய ஏற்றத்தாழ்வு கள் ஹிட்லரின் இனத்தூய்மைவாதம்போல வெறுப்பு அரசியலுக்கே வழிவகுக்கும்.

மேலும் இது ஆபத்தான முடிவு என்றும் அறிவியலாளர்கள், வரலாற்றாசிரியர்களும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து, “தங்களின் முன்மொழிவு மரபணு வரலாற்றை



நிறுவுவதற்கும் இந்தியாவில் உள்ள இனங்களின் தூய்மையைக் கண்டு பிடிப்பதற்கும் எந்த வகையிலும் தொடர்புடையது அல்ல!” என்று ஒன்றிய அரசின் கலாச்சாரத்துறை அமைச்சகம் மறுப்பு தெரிவித்தது. பெங்களூரு நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் அட்வான்ஸ்டு ஸ்டடீஸின் துணைப் பேராசிரியரான வசந்த் ஷிண்டேவும், தனது பேட்டி திரிக்கப்பட்டு விட்டதாகவும், இனத்தூய்மை என்ற வார்த்தையை ஒருபோதும் தான் பயன்படுத்த வில்லை என்றும் கூறினார். நாடு முழுவதும் உள்ள மரபணு அறிவிய லாளர்கள், வரலாற்றாசிரியர்கள், கல்வி யாளர்கள், எழுத்தாளர்கள், ஓய்வுபெற்ற அரசு முன்னாள் உயர் அதிகாரிகள், சமூக செயற்பாட்டாளர்கள் 122 பேர், ஒன்றிய கலாச் சாரத்துறை அமைச்சகத்தின் செயலாளருக்கு விரிவான கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். அதில், “இனத்தூய்மை குறித்த எந்த ஆய்வும் இப்போதைக்கு இல்லை என்பதோடு அல்லாமல், எப்போதும் அதனை நடத்தக் கூடாது” என்றும், “அதற்கான பகிரங்கமான அறிவிப்பை ஒன் றிய அரசு வெளியிட வேண்டும்” எனவும் வலியு றுத்தியுள்ளனர். நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பயோமெடிக்கல் ஜெனோமிக் நிறுவனத்தைச் சேர்ந்த மரபியல் வல்லுநர் பார்த்தா பி. மஜூம்தார், பரிணாம உயிரியலாளர்கள் அமிதாப் ஜோஷி, தீபா ஆகாஷே மற்றும் ராகவேந்திர கடகர், இயற்பியலாளர்கள் இந்திராணி போஸ் மற்றும் ஸ்ரீகாந்த் சாஸ்திரி, உயிரியலாளர் சத்யஜித் மேயர், பெங்களூரு மனித மர பியல் மையத்தைச் சேர்ந்த வித்யானந்த் நஞ்சுண்டியா, அசோகா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எல்.எஸ். சசிதரா, சுற்றுச்சூழல் ஆர்வலர் லியோ சல்டான்ஹா; சமூக ஆர்வலர் அருணா ராய்; வரலாற் றாசிரியர் மற்றும் எழுத்தாளர் ராமச் சந்திர குஹா, எழுத்தாளர் மற்றும் பத்திரிகை யாளர் ராம்மனோகர் ரெட்டி; திரைப்பட ஆய்வு நிபுணர் இரா.பாஸ்கர்; மற்றும் சமூக மானுடவியலாளர் ஏ.ஆர். வாசவி, பெங்களூரு சர்வதேச கோட் பாட்டு அறிவியல் மையத்தைச் சேர்ந்த ராம கோவிந்தராஜன் உள்ளிட்டோர் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது: இந்தியா அல்லது வேறு எந்த நாட்டிலோ ‘இனங்களின் தூய்மையை’ கண்டுபிடிப்பது மிகவும் கவலைக்குரியது. அவ்வாறு செய்வதற்கான திட்டம் அபத்தமானது மற்றும் ஆபத்தானது. ஏனெனில், ‘உயிரியல் இனங்கள்’ என்ற கருத்து நீண்ட காலத்திற்கு முன்பே ‘நிராகரிக்கப்பட்டு’ விட்டது. எலும்பு அமைப்பு மற்றும் தோல் நிறம் போன்ற உடல் அம்சங்கள் மற்றும் நம்பிக்கை மற்றும் மதம் போன்ற சமூக பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதர்களை தனித்தனி குழுக் களாக வகைப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதி யாகத்தான் ‘இனம்’ என்ற சொல் கண்டு பிடிக் கப்பட்டது. எனினும், தனிப்பட்ட உயிரியல் பரம்பரையை உருவாக்கும் மரபணுக்களின் அடிப்படையில், எல்லா மனிதர்களும், அவர் கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பதைப் பொருட் படுத்தாமல், ஒரே ‘மரபணுக் குளத்தை’ பகிர்ந்து கொள்கிறார்கள். மனிதர்களின் இனரீதியான ஸ்டீரியோடைப் நிராகரிக்கப்பட்டுள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு எபோகல் பேப்பர் சுட்டிக்காட்டியபடி, பெரும்பாலான மரபணு அடிப்படையிலான வேறுபாடுகள் இனங்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு உள்ளேதான் நிகழ்கின்றன, இனங்களுக்கு இடையில் அல்ல. அதாவது, “மனித இனங்கள் மற்றும் மக்கள்தொகை ஆகியவை குறிப்பிடத்தக்க வகையில் ஒன்றுக்கொன்று ஒத்திருக்கின்றன. மாறாக, மனித மாறுபாட்டின் மிகப்பெரிய பகுதி இனங்களுக்கு இடையிலானதாக அல்லாமல், தனிநபர்களுக்கு இடையிலான வேறுபாடுகளால் மட்டுமே கணக்கிடப்படுகிறது. மேலும், ‘தூய்மை’ என்ற கருத்து அர்த்தமற்றதாக இருப்பதுடன், சில குழுக்கள் மற்றவர்களை விட குறைவான தூய்மையான அல்லது அதிக தூய்மையான என்ற பாகுபாட்டு உணர்வைக் கொண்டுள்ளது. மனித வரலாற்றின் இது போன்ற கொடூரமான அநீதிக்கு நிறைய எடுத் துக்காட்டுக்கள் உள்ளது.


பல தசாப்தங்களாக, கலாச்சார அமைச்ச கத்தின் கீழ் உள்ள இந்திய மானுடவியல் ஆய்வு உட்பட பல்வேறு இந்திய நிறுவனங்களில் பணிபுரியும் மரபியலாளர்கள் மற்றும் மானுட வியலாளர்கள், பழங்குடி சமூகங்கள் உட்பட இந்தியாவின் பல்வேறு சமூகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தனிநபர்களின் விரிவான டிஎன்ஏ பகுப்பாய்வுகளை சிரமமின்றி மேற் கொண்டுள்ளனர். இன்று ஒவ்வொரு சமூக மும் பல மூதாதையர் சமூகங்களின் ஒரு கலவையான சமூகமாகவே உள்ளது. அதன் அடையாளங்களை சிறந்த முறையில் யூகிக்க முடியுமே இப்போதும் அவற்றை மிகவும் உறுதியாக கூறிவிட முடியாது. கலாச்சார அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ள திட்டத்தால் என்ன நன்மை எதிர்பார்க்கப்படுகிறது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் அது ‘இனத் தூய்மை’ பற்றிய கேள்விகளை எழுப்புமானால், இந்தியர்களுக்கு இடையிலான ஒற்றுமை சீரழியும் என்பது மட்டும் உண்மை. எனவே, இந்தியாவில் கருத்தை புதுப்பிக்க எந்த முயற்சியும் இருக்கக்கூடாது. இவ்வாறு கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.



| | |
|---|---|
| ஆயுள் சந்தா | - ரூ.7500.00 |
| ஆண்டு சந்தா | - ரூ.750.00 |
| தனிப்பிரதி | - ரூ.15.00 |

**ஜனசக்தி**

பாவை பிரிண்டர்ஸ் மாடி,
142/16 ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600014 ✆: 9444331138






# செங்கொடி தாங்கி செஞ்சட்டை அணிந்து அணிதிரள ஆயத்தமாவீர்!

**பேரன்புமிக்க தோழர்களே!**

சென்றவாரம் உங்களுடன் உரையாட இயலவில்லை.

நமது அமைப்புகளின் மாநாடுகள் உற்சாகப் பெருக்குடன் நடந்தும், நடைபெற்றும் வருகின்றன.

நாம் அரசியலில் மிகத் தெளிவான முறையில் நடைபோடும் காரணத்தால் நாம் மிகுந்த உற்சாகத்துடன் அமைப்பு நிலை மாநாடுகளை நடத்தி வருகின்றோம்.

நமது நண்பன் யார்? நமது எதிரி யார்? என்பதில் நமக்கு எப்போதும் குழப்பநிலை ஏற்பட்டது இல்லை.

நமது அரசியல் எதிரிகளை மிகச்சரியாக அடையாளம் கண்டு அரசியல் ரீதியாக எதிர்கொள்ள அனைத்து ஆயத்த பணிகளையும் தொய்வின்றி மேற்கொண்டு வருகின்றோம்.

நமது அரசியல் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிட நமது அமைப்பு மிக பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும் என்பதனை நன்குணர்ந்த நாம், அதனை செயல்படுத்திடும் விதமாக, கட்சியின் முடிவுகளை முழுமையாக நிறைவேற்றக் கூடிய ஆற்றல் மிக்க அமைப்பாக உருவாக்குவதில், பலப்படுத் துவதில் நமது கவனம் முழுவதும் அமைந்திடல் வேண்டும்.

நமது வர்க்க, வெகுஜன அமைப்புகளை பலப்படுத்துவதன் தேவையை உணர்ந்து, நமது அமைப்பின் ஆணிவேரான கட்சி கிளை மாநாடுகளில், நமது கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்த பொறுப்புகள் கிளை மாநாடுகளில் முடிவு செய்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.

கிளை மாநாடுகள் முடிந்த நிலையில் இடைநிலை அமைப்புகளின் மாநாடும், அதனைத் தொடர்ந்து மாவட்ட மாநாடுகளும் நடக்கத் தொடங்கிவிட்டன.

மாவட்ட மாநாடுகளை முழுமையாக நடத்தி முடித்திட வேண்டிய நாட்களும், மாநில நிர்வாகக் குழு சார்பில் பங்கேற்கும் தோழர்களும் முடிவு செய்து, அப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

25 ஆவது மாநில மாநாடு ஆகஸ்ட் திங்கள் 6,7,8 மற்றும் 9 ஆகிய நான்கு தினங்கள் திருப்பூர் மாநகரில் நடைபெற உள்ளது.

மாநில மாநாட்டில் நமது அகில இந்திய தலைவர்களான பொதுச் செயலாளர் டி. ராஜா, ஏஐடியூசியின் பொதுச் செயலாளர் தோழர் அமர்ஜித் கவுர், தேசிய செயலாளர் தோழர் டாக்டர் நாராயணா, தேசிய செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி. ஆகிய நான்கு தலைவர்களும் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

திருப்பூர் மாநகரம் என்பது பனியன் உள்ளிட்ட உள்ளா டைகள் தயாரித்து நமது நாட்டின் தேவைக்கு மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய பெருநகரம்.

தொழிலாளி வர்க்கம் நிறைந்திட்ட திருப்பூர் நகரம், நாட் டின் விடுதலைப் போரில் முன்னணி வகுத்திட்ட பெரிய நகரமாகும்.

துப்பாக்கிக் குண்டுகள் மார்பை பிளந்தபோதும் போலீஸின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் உடல் முழுவதும் இரக்கமின்றி தாக்கிய போதும், தான் உயர்த்திப் பிடித்த மூவர்ணக் கொடியை தாழ விடாது உயர்த்திப் பிடித்த கொடி காத்த குமரன் நகரில் செங்கொடி இயக்கத்தின் மாநாடு நடைபெற இருக்கின்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு தற்போது தான் முதன் முதலாக திருப்பூர் நகரில் நடைபெறவிருக்கின்றது.

முதன்முதலாக மாநாட்டை நடத்திடும் வாய்ப்பைப் பெற்ற திருப்பூர் மாவட்ட தோழர்கள் மிகுந்த உற்சாகப் பெருக்குடன் மாநாட்டுப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மாநாட்டு பணிகளை செம்மையாக நிறைவேற்றிட விரிவ டைந்த வரவேற்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில துணைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான தோழர் கே. சுப்பராயன் வரவேற்புக் குழு தலைவராகவும், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தோழர் எம்.ரவி வரவேற்பு குழு செயலாளராகவும், பொருளாளராக மாநகர துணை மேயர் ஆர். பாலசுப்பிரமணியம்(எம்.கே.எம்.) உள்ளிட்ட வரவேற்பு குழு மாநாட்டு பணிகளை மேற்கொண்டு சிறப்புடன் செய்து வருகின்றார்கள்.

மாநாடு நடைபெறும் மண்டபம், நகரின் மையப் பகுதியில் பிரம்மாண்டமாக அமைந்துள்ளது.

அனைத்து பிரதிநிதி தோழர்களும் நான்கு நாட்கள் தங்குவதற்கும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.

மாநாட்டு பேரணி தொடங்கும் இடம், பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கான திகைப்பூட்டும் திடல், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் அனைத்தும் தேர்வு செய்து அவைக ளுக்குரிய அனுமதிகளும் முறையாக பெறப்பட்டு விட்டன.

மாநாட்டில் முன்வைக்கப்பட உள்ள அரசியல் அறிக்கை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை எழுத வேண்டிய அவசியமில்லை.

சென்ற 24வது மாநில மாநாடு மன்னார்குடியில் நடை பெற்றபோது, தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சி நடைபெற்றுக் கொண்டு இருந்தது.

ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்பட்டு தமிழ்நாட்டு மக்களின் நலன்களை, உரிமைகளை பறிகொடுத்து அடிமை ஆட்சியாக நடைபெற்ற அதிமுகவை அகற்றிட நமது கட்சி எத்தகைய முன் முயற்சிகளை மேற்கொண்டது என்பதனை நாம் அனைவரும் நன்கு அறிவோம்!

நாம் மேற்கொண்ட அரசியல் நிலைப்பாடு மிகவும் தெளி வானது; எதார்த்தமானது. அரசியல் நிலைப்பாட்டை வெற்றி யடைய செய்வதில் தொய்வின்றியும், சோர்வின்றியும் இடை விடாது பணியாற்றிய காரணத்தால் அரசியல் ரீதியாக வெற்றி வாகை சூடினோம். அத்தகைய வெற்றிதான், அடிமை அதிமுக ஆட்சி அகற்றப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்று ஓராண்டை நிறைவு செய்துள்ளது.

ஒன்றியத்திலுள்ள மோடி தலைமையிலான ஆட்சி எட்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

எட்டாண்டு கால மோடியின் ஆட்சி நாட்டு மக்களுக்கு எத்தகைய தீங்குகளை, விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதனை அறிவோம்.

இனியும் மோடியின் ஆட்சி தொடர்வது நாட்டுக்கும், மக்களுக்கும் ஒருபோதும் நல்லதல்ல.

மதம் என்கிற பெயரால், மொழி என்கிற பெயரால் நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் பங்கம் விளைவித்து கொண்டிருக்கின்ற பாஜக ஆட்சியை இனியும் அனுமதிக்கக் கூடாது.

மோடியின் ஆட்சி அகற்றப்படும் வரை நமது அரசியல் போராட்டம் முன்னைக் காட்டிலும் தீவிரப்படுத்திட வேண்டிய அவசியத்தை நாம் அறியாதவர்கள் அல்ல.

ஆம்! நமது மாநில மாநாட்டின் நிறைவு நாள் ஆகஸ்ட் 9 என்பதனை தூக்கத்திலும் மறந்திடலாகாது.

ஆகஸ்ட் 9 என்பது நமது நாட்டின் மகத்தான விடுதலைப் போராட்ட வரலாற்றின் அதி முக்கியத்துவம் உடைய நாளாகும்.

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற விடுத லைப் போராட்ட வரலாற்றில் ஆகஸ்ட் 9 என்பது மிக உயரிய முக்கியத்துவம் பெறுகின்ற நாள்.

ஆம்! எங்கள் நாட்டு மக்களை அடிமையாக்கி எங்கள் செல்வங்கள் அனைத்தையும் சூறையாடிய கொள்ளையனே, வெள்ளையனே இனியும் எங்கள் நாட்டில் உனக்கு வேலை இல்லை.

மூட்டை, முடிச்சுகளை கட்டு, நாட்டை விட்டு வெளியேறு–

'வெள்ளையனே வெளியேறு' என்று நாடு முழுவதும் உணர்ச்சி கொந்தளிக்க, நாட்டு மக்கள் அனைவரும் ஒரு சேர முழக்கமிட்ட நாள்– ஓங்கி ஒலித்திட்ட நாள்தான் ஆகஸ்ட் ஒன்பது.

அதே ஆகஸ்ட் ஒன்பதாம் நாள் கொடிகாத்த திருப்பூர் மாநகரில் நூறாய், ஆயிரமாய், லட்சமாய் செங்கொடி புதல்வர்கள் குடும்பம், குடும்பமாய் அணிவகுக்க இருக்கின்றார்கள்.

**மாநிலம் முழுவதுமிருந்தும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நமது கட்சி உறுப்பினர்கள் அனைவரும், தாங்கள் மட்டு மல்லாது, தங்களது குடும்பத்துடன், கட்சியின் குடும்ப விழா வில் பெரும் படையாய் பங்கேற்க இருக்கின்றார்கள்.**

வருகின்ற தோழர்கள், தாய்மார்கள், சகோதரிகள், மாண வர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என பெரும் பட்டாளம் போர்ப்படை என திரள இருக்கின்றது.

அணிவகுப்பில் பங்கெடுக்கும் பெரும் படையே! உன்னை வரவேற்க திருப்பூர் மாநகரம் காத்திருக்கின்றது. வழி மேல் விழி வைத்து இருகரம் நீட்டி வரவேற்க காத்திருக்கின்றது.

கிஞ்சிற்றும் சுயநலமற்ற, எதனையும் எதிர்பார்க்கா, தியாகமும், சேவையும், அர்ப்பணிப்பும் தனது லட்சியமாகக் கொண்ட பெரும் படையே! இரத்தம் தோய்ந்த செங்கொடியை உயர்த்திப் பிடித்து செஞ்சட்டை அணிந்து வா, வா.

மக்கள் விரோத மோடி அரசே! தேச விரோத மோடி அரசே! சர்வாதிகார மோடி அரசே! பாசிச மோடி அரசே! வெளியேறு, நாட்டைவிட்டு வெளியேறு என நீ திருப்பூர் மாநகரில் எழுப்பும் முழக்கம் எட்டு திசையும் எதிரொலிக்கட்டும்!

நாட்டின் தென்கோடியில் அமைந்துள்ள தமிழ்நாட்டில் எழுப்பப்படும் முழக்கம் நாடு முழுவதும் எதிரொலிக்கட்டும்!

விடியல் பிறக்கட்டும், ஜனநாயகம் தழைக்கட்டும், புதியதோர் உலகு செய்வோம் –

ஆயத்தமாவீர்!

**அடுத்த வாரம் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



த. லெனின்

# எங்கே 2 கோடி வேலை?

## ஒட்ட வெட்டுவோம் பா.ஜ.க.வின் வாலை!




**கடந்த 2014ல் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு என்ற முழக்கத்தோடுதான் பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்தார். ஆனால், ஆட்சிக்கு வந்த கடந்த எட்டு ஆண்டுகளில் இருந்த வேலை வாய்ப்பையும் அழித்ததுதான் அவரது இமாலய சாதனையாக உள்ளது.**

ஆனாலும், 2024 பொதுத் தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் சில பொய்யான புள்ளி விபர சரடுகளை அவிழ்த்துவிட்டு வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளதாக தினந்தோறும் செய்திகளைப் பரப்பி வருகின்றனர். அடுத்த 18 மாதத்திற்குள் 10 லட்சம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவித்துள்ளனர். ஆனால், இந்த அறிவிப்பிற்குப் பின்னால் பல சூழ்ச்சிகளும் தனியார் மயமாக்கலும் கடை விரிப்பதே காட்சியாக மாறிவிட்டது.

ராணுவம், கடற்படை, விமானப்படையில் நான்கு ஆண்டுகள் மட்டும் பணியாற்றும் வகையில் ''அக்னிப் பாதை'' என்ற புதிய திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டப்படி 17.5 வயது முதல் 21 வயதுடைய இருபால் இளம் தலைமுறையும் முப்படைகளில் சேரலாம் என்று அறிவித்துள்ளது.

இந்திய ராணுவத்தில் நிரந்தர சேவை, மற்றும் குறுகியகால சேவை ஆகிய பிரிவுகளின் கீழ் ஆள் தேர்வு நடைபெறுகிறது. குறுகிய கால சேவையில் சேர்பவர்கள் 10 முதல் 14 ஆண்டுகள் வரை பணியில் நீடிக்கலாம். ஆனால் அக்னி பாதை என்ற இந்தப் புதிய திட்டத்தின் கீழ் படையில் சேரும் இளைஞர்கள் ஏற்கனவே உள்ள கல்வித் தகுதியின் அடிப்படையில்தான் சேர்க்கப்படுகிறார்கள் என்றாலும் இதில் 46 ஆயிரம் பேர் தேர்வு செய்யப்படுவார்களாம். அதில் ஆறு மாதங்கள் வீரர்களுக்கு பயிற்சி வழங்கப்படுமாம்.

முதலாமாண்டு 30 ஆயிரம் ரூபாய். இரண்டாமாண்டு 33 ஆயிரம் ரூபாய், மூன்றாமாண்டு 36,500 ரூபாய், நான்காம் ஆண்டு 40 ஆயிரம் ரூபாய் ஊதியமாக வழங்கப்படுமாம். இவ்வூதியத்தில் 30 சதம் பங்களிப்பு தொகையாக பிடிக்கப்பட்டு மீதம் உள்ளி 70 சதம் மட்டுமே வழங்கப்படுமாம். இதன் மூலம் பணி விலகலுக்குப் பிறகு 11.71 லட்சம் வருமான வரி விலக்கோடு நிதி வழங்கப்படுமாம். ஆனால் ஓய்வூதியம் கிடையாது. ஆக ''அக்னி'' பாதை இந்திய இளைஞர்களை உயிரோடு எரிக்கும் பாதை என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவின் முதல் தனியார் ரயில் ''பாரத் கவுரவ்'' கோவையிலிருந்து சீரடி வரையிலான தனது புனித யாத்திரையை தொடங்கி விட்டது. அவர்களது ஆன்மிகம் எப்படிப்பட்டது என்பதை இந்த ரயிலின் மூலம் அறியலாம். உலகத்திலேயே மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனமாகிய இந்திய ரயில்வே மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆனால், அதற்கு

**ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் இன்றும் 4.5 லட்சம் காலிப் பணியிடங்கள் உள்ளன. அந்த காலிப் பணியிடங்களை நிரப்பினால் சமூக நீதி அடிப்படையில் இடஒதுக்கீட்டு பிரிவினருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால், தனியார் மயமாக்கல் மூலம் சமூக நீதியையும் இளைஞர்களுக்கான வேலை உரிமையையும் ஒரே கல்லில் அடித்து வீழ்த்தியிருக்கிறது அடாவடி மோடி அரசு! பாரத் கவுரவ் உண்மையில் பாரத் அவ கவுரவ்வாக மாறிவிட்டது!**

இந்திய ரயில்வே துறையின் உள் கட்டமைப்பில் இந்த தனியார் ரயில்கள் இயங்கினாலும், அதன் கட்டணம் என்னவோ மிக அதிகமாகும். முதல் வகுப்பு ஏ.சி. பயணத்திற்கு ரூ.10,500 ரூபாய் முதல் ரூ.13,650 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் வகுப்பு ஏ.சி.க்கு ரூ.7,350 முதல் ரூ.10,500 வரையும், மூன்றாம் வகுப்பு ஏ.சி.க்கு ரூ.3990, ரூ.5,250, ரூ.8,400 என்றும், ஏ.சி. அல்லாத படுக்கை வசதிக்கு ரூ.1,510, ரூ.2,625, நெரிசல் காலங்களில் ரூ.5,250 என்று கட்டணம் நிர்ணயம் செய்ததன் மூலம் இந்த ''ஆன்மிக அரசு'' ஆன்மிக பயணம் மேற்கொள்வோருக்கு எவ்வளவு எதிராக இருக்கிறது என்பதை நாம் காணலாம்.

ரயில்வேயிக்கு ஆள் எடுப்பதற்கான தேர்வுகள் நடக்கும் போதெல்லாம் வினாத்தாள் வெளியாகி தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டதையே தொடர் நிகழ்வாகும்.

அதுபோலவே உத்தரப் பிரதேச அரசின் சார்பில் நடைத்தப்பட்ட ஆசிரியர் தேர்வும் வினாத்தாள்கள் வெளியாகி நிறுத்தப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் பெரும் போராட்டங்களை நடத்தியதை நாம் அறிவோம். அத்துடன் உ.பி. முதல்வர் யோகியின் காவல்துறை பிரக்கியாராஜில் அவர்களை நைய்ய புடைத்ததையும் நாடு அறியும்.

பாட்னாவில் நடைபெற்ற ரயில்வே பணியிடங்களுக்கான தேர்வும் வினாத்தாள் வெளியானதால் ரத்து செய்யப்பட்டது. அதுபோலவே ஆயுதப் படைகளுக்கான காலிப் பணியிடங்களுக்கான தேர்வுகள் கடந்த உலகப் பெருந்தொற்று காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. அதுபோலவே ஒன்றிய துணை ராணுவப்படை, ஜி.எஸ்.டி. துறையும் அதில் உள்ளடங்கிய கஸ்டம்ஸ் மற்றும் கலால் வரித்துறைக்கான காலிப்பணியிடங்களும் பூர்த்தி செய்யப்படவில்லை.

அதுபோலவே வங்கி மற்றும் இன்சூரன்ஸ் பணிகளுக்கான களப் பணியாளர்கள் கடந்த 15 ஆண்டுகளாக தேர்வு செய்யப்படவில்லை. பா.ஜ.க.வின் நாடாளுமன்ற உறுப்பினரான வருண்காந்தி ஒன்றிய அரசின் கீழ் உள்ள 60 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது வேலை இல்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கும் செயல் என பேசியிருப்பது இந்த உண்மையை உலகுக்கு பறைசாற்றி விட்டது. அதனால்தான் என்னவோ இன்று புதிய புள்ளி விபரங்களை எல்லாம் அள்ளி வீசி வருகிறார்கள்.

அதன்படி, தொழிலாளர்களின் வேலைப் பங்கேற்பு கடந்த ஆண்டுகளில் 40.1 சதமாக இருந்தது. ஆனால், 2020–2021ஆம் ஆண்டில் 41.6 சதமாக அதிகரித்துள்ளது என்றும், தொழிலாளர் உழைப்பு பங்கெடுப்பு விதிதம் கடந்த ஆண்டுகளில் 4.2 சதமாக இருந்தது என்றும், 2020–21ல் அது 4.8 சதமாக அதிகரித்துள்ளதால் இதன் மூலம் வேலையின்மை குறைந்தது போன்று காட்டப்படுகிறது. ஆனால்

**உண்மை என்னவென்றால் 100 நாள் வேலைத் திட்டத்தின் மூலமும், கிராமப்புற விவசாய வேலைகளின் மூல மும் ஓரளவு உடல் உழைப்பு வேலை மட்டுமே பெருகியது. இந்தியாவில் முறைசாரா தொழில்களில் 40 கோடி பேர் வேலை செய் கிறார்கள். இதில் 90 சதம் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. & பி.எப். போன்ற எந்த சமூகப் பாதுகாப்பும் இல்லை. அதிலும், இந்த வகையில் சம்பளம் பெறும் மொத்த பணியாளர்களில் 45% வெறும் ரூ.9750 மாத ஊதியமாகவும் நாள் ஒன்றுக்கு ரூ.375 மட்டுமே பெறக்கூடியவர்கள் என்பது அதிர்ச்சியானது.**

மறுபுறத்திலேயே பெரும் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் ஆண்டுக்கு 42 கோடி ரூபாய், 36 கோடி ரூபாய் ஊதியம் வாங்கும் காலத்தில் அனைத்து விலைச்சுமைகளையும் தன் தலைமேல் சுமக்கும் இந்த அடித்தட்டு உழைப்பாளி மக்களுக்கு என்ன மிஞ்சும்? அதுவும், வாங்கும் ஊதியத்தில் 30% பெட்ரோல், டீசல் மற்றும் போக்குவரத்து செலவுகளாக ஆகிவிடுகின்றன. இதன் விளைவாக மக்களின் வாங்கும் சக்தி படுபாதாளத்திற்கு சென்றுவிட்டது. மொத்த விற்பனை விலை குறியீடு உலகத்திலேயே மிக அதிகமாக 15.9% த்தை கொண்டிக்கும் நாடாக இந்தியா மாறிவிட்டது. வேலையின்மையால் உருவாக்கப்பட்ட வறுமை இந்தியாவை உலக அரங்கில் சிறுமைப்படுத்துகிறது.

வேலை தேடி அயலகம் சென்று, வலைகுடா நாடுகளில் பணி வாய்ப்பில் இருக்கிற இந்தியர்களுக்கும் வேட்டு வைக்கும் விதத்தில் பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளர்கள் நுபுர்சர்மாவும், நவீன்குமார் ஜிண்டாலும் இஸ்லாத் குறித்தும் நபிகள் குறித்து பழித்து பேசிய காரணத்தால் பலர் வேலை நீக்கம் செய்யப்படுவதும் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவதும் தொடர்கிறது.

ஆக, வறுமையும் வேலையின்மையும்தான் ஒரு வளரும் நாட்டின் பிரச்சினை என்றால் மோடியின் இந்தியாவிலோ வகுப்புவாதமும், மதவெறியும் தன் பங்குக்கான வேலையை தாராளமாகச் செய்து வருகிறது.

உலகில் உள்ள பல வளரும் நாடுகளை விட இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். அதாவது, 8 % உள்ளது. ஆனால், இது வங்கதேசத்தில் 5.3%, மெக்சிகோவில் 4.7%, வியட்நாமில் 2.3% என்று பொருளாதார வல்லுனர் கவுசிக் பாசு குறிப்பிடுகிறார்.

எதிர்கொள்ள வேண்டிய வேலையின்மைக்கு பதில் சொல்ல முடியாத திராணியற்ற மோடி அரசு மதக் கலவரங்களை ஏற்படுத்தி தனது வெறுப்பு அரசியலுக்கான வாய்ப்பை உறுதிப்படுத்த முனைகிறது. எதற்கெடுத்தாலும் ஊழல், ஊழல் என்று ஒற்றை வரியில் குரல் எழுப்பும் பா.ஜ.க. இன்று தனது ஆட்சியில் தொடர்ந்து நடைபெற வேண்டிய ரயில்வே தேர்வுகளின் வினாத் தாள்கள் வெளியாகி தேர்வுகள் நிறுத்தப்படுவது எதைக் காட்டுகிறது?

பிரதமரின் கிசான் இணையத்தில் சேர்ந்துள்ள 11 கோடி விவசாயிகளின் ஆதார் தகவல்கள் அந்நிய நிறுவனங்களால் திருடப்பட்டுள்ளது எதைக் காட்டுகிறது?

வேலை வாய்ப்பு என்பது ஒருவர் தனது ஆற்றலை நாட்டிற்காக உழைக்கத் தயாராக இருந்தும், அதைப் பயன்படுத்திக் கொள்ளாத நாட்டைப் பற்றியது. வேலை கொடுப்பதுதான் உண்மையான தேசபக்தி! ஏற்கனவே வேலையில் இருப்பவர்களை வீட்டிற்கு அனுப்புவது பெரும் நிறுவன ஆதரவுக்காக ஏற்பட்ட முக்தி!

வேலையின்மையை வேரறுக்க புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க பொறுப்புடன் செயல்படும் புதிய அரசியல் சிந்தனை இன்றைய தேவையாக இருக்கிறது. இடதுசாரி, மதச்சார்பற்ற – ஜனநாயக சக்திகளைத் திரட்டி இளைஞர்களுக்கு எதிரான பாசிச பா.ஜ.க.– ஆர்.எஸ்.எஸ்.கும்பலை வீட்டிற்கு அனுப்புவோம்.

பகத்சிங் வாரிசுகளே செயல்முடிக்க களம்காண தயாராவீர்!

தொடர்புக்கு: **94444 81703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 11

## புல்டோசரை நிறுத்த, ஜனாதிபதி வேட்பாளரைத் துரத்துக!

நூபுர் சர்மா, ஜிந்தால் ஆகியோர் நபிகளை இழிவுபடுத்தியதைக் கண்டித்து இஸ்லாமியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். கல்லெடுத்து எறிந்து கலவரம் நடத்தியதாக உ.பி.அரசு வழக்குப் பதிவு செய்துள்ளது. சிக்காக்கோ தொடங்கி மெரினா ஜல்லிக்கட்டு போராட்டம் வரை, இந்தக் ‘கலவரக் கதை’யை கேட்டிருக்கிறோம்.

ஆனால் ஆர்ப்பாட்டத்தை நடத்திய முஸ்லிம்களின் வீடுகளை எல்லாம் அரசாங்கமே புல்டோசரைக் கொண்டு இடித்துத் தள்ளும் கொடூரத்தை இப்போதுதான் பார்க்கிறோம்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக முன்னாள் மாணவியும், நாடறிந்த செயல்பாட்டாளருமான அஃப்ரீன் பாத்திமாவின் தந்தை ஜாவேத் அஹமத், கலவரத்தைத் தூண்டியதாகச் சொல்லி மொத்தக் குடும்பத்தையும் கைது செய்தனர். வெளியூரிலிருந்த அஃப்ரீன் பாத்திமாவிடம் நோட்டீஸ் கொடுத்த சில மணி நேரத்தில், பொருட்களைக் கூட வெளியே எடுக்க முடியாமல், பூட்டிய வீட்டை அரசு இடித்துத் தள்ளி குப்பை மேடாக்கியது.

உத்தரப்பிரதேசத்தின் பாஜக ஆதித்யநாத் யோகி அரசு, ஒரே நாளுக்குள் தானே குற்றம் சுமத்தி, நிரூபிக்கப்பட்டதாகத் தானே தீர்ப்பளித்து, அவர்களது வீடுகளை இடித்துத் தள்ள வேண்டும் என சட்டத்திலேயே இல்லாத தண்டனையை விதித்து, தானே நிறைவேற்றி முடித்து விட்டது. “கலகக்காரர்களே ! ஒவ்வொரு வெள்ளிக்கிழமைக்கு பின்னாலும் சனிக்கிழமை வரும்” என்ற உபி முதல்வர் ஆலோசகரின் ட்வீட் பகிரங்க மிரட்டலாகும்.

பாஜக அரசு இடித்து நொறுக்கியது வீடுகளை மட்டுமல்ல; சட்டத்தின் ஆட்சியை, ஜனநாயகத்தை, அரசியலமைப்புச் சட்டத்தையும் சேர்த்துத்தான்.

17.5 வயது முதல் 21 வயதுள்வர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு முப்படைகளிலும் ராணுவ சேவை என அறிவிக்கப் பட்டுள்ளது. இது பல சமூக விளைவுகளை ஏற்படுத்தும்

தன்னைத் தட்டிக் கேட்கும் திறனோ, தகுதியோ யாருக்கும் இல்லையென்றே அது கருதுகிறது. எல்லாத் தவறுகளையும் இந்து முஸ்லிம் மதவெறியைத் தூண்டி விட்டே மறைத்து விடமுடியும், அச்சுறுத்தியே தன்னை அசைக்க முடியாது எனும் எண்ணத்தை மக்கள் மனங்களுக்குள் ஆழ விதைத்து விட முடியும் என நம்புகிறது.

குடியரசுத் தலைவர் தேர்தல் வருகிறது. தற்போதுள்ள நிலையில், பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து வாக்களித்தாலும், பாஜக வேட்பாளர் வெற்றி பெற முடியாது. தட்டிக்கேட்க ஆளில்லை எனும் அதன் அகங்காரத்துக்கு அணைபோட நல்ல வாய்ப்பு.

ஆனால் ஒரு பொதுவான வேட்பாளரை நிறுத்தி,பிஜேபி வேட்பாளருக்கு கடும் போட்டியை ஏற்படுத்தும் நோக்கமும் முயற்சியும் எதிர்க் கட்சிகளிடையே இல்லை. தலைவர்களின் தன்னகங்காரம், ஒருவருக்கு மற்றவர் மேல் இருக்கும் வெறுப்பு, தானே அதிகாரத்துக்கு வர வேண்டும் என்ற அறிவிழந்த ஆசை ஆகியவற்றால், கூட்டாக ஒரு வேட்பாளரை நிறுத்துவதைப் பற்றி சேர்ந்து பேசவில்லை.

மற்ற கட்சிகளைக் கலந்தாலோசிக்காமலேயே, மமதா பானர்ஜி அனைத்துக் கட்சிகளை பேச அழைத்துள்ளார். அதைக் குறையாகக் கொள்ளாது, இடதுசாரிகளும் காங்கிரசும், அந்தக் கூட்டத்துக்கு செல்வதென முடிவெடுத்திருப்பது நல்லது. . ஆந்திரப் பிரதேசத்தின் முதல்வர் ஜெகன், ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றே தோன்றுகிறது. மாயாவதி, ஆம் ஆத்மி கெஜ்ரிவால் போன்றோர் என்ன செய்வார்கள் என யாருக்கும் தெரியாது. தெலுங்கானா முதல்வர் கே. சந்திரசேகர ராவின் ஐயத்துக்குரிய அமைதி மக்களைக் குழப்புவதாக உள்ளது.

ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கு தனித் தகுதி தரவேண்டும் என ஜகன் நிபந்தனை விதிக்கலாம். ஆனால் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள, வருமான வரித்துறை, அமுலாக்கத் துறை ஆகியவற்றை பாஜக பயன்படுத்தி அச்சுறுத்துமே தவிர, நிபந்தனைகளை நிறைவேற்றித் தராது. சந்திரபாபு நாயுடு, ஜகன் முடிவுக்காகக் காத்திருக்கலாம். எப்படியும் கடைசியில் இருவருமே பாஜகவை ஆதரித்து வாக்களிக்கலாம்.

குலாம் நபி ஆசாத், நித்திஷ் குமார் ஆகியோரில் ஒருவரை நிறுத்தப் போவதாக பாஜக ஒரு ‘செய்தி’யை வேண்டுமென்றே கசிய விட்டுள்ளது. நிச்சயமாக அவர்கள் அதைச் செய்யப் போவதில்லை. அவர்களது சித்தாந்தத்தில் ஊறிய, சொல்வதை நிறைவேற்றுகிற ஒருவரைத்தான் பாஜக நிறுத்தும்.

சர்வாதிகாரம் ஒட்டுமொத்தமாக கட்டவிழ்க்கப்படும் போது, அதைத் தடுக்க ஒன்றுபடாமல், எரியும் வீட்டில் கிடைத்தது ஆதாயம் என, தனக்கு ஏதாவது கிடைத்துவிடாதா என்று நப்பாசையில் ஏங்குவது ஜனநாயகத்துக்கும் சேர்த்துக் கொள்ளி வைப்பதாகும். குடியரசுத் தலைவர் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை எதிர்க் கட்சிகள் நிறுத்த முயலவேண்டும்.

இந்தத் தேர்தலை எளிதாகக் கடந்து சென்றுவிட பாஜகவை அனுமதிக்கக்கூடாது.



பி.எல்.சுந்தரம்

## பழங்குடியினரக இயக்குனரகமும் - வன உரிமைச் சட்ட ஆலோசனையும்: சில கருத்துகள்

**சென்னையில் பழங்குடியினர் நல இயக்குனரகம், 2006 வன உரிமைச்சட்டத்தின் தற்போதய அமலாக்கம்,அடுத்து செய்யவேண்டியவை குறித்த ஒரு ஆலோசனைக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது...**

இக்கூட்டத்திற்கு 18 மாவட்டங்களில் இருந்து வன உரிமைச்சட்டம் சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டுள்ள செயல்பாட்டாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஈரோடு மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் எஸ்.மோகன்குமார், பர்கூர் வசந்தரா, பெஜலட்டி பாலன்(டேம்ஸ்) மற்றும் ரங்கநாதன் (விஆர்டிபி),கன்னியாகுமரி இராஜன்,நீலகிரி ஆலு வாஸ்(நாவா), தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தலைவர் டில்லி பாபு உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

பழங்குடியினர் நல இயக்குனர் ச.அண்ணாதுரை இ.தொ.ப அவர்கள் எடுத்த முன் முயற்சி இது !

கூட்டத்தில் பின் வரும் கருத்துகளை தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில் வலியுறுத்தினோம்.

பழங்குடியினர் நல இயக்குனரகத்தின் இந்த முயற்சி காலம்தாழ்ந்திருந்தாலும் முயற்சியை வரவேற்கிறோம்.

வனத்துறையைச்சாராத ஒருவர் துறை இயக்குனராக பொறுப்பேற்றிருப்பதற்கு மகிழ்ச்சி !

நீண்ட காலமாக நாம் வலியுறுத்திவரும் ஒன்று... வன நில உரிமை(மிலிஸி)

ஈரோடு மாவட்டத்தில் 3 வன கோட்டங்கள்..4 வருவாய் வட்டங்களில் 115 பழங்குடி கிராமங்கள் உள்ளது.இதில் 15 வன செட்டில்மென்ட்கள்..

15 வன செட்டில்மென்ட்களில் 13ல் உள்ளவர்களுக்கு தனி நபர் நில உரிமைக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு விட்டது. 2 செட்டில் மென்ட்களுக்கு வழங்கவேண்டும்.

நில உரிமை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சில செட்டில்மெண்ட்களில் சிலருக்கு, பயன்பாட்டில் உள்ள நில அளவைக்காட்டிலும் அங்கீகார ஆவணத்தில் அளவு குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது.குறிப்பிட்ட அளவுக்கு மேல் உள்ள இடங்களில் பயிரிடுவதற்கு வனத்துறை தடை செய்கிறது.இதனை சரிசெய்ய முயற்சித்துக் கொண்டுள்ளோம்.

நில உரிமை வழங்கப்பட்டுள்ள வன செட்டில் மென்ட்களை வருவாய் செட்டில் மென்ட்களாக மாற்றவேண்டும். இல்லாவிடில், நில உரிமை அங்கீகாரம் பெற்றும் பயன் இருக்காது.

சமூக வன உரிமை மற்றும் சமூக வன வள ஆதார உரிமை **(CFR and CFR)**

பத்து கிராம சபைகள்,சமூக வன உரிமை மற்றும் வன வள ஆதார உரிமை அங்கீகாரத்திற்கான மனுக் களை கோட்ட அளவிலான குழுவிடம் **(SDLC)** அளித்துள்ளன. இவை பரிசீலனையில் உள்ளது.

வனப்பொருள் சேகரத்தை,கிராம வனக்குழுக்கள் மூலம் செய்வது வன உரிமைச்சட்டத்திற்கெதிரானது. வனக்குழுக்கள் மூலம் பழங்குடியினரின் உழைப்பை வனத்துறை சுரண்டுவதை நிறுத்த வேண்டும்.

வன உரிமைச்சட்ட அமலாக்கத்திற்கு தடையாக உள்ளவை எவை?

1. பழங்குடியினர் நலத்துறை
2. வனத்துறை
3. நீதி மன்றங்கள்

**1.பழங்குடியினர் நலத்துறை:**

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு,தனக்குள்ளதாகவே இந்த துறை கருதுவதில்லை.சட்டத்தை பற்றிய அடிப்படை புரிதல் கூட இல்லதாவர்களாக அலுவலர்கள் உள்ளனர்.

கோட்ட அளவிலான குழுத்தலைவர் (ஆர்டிஓ), வனச்சரகரிடம் ஆலோசனை கேட்பதும், மாவட்ட அளவிலான குழுத்தலைவர்(ஆட்சியர்),கன்சர்வேட்டரிடம் ஆலோசனை கேட்பதுவுமான நிலை உள்ளது.

ஐஏஎஸ்கள், ஐஎப்எஸ்களை எதிர்கொள்ள தயங்குகிறார்கள். வன உரிமைச்சட்டத்தை முதலில் பழங்குடியினர் நலத்துறையினர் பயில வேண்டும்.

பெரும் பொறுப்பு... சட்டரீதியாக தனக்களிக்கப் பட்டிருப்பதை உணர வேண்டும்.

வன உரிமைச்சட்டம் சம்பந்தப்பட்ட பணிகளுக்கு தனிப்பிரிவை உருவாக்க வேண்டும்.

சட்டம் மற்றும் விதிகள் குறித்த நூல்களை தமிழில் கொண்டு வரவேண்டும்.

பழங்குடியினர் நலத்துறை, பழங்குடியினருக் கானதுதான்..

ஆனால் வன உரிமைச்சட்டம், பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்து வாழும் அனைவருக்குமானது.

வன உரிமைச்சட்டத்தை அமலாக்கும் போது, இத் துறை’பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்து வாழ்வோர் நலத்துறை’ யாக வேண்டும்.

**2. வனத்துறை:**

நாடாளுமன்றம் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

அதுவும்,’இந்தியாஇதுவரையிலும் ஆதிவாசிகளுக்கு இழைத்த அநீதிகளையெல்லாம் இந்த சட்டம் சரிசெய்யும் ‘என்ற நம்பிக்கையோடு நிறைவேற்றியுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்பட்டு 15ஆண்டுகளுக்கும் மேலாகியும், உதிரும் கூந்தலுக்கு கொடுக்கும் மரியாதையைக்கூட இச்சட்டத்திற்கு வனத்துறை கொடுப்பதில்லை.

இச்சட்டத்தை முடக்க செய்யவேண்டியனவற்றையெல்லாம் திட்டமிட்டு செய்கிறது.

2006 காணுயிர் பாதுகாப்புச் சட்டத்திருத்தம் வழிகாட்டியுள்ளதற்கு மாறாகசட்ட விரோதமாக புலிகள் காப்பகங்கள் அறிவிக்கை செய்யப்படுகின்றன.

இதுவரையிலும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள புலிகள் காப்பகங்கள் எதுவும் சட்டப்படியானதல்ல. அனைத்தும் சட்டவிரோதமானவையே..

புலிகள் காப்பகங்கள்,சரணாலயங்கள்,தேசிய பூங்காக்களில் வன உரிமைச்சட்டத்தை அமல்படுத்துவதை தடுக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளை வனத்துறை பகிரங்கமாக செய்கிறது.

சட்டத்தை அமல்படுத்த வேண்டிய பழங்குடியினர் நலத்துறை வேடிக்கை பார்க்கிறது.

**கிராமசபைகளின் பரிந்துரைகளுக்கு,சட்டத்திற்கு விரோதமான காரணங்களை கூறி கோட்ட மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களில் வனத்துறை இடையூறு செய்கிறது.**

அவற்றை முறியடிக்க வேண்டிய பழங்குடியினர் நலத்துறை சமரசம் பேசும் பணியை செய்கிறது.

**3. நீதி மன்றங்கள்:**

சமீபத்தில் வந்து கொண்டிருக்கும் நீதி மன்ற உத்திரவுகள், வன உரிமைச்சட்டத்தை பொருட்படுத்தி யதாகவே தெரியவில்லை.

திம்பம் சாலைப்போக்குவரத்துத்தடை உத்திரவு, தெங்குமரஹாடா கிராம வெளியேற்ற உத்திரவு,

மேகமலை வழக்கில்,மாநிலத்திற்கே போடப்பட்ட மேய்ச்சல் தடை உத்திரவு,

தேனி மலை கிராமங்கள் வெளியேற்ற உத்திரவு,

வனத்தில் உள்ள அந்நிய மற்றும் வேண்டாத தாவரங்களை அகற்றும் உத்திரவு,

உச்ச நீதி மன்றத்தின் வன எல்லையிலிருந்து ஒரு கி.மீட்டர் தொலைவிற்கான ணிஷிஞ் க்கான உத்திரவு .... ஆகிய எவற்றிலும் வன உரிமைச்சட்டம் கணக்கில் கொள்ளப்படவில்லை.

இந்த வழக்குகளெல்லாம் நீதி மன்றத்தில் நடந்த போது...

அங்கு பழங்குடியினர் நலத்துறையின் வழக்கறிஞர்கள் இருந்தார்களா?

வழக்கை அறிந்தார்களா?

வன உரிமைச்சட்டத்திற்கு மாறானது எனச் சுட்டிக் காட்டினார்களா?

அவர்களாவது சட்டத்தை புரிந்திருந்தார்களா?

இத்தகைய நெருப்பு வளையத்திற்குள் நின்றுதான் பழங்குடியினர் நலத்துறை வன உரிமைச்சட்டத்தை அமலாக்க வேண்டிய நிலையில் உள்ளது.

தொடர்புக்கு: **9443082372**



எஸ். தோதாத்ரி

தத்துவார்த்தம் 33



# சைவ சித்தாந்தம்

**இந்திய கருத்துமுதல்வாதத் தத்துவங்களில் காலத்தால் பிந்தியது சைவசித்தாந்தம். இது சங்கரர், ராமானுசர், மத்துவர், சமணர்கள், பௌத்தர்கள் ஆகியோர் உருவாக்கிய தத்துவங்கள் எல்லாவற்றிற்கும் பிந்தியது. ஆகையினால் மேலே கூறப்பட்ட தத்துவவாதிகளின் பல கருத்துக்கள் இடம்பெறவும் செய்துள்ளன. இத்தத்துவம் கி.பி. 13, 14 ஆகிய நூற்றாண்டளவில் உருவானது. இதனை தமிழ் நாட்டிற்கே உரித்தான தத்துவம் என்றும் கூறுவர்.**

சங்க இலக்கியத்தில் சிவபெருமானைப் பற்றி நேரடியாக எதுவும் கூறப்படவில்லை. ஆனால் இரண்டு இடங்களில் சிவனைப் பற்றியுள்ள குறிப்பு உள்ளது. பொதுவாக லிங்க வணக்கம் தமிழ்நாட்டில் பரவலாக இருந்து வந்துள்ளது. இவற்றை வைத்துக்கொண்டு சைவசித்தாந்தம் தமிழ்நாட்டிற்கே உரித்தானது என்று கூறுவர்.

சிவ வணக்கம் இந்தியாவில் எல்லா இடங்களிலும் இருந்து வந்துள்ளன. காஷ்மீரத்தில் ஒரு வகை சைவம் இருந்தது. கன்னட தேசத்தில் வீரசைவம் என்று இருந்தது. ஆனால், சைவத்திற்கு என்று ஒரு தத்துவம் உருவானது தமிழ்நாட்டில் மட்டும் தான் என்பதை மறுக்க முடியாது. இது அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகியவற் றிற்கும் பொருந்தும். ஏனென்றால் இவற்றை உருவாக்கியவர்கள் தென் நாட்டைச் சேர்ந்தவர்கள். வட இந்திய அளவில் இவர்களைப் போன்ற தத்துவவாதிகள் தோன்றவில்லை. இந்திய ஆன்மீகவாதத் தத்துவங்கள் அனைத்தும் வேதங்களை அடிநாதமாகக் கொண்டு தோன்றியது. சைவசித்தாந்தம் வேதங்களை ஏற்றுக் கொள்கிறது.

இதுதவிர சைவசித்தாந்தம் ஆகமங்களையும் ஏற்றுக் கொள்கிறது. தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் ஆகியவற்றையும் ஏற்றுக்கொள்கிறது. காலத்தால் பிந்தியதாகையால் இதிலிருந்து பல புதிய தகவல்களை பெற முடியும்.

**சைவசித்தாந்தம் அதற்கு மாற்றான தத்துவங்களை மறுத்துப் பேசி விட்டு அதன் தத்துவத்தை முன்வைக்கிறது. இவ்வாறு மறுத்துப் பேசும் பகுதிக்கு பரபக்கம் என்று பெயர். இதிலிருந்து இது உருவான காலத்திலிருந்த தத்துவங்களில் பல அம்சங்களை நாம் தெரிந்து கொள்ள முடியும். இதை வைத்துக் கொண்டு தான் பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் பரபக்க உலகாயதம் என்ற கட்டுரையை எழுதியுள்ளார்.**

சைவசித்தாந்தம் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்ட தத்துவம் சிவன் அல்லது இறைவன் நிர்மலமானவன். ஆனால் உலகத்தை தோற்றுவிப்பவன் அவனே. அவ்வாறு தோற்றுவிக்கும்போது அவன் எந்த மாறுதலும் அடைவதில்லை. சைவ சித்தாந்திகள் இறைவனைப்பற்றி எழுதுகின்றனர். இறைவனுக்கு எட்டு குணங்கள் உள்ளன என்று கூறுவர்.

இறைவனுக்கு அடுத்த நிலையில் உள்ளவை ஆன்மாக்கள் அல்லது உயிர்கள். இவை இறைவனது அம்சம் கொண்டவை. இந்த ஆன்மாக்கள் தங்கள் குறைகளை நீக்கி இறைவனோடு ஐக்கியமாவது முக்தி என்று பெயர். இதற்கு ஆன்மாக்கள் முயற்சிக்கவும் வேண்டும். அதே சமயத்தில் இறைவனது அருளும் இவற்றிற்கு வேண்டும். இந்த ஆன்மாக்களை பசு என்பர். இவற்றின் தன்மை என்னவென்று கேட்டால் இவை எங்கே இருக்கின்றனவோ அவை போன்று இவை மாறுபடும். இதற்கு சார்ந்த வண்ணம் இருத்தல் என்று பெயர். இது ஆன்மாக்களை பல அழுக்குகள் பற்றி உள்ளன. அவை ஆணவம், கன்மம், மாயை ஆகியவையாம். இந்த மூன்றையும் சேர்த்து பாசம் என்று கூறுவர். இவை செப்புப் பாத்திரத்தின் மீது களிம்பு படர்ந்திருப்பது போன்றது ஆகும். இவற்றிற்கு மலங்கள் என்ற பெயர் சைவசித்தாந்தத்தின் உள்ளன. இவற்றில் ஆணவம் ஆன்மாவோடு சேரும்போது உலகத் தொடர்பு ஏற்படுகிறது. கன்மம் என்பது வினைப் பயன்களைக் குறிக்கும். ஆன்மாக்கள் இந்த வினைப்பயன்களை நீக்க பிறவி எடுத்தாக வேண்டும். மாயை உண்மையை மறைப்பது போன்ற ஒரு சக்தி. இவை சைவ சித்தாந்தத்தின் மிக முக்கியமான அம்சங்களாகும்.

மேலே கூறப்பட்ட விஷயங்களை பதி, பசு, பாசம் என்று அழைப்பார். இவற்றை கூர்மையாக கவனித்தால் பாசம் என்பது பொருள் சம்பந்தமானது. மற்ற இரண்டும் ஆன்மா சம்பந்தமானவை. பொருள் சம்பந்தமானவற்றை விட்டுவிட்டு, ஆன்மாவை நோக்கிச் செல்வது பொருள் முதல்வாதத்தை மறுக்கும் போக்காகும். கைலாசபதி அவர்கள் இதனை பேரரசும், பெரும் தத்துவமும் என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், சைவ சித்தாந்தம் ஆகியன தமிழ்நாட்டில் கி.பி. 8ஆண் நூற்றாண்டு தொடங்கி 14 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் தோன்றியது. சங்கரர் அவர் காலத்தில் சமுதாய நிலைமைகளின் தாக்கத்தால் அவரது தத்துவத்தை அமைத்தார். நிலப்பிரபுத்துவ அமைப்பின் குறைகளைக் கண்ட அவர் முற்றிலுமாக உலகத்தை மறுத்தார். சங்கரருக்கு எந்தப் பேரரசின் ஆதரவும் கிடையாது. இராமானுசர் காலத்தில் தமிழ்நாட்டில் நிலப்பிரபுத்துவம் இருக்கமடைந்தது. குறிப்பாக சோழப் பேரரசு சைவத்தை ஆதரித்தது. வைணவத்திற்கு பெரிய அரசர்கள் ஆதரவு கிடையாது. நிலபிரபுத்துவ மத்தியதர வர்க்கம் அதனை ஆதரித்தது. அதனால்தான் ராமானுசர் கடவுளையும் மறுக்காமல், ஆன்மாக்களையும் மறுக்காமல், சடப் பொருளையும் மறுக்காமல் மூன்றையும் இணைத்துப் பேசுகிறார். சைவ சித்தாந்திகள் பேரரசின் ஆதரவைப் பெற்றவர்கள். எனவே அவர்கள் பதி என்பதை மிக உயர்ந்த இடத்தில் வைக்கிறார்கள். ஆன்மாக்களாகிய மக்களை பதி அல்லது அரசனுக்கு உட்பட்டவர்களாக வைக்கிறார்கள். இம்மக்கள் பொருள் உலகத்தில் இருப்பவர்கள். ஆகையினால் பொருள் உலகை பாசம் என்பதில் அடக்குகிறார்கள். எனவே பதி, பசு, பாசம் என்பது அரசன், மக்கள், பொருள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக இடம்பெறுகின்றன எனக் கூறலாம். ஏனென்றால் சமுதாயச் சூழலுக்கு அப்பாற்பட்ட எந்த கருத்தியல் வடிவமும் கிடையாது என்பது மார்க்சியம்.

தொடர்புக்கு: 98947 83657

# ஒன்றிய அரசு தேசிய கல்விக் கொள்கையை திரும்பப் பெற வேண்டும்

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கல்வியை முழுமையாக ஒன்றியப் பட்டியலுக்கு கொண்டும் செல்லும் நோக்குடனும், கல்வியில் மாநில உரிமைகளை பறிக்கும் வகையிலும் , இந்தியாவை “இந்துராஷ்டிரமாக” மாற்றும் நோக்குடனும்,கல்வியை முழுமையாக வணிகமயமாக்குதல், கார்ப்பரேட் மயமாக்குதல் என்ற நோக்கங்களுடனும் தேசிய கல்விக்கொள்கை 2020 உருவாக்கப்பட்டு ஒன்றிய அரசால் நடைமுறை படுத்தப்படுகிறது. இந்தி சமஸ்கிருத திணிப்பு, இந்துத்துவ ஒற்றை பண்பாட்டை திணித்தல், சாதி அடிப்படையிலான பரம்பரைத் தொழிலை திணிக்கும் முயற்சி போன்ற நோக்கங்கள் இக்கல்விக் கொள்கையின் மறைமுக நோக்கங்களாக உள்ளன. இது இந்தியாவின் பன்முகத் தன்மைக்கும், ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கும் எதிரானதாகும்.

எனவே, இக்கல்விக் கொள்கையை நடைமுறை படுத்துவதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

மருத்துவக் கல்வியை இந்துத்துவ மயமாக்கும் நோக்குடனும், நவீன அறிவியல் மருத்துவத்தை ஒழித்துக் கட்டும் நோக்குடனும் ஒன்றிய அரசு செயல் பட்டு வருகிறது. மருத்துவத் துறையில் அறிவியலுக்குப் புறம்பான மூடக் கருத்துக்களை திணிக்கிறது. ஆயுர்வேதா மருத்துவ முறையை இந்து மருத்துவ முறை என முத்திரை குத்தி அதனுடன் நவீன அறிவியல் மருத்துவத்தை இணைக்கும் முயற்சியை மத்திய அரசு மேற்கொள்கிறது. மருத்துவ அறிவியலில் இந்துத்துவ அடையாள அரசியலை திணிப்பது, நமது நாடு மருத்துவ அறிவியல் தொழில் நுட்பத்தில் இதர வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக முன்னேறுவதை தடுத்துவிடும்.எனவே நாட்டு மக்களின் நலவாழ்விற்கு எதிரான இத்தகைய ஆபத்தான முயற்சியை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

மருத்துவ மாணவர்களின் உள்ளங்களை காவிமயமாக்கும் நோக்குடன் “ சரக் சபத்” என்ற சரகர் உறுதிமொழியை திணித்ததை தேசிய மருத்துவ ஆணையம்(ழிவிசி) திரும்பப் பெற்றுள்ளது. சரக் சபத் அல்லது ஹிப்போகிரட்டிக் உறுதி மொழி இனி இடம் பெறாது. மருத்துவர் உறுதிமொழி ( றிலீஹ்ஃவீநீவீணீஸீஃ’ ஜீறீமீபீரீமீ) தான் இடம் பெறும் என தேசிய மருத்துவ ஆணையம் வரைவு அறிக்கையில் அறிவித்துள்ளது வரவேற்புக்குரியது.

மருத்துவர்கள், மருத்துவ மாணவர்களுக்கான உறுதி மொழி மதச்சார்பற்றதாகவும், அறிவியல் மனப்பான்மையையும், அறிவியல் ரீதியான உலகப் பார்வையையும், சேவை மனப்பான்மையையும் வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆன்மீகத்தையோ,




மூடநம்பிக்கைகளையோ, பிற்போக்கான கருத்துக்களையோ உள்ளடக்கியதாக இருக்கக் கூடாது.

தமிழகத்தில் 3800 க்கும் மேற்பட்ட தொடக்கப்பள்ளிகளில் ஓர் ஆசிரியர் மட்டுமே பணியில் இருப்பது கவலை அளிக்கிறது. இது கல்வித்தரத்தை மிகவும் பாதிக்கும். எனவே, உடனடியாக போதிய ஆசிரியர்களை தமிழ்நாடு அரசு நியமிக்க வேண்டும்.

பெண்களின் சட்ட ரீதியான திருமணவயதை 21 ஆக உயர்த்திட ஒன்றிய அரசு முயல்கிறது. இது பல்வேறு மோசமான சமூகப் பொருளாதார மற்றும் மருத்துவ ரீதியான பிரச்சனைகளை உருவாக்கிவிடும்.

இது சாதிய மதவாத ஆணாதிக்க பிற்போக்கு சக்திகளின் கரங்களில் மோசமான ஆயுதமாக மாறிவிடும்.

ஏற்கனவே இந்தியாவில் பெண்களின் சராசரி திருமணவயது 22.5 ஆக உள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார வளர்ச்சி, முற்போக்கு பண்பாட்டு மாற்றங்கள் இதற்குக் காரணம். கல்வி பெற்று, வேலை வாய்ப்புகளை பெற்று ஆண்களுக்கு நிகராக சமூக உற்பத்தி நடவடிக்கைகளிலும் பங்கேற்க வேண்டும் என பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வும் பெண்களின் திருமண வயது உயர காரணமாக அமைந்துள்ளது.

எனவே, பெண்களுக்கு ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்விவரை இலவசமாக கல்வி வழங்கிட வேண்டும். பெண்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்ய வேண்டும். அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகளில் 50% இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டும்.

பெண்களின் சமூகப் பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்வதின் மூலம் ,பெண்களின் திருமண வயது தானாகவே தற்போது அதிகரித்து வருவது போல் மேலும் உயரும்.

எனவே, அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்ட ரீதியான பெண்களின் திருமண வயதை உயர்த்தும் நடவடிக்கை, சட்டத்திற்கு புறம்பான கருக்கலைப்புகளையும் , அதன் மூலம் பெண்களின் உயிரிழப்புகளையும், பல்வேறு சமூகப் பொருளாதாரச் சிக்கல்களையும், ஆணாதிக்கத்தையும் வலுப்படுத்தும் . ஆகவே, சட்ட ரீதியாக பெண்களின் திருமண வயதை 21 ஆக உயர்த்தும் முயற்சியை உடனடியாக ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

இந்தியாவின் வழிபாட்டுத் தலங்கள் என்பவை, நமது பண்பாட்டுச் சின்னங்கள்.நமது இந்திய மக்களின் பண்பாட்டு அங்கங்கள். எனவே, அனைத்து மத வழிபாட்டுத் தலங்களும் 1947 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி எந்த நிலையில் இருந்தனவோ ,அதே நிலையில் பராமரிக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். இந்துத்துவ மத வெறி சக்திகள் பாபர் மசூதியை தகர்த்தது போல் , சிறுபான்மை சமூகத்தினரின் வழிபாட்டுத் தலங்களை தகர்த்திட முயற்சிகளை மேற்கொள்கின்றன. சிறுபான்மை சமூகத்தினரின் வழிபாட்டுத்தலங்களில் புதிய சர்ச்சைகளை உருவாக்கி, அவற்றை தகர்த்திட திட்டமிடுகின்றன. இது நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கு, மத நல்லிணக்கத்திற்கு, பன்முகத்தன்மைக்கு, சகிப்புத்தன்மைக்கு எதிரானது. இந்தியாவை “இந்துராஷ்டிரமாக” மாற்றிட மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகளை தடுத்திட ஒன்றிய அரசும்,மாநில அரசுகளும் கடும் நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி இயக்கங்கள் இத்தகைய போக்கிற்கு எதிராக ஒன்றுபட்டு போராட வேண்டும். அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாத்திட மத்திய மாநில அரசுகளை வலியுறுத்த வேண்டும். 1991 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட வழிபாட்டுத்தலங்கள் பாதுகாப்புச் சட்டத்தை ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மதித்து நடக்க வேண்டும்.

உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள, அணு ஆயுதப் போரை உருவாக்கும் ஆபத்துள்ள ரஷ்ய உக்ரைன் போரை நிறுத்தவும், உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள நேட்டோவை கலைக்கவும், அமைதிவழியில் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் உலக நாடுகள் முயல வேண்டும். அமெரிக்காவும், நேட்டோ கூட்டணி நாடுகளும் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கி எரியும் தீயில் எண்ணெய்யை வார்க்கக் கூடாது.

கொரானாவும், புதிய வகை கொரானா தொற்றும் அதிகரிக்கும் வேளையில், கொரானா தடுப்பூசி 1.6 கோடி நபர்கள் போடாமல் தமிழ்நாட்டில் இருப்பது கவலை அளிக்கிறது. தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வை அதிகப்படுத்துவதுடன் ஊக்கப் படுத்த வேண்டும்.

பூஸ்டர் தவணை கொரானா தடுப்பூசி இலவசமாக போட மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்க வேண்டும். குழந்தைகளுக்கு தடுப்பூசி மற்றும் பூஸ்டர் தவணை ஊசிகளை விரைந்து வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் டாக்டர் த.அறம், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கமிட்டி மாநாடுகள்




**சென்னிமலை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னிமலை ஒன்றிய 35வது மாநாடு சென்னிமலை கட்சி அலுவலகத்தில் மேலப்பாளையம் என்.சின்னுசாமி நினைவரங்கில் என்.ஆறுமுகம், எல்.கமலம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்ததோழர் எம்.அப்புசாமி கொடியேற்றிவைத்தார். சென்னிமலை நகரச் செயலாளர் எஸ்.ராஜ்குமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார்.

ஒன்றியச் செயலாளர் மா.நாகப்பன் வேலையறிக்கையை முன்வைத்துப் பேசினார். விரைவில் ஒன்றியக்குழு கூடி நிர்வாகிகளை தேர்வு செய்வதென்றும், அதுவரை தோழர் எம்.நாகப்பன் ஒன்றியச் செயலாளர் பொறுப்பை தொடர்ந்து கவனிப்பதென்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மாநில செயற்குழு உறுப்பினர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. மாநாட்டை நிறைவு செய்து சிறப்புரை ஆற்றினார்.

பெருந்துறை வருவாய் வட்டத்திலிருந்து சென்னிமலை ஒன்றியத்தை பிரித்து சென்னிமலை வருவாய் வட்டத்தை (தாலுக்கா) ஏற்படுத்த வேண்டும் என தமிழக அரசையும், வருவாய் துறையையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

சென்னிமலையில் செயல்பட்டு வரும் மேம்படுத்தப்பட்ட சமுதாய சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் என்றும், ஈங்கூர் மற்றும் 1010 நெசவாளர் காலனியில் புதிதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்றும் தமிழக அரசையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையையும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்கள் உள்ளிட்ட ஏழை, எளிய மக்கள் நிறைந்த சென்னிமலை பகுதியில் அரசு தொழிற்பயிற்சி கல்லூரி (பாலிடெக்னிக்) அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்மாநாடு தமிழக அரசை வலியுறுத்துகிறது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**வாடிப்பட்டி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை வாடிப்பட்டி ஒன்றிய 25 வது மாநாடு சோழவந்தான் புறநகர் பகுதியில் உள்ள பிருந்தாவனம் மஹாலில், ஆசைராஜா, சீனிவாசன், பரணிதரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் முல்லை எம்.பரமசிவம் கட்சி கொடியினை ஏற்றி வைத்தார். ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் மூர்த்தி துவக்கவுரையாற்றினார். ஒன்றிய பொறுப்புச் செயலாளர் தவமணி வேலையறிக்கையினை முன் மொழிந்தார். தமிழ்நாடு பழங்குடியினர் சங்கம் மாநில நிர்வாக குழு உறுப்பினர் சரவணன், ஒன்றிய குழு உறுப்பினர் இரவிவர்மா, ஏஐடியுசி புறநகர் துணைப் பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இம்மாநாட்டில் ஒன்றிய செயலாளராக சுதாகர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் நிறைவுரையாற்றினார். இறுதியாக சுந்தரம் நன்றியுரையாற்றினார்.

**அஸ்தம்பட்டி :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அஸ்தம்பட்டி மண்டல 3வது மாநாடு ஏ.விமலன், பி.ராமசாமி நினைவு அரங்கில் ஏ.மாதையன், ஆர்.அய்யாக்கண்ணு, எஸ்.ராமமூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை ஏ.அருணாசலம் ஏற்றி வைத்தார். மகாகவி பாரதியார் சிலைக்கு கே.ஆர்.ஆண்டியப்பன் மாலை அணிவித்தார். மாநில குழு உறுப்பினர் ப.பரமசிவம் மாநாட்டை துவக்கி வைத்தார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.முனுசாமி, ஜெ.கனியன் பூங்குன்றன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். வேலை அறிக்கையை மண்டல செயலாளர் ஆர்.எல்.முத்துராஜகோபால் முன்வைத்தார்.

செயலாளராக எஸ்.முகமது ஷபி, துணைச்செயலாளராக எம்.கே.விஜய், பொருளாளராக ஆர்.எல்.முத்துராஜகோபால் தேர்வு செய்யப்பட்டனர்.

அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து நோயாளிகளுக்கு வசதிகளை செய்து கொடுக்கவும், நோயாளிகளுக்கு உதவிடவும், வழிகாட்டவும் மாவட்ட நிர்வாகத்தையும் மருத்துவமனை நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்கிறது.

சேலம் செவ்வாய்பேட்டையில் உள்ள தாய்சேய் நல விடுதியை அதை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி 24 மணி நேரமும் மருத்துவ சேவைகளை செய்ய மருத்துவர்களையும், பணியாளர்களையும் நியமித்து கர்ப்பிணிகளுக்கு உதவிட வேண்டும்

மாநகராட்சியில் உள்ள துலீய்மை பணியாளர்களுக்கு அவர்களின் உடல்நலம் கருதி, சுகாதாரம் கருதி முகக்கவசங்கள், கையுறைகள், காலணிகள், சீருடைகள் மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

மின்கம்பி புதைவட பணிகளில் மின்சார வாரியம் செய்த பெரும்பாலான சந்திப்பு பெட்டிகள் பாழடைந்து உள்ளன. மின்சார வாரியம் இதை ஆய்வு செய்து மக்களுக்கு எந்தவிதமான மின் விபத்து ஏற்படா வண்ணம் செய்து மக்களை பாதுகாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட செயலாளர் ஏ.மோகன் மாநாட்டை நிறைவு செய்து உரையாற்றினார்.




**அரியலூர்:** மாவட்டத் தலைநகர் அரியலூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரியலூர் ஒன்றிய 12வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு ந.கோவிந்தசாமி தலைமை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் கலந்துகொண்டு இன்றைய அரசியல் நிலையை விளக்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் இரா.உலகநாதன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். அரசியல், வேலை அறிக்கை, அமைப்பு நிலை அறிக்கை ஒன்றிய செயலாளர் சார்பாக மாவட்டத் துணைச் செயலாளர் த.தண்டபாணி முன் வைத்தார். திருமானூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் ஜி.ஆறுமுகம், தற்போதைய ஒன்றியச் செயலாளர் மு.கனகராஜ் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்.

ஒன்றிய செயலாளராக து.பாண்டியன், துணைச் செயலாளர்களாக மொ.மணி, ரா.சுப்பிரமணியன்,பொருளாளராக டி. ராயதுரை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

சிமெண்டு ஆலைகளுக்காக தோண்டி காலாவதியான சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள், காடுகளாக, மேய்ச்சல் நிலங்களாக அல்லது ஏரி, குளங்களாக மாற்றப்பட வேண்டும்.


அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், மாரடைப்பு, பாம்பு கடி, விசமருந்துதல், தலைக்காயம் என உயிர்காக்கும் உயரிய சிகிச்சை வசதிகள் சிறப்பு மருத்துவர்கள் துரிதமாக ஏற்பாடு செய்திட வேண்டும்.

ஜனத்தொகை,குடியிருப்பு பெருக்கத்திற் கேற்ப அரியலூர் நகராட்சியில் தேவையான தூய்மைப் பணியாளர்கள், நிரந்தரப் பணியாளர்களாக ஒப்பந்தப் பணியாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிரப்பப்பட வேண்டும்.

அரியலூர் வழியாக செல்லும் அனைத்து ரயில்களும், அரியலூரில் நின்று சென்றிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தருமபுரி :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி வட்டார 19 வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு வட்டாரக்குழு உறுப்பினர் பெருமாள் தலைமை வகித்தார். மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கொடியை இராமகிருஷ்ணன் ஏற்றினார்.

மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாவட்டச் செய்லாளர் எஸ்.தேவராசன்,மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி, மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.



தருமபுரி வட்டார செயலாளராக எம்.முனுசாமி, துணை செயலாளராக வேலுசாமி, பொருளாளராக மனோகரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தருமபுரி நகர பகுதிக்கு பஞ்சப்பள்ளி குடிநீரும்,அனைத்து பகுதிகளுக்கும் ஒகேனக்கல் குடிநீர் சீராக வழங்க வேண்டும்.

ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்ய வேண்டும்.நீண்ட நாட்களாக கிடப்பில் போடப்பட்டுள்ள சிப்காட் தொழிற்பேட்டை உடனடியாக துவங்கவேண்டும்.தருமபுரி குண்டல்பட்டியில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டும்.தருமபுரி மாவட்டத்தில் அனைத்து ஏரிகளிலும் ஒகேனக்கல் உபரி நீர் திட்டத்தை செயல்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த வேண்டும்.விவசாயம் மற்றும் பொது மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன




**பாப்பிரெட்டிப்பட்டி :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாப்பிரெட்டிப்பட்டி வட்டார 12 வது மாநாடு வட்டார துணை செயலாளர் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார்.

மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கமலாமூர்த்தி ஆகியோர் வாழ்த்தி பேசினார். வட்டார செயலாளராக சுப்ரமணி, துணை செயலாளராக சந்திரன், பொருளாளராக மணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் முறையாக வழங்க வேண்டும். மஞ்சவாடியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும்.பொம்மிடி ரயில்வே ஸ்டேசன் முன்பு ஆக்கிரமிப்பு இடங்களை அகற்ற வேண்டும். விவசாயிகள் மற்றும் பொது மக்கள் வசதிக்காக பொம்மிடி தினசரி காய்கறி மார்க்கெட் பகல் நேரங்களில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

**காரிமங்கலம்:** இந்தியக் கம்யூனிஸ் கட்சியின் காரிமங்கலம் வட்டார மாநாடு வட்டார பொருளாளர் முனியப்பன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ். தேவராசன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், வட்டார செயலாளர் கோபால் வாழ்த்தி பேசினர். தருமபுரி – கிருஷ்ணகிரி செல்லும் அனைத்து பேருந்துகளும் காரிமங்கலம் நகருக்குள் செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். காரிமங்கலத்தில் இருந்து அனுமந்தபுரம்,சாவடியூர் வழியாக புதிய வழித்தட பேருந்து தொடங்க வேண்டும். காரிமங்கலத்தில் இருந்து நாகனம்பட்டி,தும்பலஅள்ளி டேம் வழியாக புதிய வழித்தட பேருந்து வசதியை ஏற்படுத்த வேண்டும்.காரிமங்கலம் மருத்துவமனையை தரம் உயர்த்தி கூடுதல் படுக்கை வசதியும்,கூடுதல் மருத்துவர்களை நியமித்து 24 மணி நேரம் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வட்டார செயலாளராக வினோத், துணை செயலாளராக கிருஷ்ணன், பொருளாளராக முனியப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**எஸ்.எஸ்.குளம்:** கோவை மாவட்டம் எஸ்.எஸ்.குளம் ஒன்றிய 14வது மாநாட்டிற்கு ஆர்.ரங்கராஜ், சி.சுப்பையன், எம்.மாரிமுத்து ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக்குழு உறுப்பினர் பி.நாராயணசாமி அரசியல் நிலைமைகள் குறித்து பேசினார்.

ஒன்றிய செயலாளராக சி.மோகன், துணைச் செயலாளராக சி.சுப்பையன், பொருளாளராக சி.விஸ்வநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கிளை மாநாடுகள்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகர கிளை மாநாடு நடைபெற்றது. இரா.கஜேந்திரன் தலைமை வகித்தார்.

மாவட்டசெயலாளர் கே.எஸ்.அப்பாவு, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆ.வளர்மதி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட செயலாளர் மா.வெங்கடேசன், வட்டச் செயலாளர் கருணாநிதி, விவசாயத் தொழிலாளர் சங்கம் முருகேசன், வட்டாரச் செயலாளர் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க சிங்காரவேலன், வட்டக்குழு உறுப்பினர் மஞ்சப்பன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று விளக்கவுரை ஆற்றினர்.

# சங்கே முழங்கு!



## இதயங்களிலே வீடுகள்...!



அதிகாரத்தை அடைய
அவர்கள்
கடப்பாரைகளோடு
அலைந்தார்கள்...
இப்போது
புல்டோசர்களால்
போர் தொடுக்கிறார்கள்..

அவர்கள்
வீடுகளை
இடிக்கவில்லை..
ஜனநாயகத்தைத்தான்
இடிக்கிறார்கள்...

அரைடவுசர்கள்
அணிந்தபோதே
அன்பு, கருணை
இவற்றோடு
அறிவையும்
களைந்து விட்டவர்கள்,
புல்டோசர்களோடு
புறப்பட்டிருக்கிறார்கள்..

குஜராத்தில் கொல்லப்பட்ட
முஸ்லிம்களின் ரத்தம்தான்
அவர்களது
புல்டோசர்களை இயக்கும்
எரிபொருளாக இருக்கிறது..

போக்கிலிகள்
வடிவமைக்கும்
புதிய இந்தியாவில்
ஜனநாயக வழியில்
போராடினால்
வீடுகள் இடிக்கப்படும்..

நீதியைக்
கேட்டாலும்
கொடுத்தாலும்
உயிர்
பறிக்கப்படும்...

மதத்தைக்
கழுமரமாக்கிய
இந்தக்
கழுகுகள்
மனிதத்தை அதில்
அன்றாடம்
ஏற்றுகின்றன..
தமது
பதவிப் பசிக்காக..


ஜனநாயகத்தை
இவர்கள்
சிரச்சேதம்
செய்தார்கள்..
அதனால்
உலக அரங்கில்
இந்தியா
தலைகுனிந்து நிற்கிறது..


தன்னை ‘யோகி’யாய்
காட்டிக் கொள்பவன்
யோக்கியனாய்
இல்லை..
எனவே
ஒரு மாநிலமே
நிம்மதியின்
மயானமாகி விட்டது..

அன்பு சகோதரி
அஃப்ரீன் பாத்திமாவே
அராஜக மிருகங்களை
எதிர்த்து நிற்கும்
உன் அஞ்சாமைக்கு
வாழ்த்துகள்..!

வெறிபிடித்த
மிருகங்கள்
உன் வீட்டை
இடித்திருக்கலாம்..
மனிதநேயம்
கொண்டோரின்
இதயங்கள் தோறும்
உனக்கு
ஒரு
வீடு கட்டப்பட்டுள்ளது..!

– ஆரூர்புதியவன்





# மதச்சார்பின்மை, இந்தியக் கலாச்சாரத்தின் உள்ளார்ந்த பண்பு

**புதுடெல்லி மண்டி ஹவுஸ், மாதா சுந்தரி பெண்கள் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஆய்வான் இ ஹாலிப் அரங்கில் மே 29ல் நடைபெற்ற அனைத்திந்திய சான்றோர்கள் (இன்டலெக்சுவல்ஸ்) கூட்டத்தில் 24 மாநிலங்களிலிருந்து சுமார் 600 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.**

**-அஜீஸ் பாஷா**

இக்கூட்டத்திற்கான முன்னேற்பாடுகளை மேனாள் மக்களவை உறுப்பினரும், அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் மேனாள் தலைவருமான பேராசிரியர் ஆதீப் செய்திருந்தார். விவாதங்களில் நமது அரசியலமைப்பின் வலிமையாக விளங்கும் தேசத்தின் பன்மைத்துவம் மற்றும் ஒற்றுமை உட்பட தேசிய முக்கியத்துவம் உடைய பல பிரச்சனைகள் இடம் பெற்றன. அவற்றில் சிறுபான்மையின மக்கள் மீது அதிகரித்துவரும் பாதுகாப்பின்மை தொடர்பான பிரச்சனைகளும் அடங்கும்.

சிறுபான்மையினங்களுடன் சமூக மற்றும் பொருளா தார ரீதியாகப் பின்தங்கிய பகுதியினர்கள் மீதும் குறிவைக்கப் படுவதுடன் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி எழுதும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. அனைத்தையும் உள்ளடக்கி பேராசிரியர் ஆதீப் மசூத் அளித்த எதிர்காலக் கண்ணோட்ட நோக்கு அறிக்கையைப் பிரதிநிதிகள் ஒருமனதாக ஏற்றனர்.

ஆளும் சக்திகளால் தூண்டிவிடப்பட்டு அதிகரிக்கும் வகுப்பு வாத உணர்வுகளைப் பரிசீலிப்பது கூட்டத்தின் முக்கிய நோக்கம். சமீப ஆண்டுகளில் இந்தியா நிரந்தரமான வகுப்புவாத ஜுரத்தில் இருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. பசு பாதுகாப்பு குண்டர்கள் மற்றும் மாட்டுக் கறி உண்பது, லவ் ஜிகாத் போன்ற பெயர்களில் அடித்துக் கொல்வதென முஸ்லீம்களைக் குறிவைத்துப் பிரச்சனைகள் உண்டாக்கப்படுகின்றன.

**தேசியக் குடிமக்கள் பதிவேடு, குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு (NRC-CAA) எதிராக அமைதியாகக் கண்டன இயக்கம் நடத்தியவர்களைத் தேச விரோதிகள் என முத்திரை குத்தப்பட்டனர். ஹிஜாப், ஹலால் இறைச்சி மற்றும் ஆஸான் (தொழுகைக்கான அழைப்பு) முதலியவற்றின் மீது தேவையற்ற உணர்வுகள் தூண்டிவிட்டு, நிலைமையைத் தீவிர மோதலாக மாற்ற அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். காஷ்மீர் ஃபைல்ஸ் சினிமா அல்லது தரம் சன்சத் மாநாடுகளில் இனஅழிப்புக்கான வெறிக் கூச்சல் மற்றும் இவற்றைக் கண்டுகொள்ளாது கள்ள மௌனம் காக்கும் மாநில அரசுகள் என இவற்றின் தாக்கம் ஏற்கனவே நொறுங்கி விழும் நிலையில் இருப்பதை இன்னும் மோசமான அவலமாக்குகின்றன.**

இச்சூழ்நிலையில் இக்கூட்டம், நமது நாட்டின் அரசியலமைப்பு விழுமியங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தீவிர, இரக்கமற்ற மதவாத சக்திகளைத் எதிர்த்துப் போரிடச் செயல்திட்டம் வகுக்க வேண்டும். இன்று மதச்சார்பின்மை மிகவும் ஏளனத்திற் குரிய சொல்லாகி விட்டது. ஆனால் இந்த அனைத்துப் பின்ன டைவுகளுக்குப் பிறகும், நல்ல வேளையாக, இந்திய தேசம் மிக ஆழமாக மதச்சார்பின்மையில் நம்பிக்கை கொண்டுள்ளது.

சில கட்சிகள் ‘மென்மையான இந்துத்துவா’ போக்கை நாடி தங்களை உண்மையான இந்து கட்சியாகக் காட்டிக்கொள்ள முயற்சிப்பது துரதிருஷ்டமே.

ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை இணைந்து வலுப்படுத்த மதசார்பற்ற மற்றும் விடுதலையை நேசிக்கும் குடிமக்களை ஈடுபடுத்தும், இந்தத் தருணத்தின் தேவை, பன்முக அணுகுமுறையை மேற்கொள்வதுதான். மதம், ஜாதி மற்றும் இனம் என்ற வேறுபாடின்றி, நாட்டின் அனைத்து ஒடுக்கப்பட்ட குழுக்களின் முழு ஆதரவும் உறுதிப்பாடும் வலிமைப்படுத்தப்பட வேண்டும். அந்த இலக்கை அடைய மூன்றடுக்கு ஆலோசனை ஏற்படுத்தப்பட வேண்டும்.

பேராசிரியர் மசூத் ஆதீப் ஒருங்கிணைப்புக் குழுவின் கன்வீனராக முன்மொழியப்பட, அதை ஏற்ற அவர் இரண்டு வாரங்களில் ஆலோசனைக் குழுவை அமைக்க உறுதியளித்தார். நாட்டின் மிக அடிப்படையான உணர்வைக் கொல்வதற்குக் காரணமான பாசிச சக்திகளைக் கண்டித்த ஒருங்கிணைப்பாளர் பேராசியர் மசூத் ஆதீப் உரையுடன் கூட்டம் தொடங்கியது. இந்து ராஷ்ட்டிரத்தை ஒன்றுபட்டு எதிர்க்க அறைகூவல் அழைப்பு விடப்பட்டது.

ஜம்மு காஷ்மீர் மேனாள் முதல்வர் ஃபரூக் அப்துல்லா, மேனாள் ஒன்றிய அமைச்சர்கள் சல்மான் குர்ஷீத் மற்றும் ரஹ்மான்கான், உபி மேனாள் ஆளுநர் அஜீஸ் குரேஷி, மேனாள் திட்டக்குழு உறுப்பினர் ஸையீதா ஹமீது, மேனாள் உயர்நீதிமன்ற நீதிபதியும் எம்பியுமான நீதியரசர் மசூதி, மற்றும் மக்களவை உறுப்பினர்கள் எஸ் ஆர்.பார்க் மற்றும் குன்வர் தனீஷ் சையீது; மாநிலங்களவை மேனாள் உறுப்பினர்கள் ஆஸீஸ் பாஷா மற்றும் அலி அன்வர்; பரேல்வி பிரிவு தலைவர், ஃபதேபுரி மசூதி இமாம் தௌஹீர் ராஸா; அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தரும் விபிகி கல்வி அறக்கட்டளை இனாம்தாருமான நஸீம் அகமது; அலிகார் பல்கலைக்கழக மேனாள் தலைவர் முகமது அஸாம், ஜாமியா மிலியா இஸ்லாமிய பல்கலைக்கழக ஸஃபூரா ஸர்க்கார் மற்றும் அசாம் முதல் காஷ்மீர் வரை பல்வேறு அறிவாளர்கள் கூட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள்.

ஃபரூக் அப்துல்லா பேசும்போது காஷ்மீரைப் பாக்கிஸ்தானுடன் இணைக்க வேண்டும் என பல்வேறு அழுத்தங்கள் இருந்தபோதும், ஷேக் அப்துல்லா அதற்கு மாறாகக் காஷ்மீரை மதசார்பற்ற இந்தியாவுடன் இணைப்பது என்ற முடிவில் உறுதியாக இருந்தார் என்பதை நினைவுறுத்தினார். எவ்வளவு பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தினரைக் காஷ்மீரில் நிலை நிறுத்தினாலும் அது பிரச்சனை முடிச்சை அவிழ்க்க உதவாது என்று எச்சரித்த அவர், அதற்கு மாறாகத் தேசத்தின் அரசு மக்களின் மனங்களை வெல்ல முயற்சிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் அண்டை நாடான பாக்கிஸ்தானுடன் உறவை மேம்படச் செய்யவும் அவர் வற்புறுத்தி வேண்டினார்.

மக்களை 80 : 20 என்ற விகிதாசாரத்தில் பிரிப்பதன் பொருள் 80 சதவீதமான நமது மக்கள் மதச்சார்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்று விளக்கமளித்த சல்மான் குர்ஷீத், தேசிய வாழ்வில் உள்ள வேறுபாடுகள் பரஸ்பர உரையாடல்கள் விவாதங்கள் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். ரஹ்மான்கான் இளைஞர்கள் மற்றம் பெண்களின் பிரதிநித்துவம் வலிமையாக்கப்பட வேண்டும் என வற்புறுத்தினார். அலிகார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் நஸீம் அலி நமது அணியில் மதசார்பற்ற இந்துகள் மற்றும் கிருஸ்துவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என அழுத்தமாக வேண்டினார். மேனாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக்குழு உறுப்பினருமான அஜீஸ் பாஷா, 2019 நாடாளுமன்ற தேர்தல்களுக்கு முந்தைய லோக்நிதி சர்வே அறிக்கையில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளே இந்துத்துவா அல்லது இந்து ராஷ்ட்டிராவுக்கு அளிக்கப்பட்டது என்ற புள்ளிவிபரத்தைச் சுட்டிக்காட்டி பேசினார்.

பாஜகவுக்கு ஆதரவாகக் கிடைத்த முடிவுகளுக்கு இலவசங்கள், மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற பொய்ப் பிரச்சாரமே காரணம். அதற்கு ஒத்தூதி தவறான சித்திரத்தை மக்கள் முன் வைத்த ஊடகங்களும் தவறான முடிவுக்குக் காரணமாயின. நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்தியா சென் ஆய்வின்படி நமது நாட்டின் மக்களில் ஆகப்பெரும் பகுதியினர் இன்னும் மதசார்பற்றவர்களே! அந்தக் கூற்று இன்னும் பொருத்தமானது என்பதுடன், பல நூற்றாண்டு காலம் முதலாக இந்தியர்கள் பின்பற்றும் பன்மைத்துவத்தையும், அவர்கள் எதிர்த்துக் கேள்வி கேட்காமல் எந்தத் தத்துவத்தையும் கண்மூடி ஆதரிப்பதில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ஏற்கனவே தாக்குதல்கள் நடக்கும் என எதிர்பார்த்தவாறே நமது அரசியலமைப்புச் சட்டம் இன்று மிகக் கடுமையான ஆபத்தில் இருக்கிறது. மிக ஏழையான பிரிவினர்களின், குறிப்பாக ஆக்கிரமிப்பு மற்றும் அனுமதி பெறாத கட்டுமானம் என்ற பெயரில் சிறுபான்மை முஸ்லீம்களின், சிறிய குடியிருப்புகளை இடித்துத் தரைமட்டமாக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாஜக நிர்வாகம் அப்பட்டமாகப் புல்டோசர்களைத் தவறாகப் பயன்படுத்துவது பாரதிய ஜனதா கட்சியின் மனிதத்தன்மையற்ற அணுகுமுறையை அம்பலப்படுத்துகிறது. டெல்லியில் இதே அளவுகோளைப் பிற காலனி குடியிருப்புகளில் பயன்படுத்துமானால் அவர்கள் 40 முதல் 50 லட்சம் மக்கள் வசிக்கும் 1731 சட்டவிரோதக் காலனிகளை இடித்து நிர்மூலமாக்க வேண்டியிருக்கும்.

எனவே, பாசிச இனப் பாகுபாட்டின் மனிதத் தன்மையற்ற இந்த ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாஜக வஞ்சகத் திட்டத்தை முறியடிக்க நாம் அனைத்து மதசார்பற்ற மற்றும் ஜனநாயகப் பிரிவுகளை ஒன்று திரட்ட வேண்டும். அப்போதுதான் இந்திய தேசத்தை நாம் முன்னோக்கி எடுத்துச் செல்ல முடியும்.

நன்றி நியூஏஜ், தமிழில்: **நீலகண்டன்**



ம.ராதாகிருஷ்ணன்

# கையால் துப்புரவு செய்
# மறுவாழ்வும் – அரச

**அரசின் மக்கள் நலத்திட்டங்களில் இந்தியாவில் கையால் துப்புரவு (Manual Scavenging ) வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத்தான் அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும். அந்த திட்டங்களில் மறுவாழ்வுக்கான திட்டம் அதிக முன்னுரிமை பெற்ற திட்டமாக கருதப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து பெரும் பகுதி பயன்படுத்தப்படாமல் இருப்பது மிகவும் அநீதியானது.**

2014–15 முதல் 2021–22 வரையிலான 8 ஆண்டுகளில், ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கைகளில் இத்திட்டத்திற்கு ரூ.1255 கோடி ஒதுக்கப்பட்டது. இது போதுமானதுதானா என்று நிதி ஒதுக்கியவர்கள் தங்கள் மனசாட்சியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நிலையில், 236 கோடி ரூபாய் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டது. அதாவது ஒதுக்கப்பட்டதில் 19% மட்டுமே உண்மையில் செலவிடப்பட்டது என்றால், இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்வது?!

அப்படியானால் கடந்த 8 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.1019 கோடி செலவிடப்படாமல் தொழிலாளர்களுக்கு மறுக் கப்பட்டது. சராசரியாக ஆண்டுக்கு 156 கோடியில் ஒரு குடும் பத்திற்கு ரூ. 2 லட்சம் வீதம், இந்தத் தொகையை முறையாகச் செலவிட்டிருந்தால், சுமார் 6000 குடும்பங்கள் ஆண்டுக்கு (அல்லது இந்த 8 ஆண்டுகளில் 48,000க்கு மேல்) மறுவாழ்வை அடைந்திருக்க முடியும்.

ஆண்டுக்கு சராசரியாக 156 கோடி ஒதுக்கீடு என்பது போதுமானதாக இல்லை என்றாலும் அந்த தொகையையாவது முழுமையாகச் செலவிட தேவையான அக்கறையை காட்டியிருந்தால் அது ஓரளவு பயனுள்ளதாக இருந்து இருக்கும். ஆனால் ஆண்டுக்கு ஆண்டு சரியான திட்டமிடல் இல்லாத நிச்சயமற்ற நிலைமைகள் தான் தொடர்கின்றன.

முந்தைய 8 ஆண்டு காலத்தில் ஆண்டு சராசரி ஒதுக்கீடான ரூ.156 கோடிக்கு மாறாக, சமீபத்திய ஆண்டில் ஒதுக்கீடு வெறும் ரூ.70 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. இது சராசரி ஒதுக்கீட்டில் பாதிக்கும் குறைவானது, இதனால் மேலும் மோசமான நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமைகளுக்கு மத்தியில், பயனாளிகளை அடையாளம் காணும் அடிப்படைப் பணி கூட கேள்விக் குறியானதாகவே உள்ளது. 1993 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கையால் துப்புரவு செய்வதற்கு தடை மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்கான இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. 1993 வருடத்திய முதல் சட்டத்தில் கையால் துப்புரவு செய்தல் பற்றிய வரையறை கையால் மலம் அள்ளுதல் என்ற அளவில் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டது, இரண்டாவது சட்டத்தில் இது விரிவுபடுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், 2013 சட்டத்தில் பயனாளிகளைச் சரியாக அடையாளம் காண்பதற்காக வகுக்கப்பட்ட நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படாததால், அனைத்து வகையான கையால் துப்புரவு செய்யும் தொழிலாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இன்னும் பரந்ததாக இல்லை.

வாட்டர்எய்ட் இந்தியா ஊரக மற்றும் நகர்ப்புற தேவைகளுக்கான சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் ஈக்விட்டி ஸ்டடீஸ் மையம் நடத்திய சமீபத்திய ஆய்வில், பல இடங்களில் அடையாளம் காணும் பணி உள்ளூர் அதிகாரிகளின் விருப்பத்திற்கு உட்பட்டதாக விடப்பட்டுள்ளது. தங்கள் பகுதியில் கையால் துப்புரவு தொழிலில் யாரும் ஈடுபடவில்லை என அவர்களாக கருதிக்கொள்வதால், மேற்கொண்டு ஆய்வு பணிகளை அவர்கள் தொடரவில்லை.

ஆய்வுகள் நடத்தப்பட்டாலும், ஆய்வுக்கு முந்தைய பயிற்சி அளிப்பது மற்றும் ஆய்வு செய்து அறிந்து கொள்ளும் திறனை மேம்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன, இதன் விளைவாக, கணக்கெடுப்பு நடத்துபவர்கள் திறனற்றவர்களாக உள்ளனர். சமூக நலனுக்காகப் பாடுபடுபவர்கள் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

சுயஅடையாளம் மற்றும் சுய ஆதாரங்களால் வழங்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு கவனம் செலுத்துவதற்கும், அலுவல் ரீதியான பட்டியல்கள் தாக்கல் செய்யவும் ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆனால் இந்த விதிகளும் புறக்கணிக்கப்பட்டு உள்ளன.

மாவட்ட அளவில் பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பட்டியல்களை ஒருங்கிணைப்பதிலும் சிக்கல்கள் இருக்கின்றன. வட்டார அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட பட்டியலில் இல்லாமல் போகிறது.

2013 க்குப் பிறகு, அரசாங்கம் 13 மாநிலங்களில் 12,742 கை




யால் துப்பரவு செய்பவர்கள் உள்ளனர் என்று அங்கீகரித்தது. அதில் 82% பேர் உத்தரப் பிரதேசத்தில் மட்டுமே உள்ளனர் என்று குறுப்பிடப்பட்டது. ஆனால் இது சரியான மதிப்பீடு அல்ல என்று பரவலாக விமர்சிக்கப்பட்டது. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பில் 740078 குடும்பங்கள் இருப்பதை கண்டறிந்து பதிவு செய்யப்பட்டது. இது கழிவுநீர் தொட்டிகள், பொது

---

# வெறுப்பே
# கோட்பாடாகக்

**மதத் தீவிரவாதம் என்பது மத அடிப்படைவாதத்திலிருந்து வெகு தொலைவில் விலகி இருப்பதில்லை. இரண்டிற்கும் வேறுபாடு உண்டா என்ற வினாவிற்கு இன்று எதார்த்தத்தில் இல்லை என்பதே பதில். மதத் தீவிரவாதம், வகுப்புவாத வெறுப்பு இடத்திற்கு வந்துவிட்டது.**

இனப் பெருமித எண்ணங்களின் கரடுமுரடான கற்கால அணுகுமுறையே மத அடிப்படைவாத வெளிப்பாட்டின் அனைத்து வடிவங்களுக்கும் பின்னால் இருந்து வழிகாட்டி இயக்குகிறது. அது செயல்படத் தொடங்கிவிட்டால் புரிந்து கொள்ள முடியாத அதன் விளைவுகள் விபரீதமானவை, யூகித்து எதிர்பார்க்க முடியாதவைகளாகி விடும்.

அது இரக்கமற்ற வகுப்புவாத வன்முறைக்கு அல்லது தூதரக உறவில் பரவலான சர்ச்சைகளுக்கு இட்டுச் செல்லும். இன்று அத்தகைய ஒரு பிரச்சனையைதான் உலகளாவிய அளவில் இஸ்லாமிய நாடுகளுடன் இந்தியா சந்திக்கிறது. ஆர்எஸ்எஸ் பாஜகவினர் கோட்பாடு கட்டவிழ்த்துவிட்ட அந்த அரசியல் புயலை மூடி மறைக்க அதன் தலைமை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் படாதபாடு படுகிறது.

தங்கள் கட்சியில் 'ஒதுக்கப்பட்ட உதிரிகள் சிலர்' ஏதோ நாக்கு புரண்டதால் தவறுதலாகக் கூறியதென நடந்த சம்பவத்தைப் பூசி மெழுக அரசு மற்றும் ஆளும்கட்சியின் வித்தகர்கள் விரும்புகிறார்கள். ஏன் அவசர அவசரமாகப் பூசி மெழுக முயல்கிறார்கள், காரணம் அனைவரும் அறிந்ததே. கட்சியில் சிறு பொறுப்புக்களிலிருந்து மெல்ல மெல்ல அதிகாரபூர்வச் செய்தித் தொடர்பாளர்களாக அல்லது ஊடகப் பிரிவின் தலைமையாளர்களாகக் கோபுரத்தில் ஏற்றப்பட்டவர்கள், நொடிப் பொழுதில் 'ஒதுக்கப்பட்ட உதிரிகள்' எனப் புழுதியில் வீசப்படும் விந்தை! அதைவிடவும் விரைவாய் அவர்கள் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது! 'கறாரும் கண்டிப்பும்'மிக்க இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகும் அவர்கள் கண்டனத்திற்குரிய தங்கள் நிலைபாடுகளை நியாயப்படுத்துகிறார்கள்! சங் பரிவார் கும்பலின் சமூக ஊடகங்களை இயக்குபவர்கள் அவர்களைத் தங்கள் பெருமிதத்தின் கதாநாயகர்களாகக் கொண்டாடுகிறார்கள்!

எனவே 'உதிரிகள்' என்று சொல்லி ஆர்எஸ்எஸ் பாஜக அத்தனைச் சுலபமாகப் பிரச்சனையிலிருந்து நழுவி கை கழுவிவிட முடியாது. ஒரு பேச்சுக்காக 'உதிரி கோட்பாடு' வாதத்தை ஏற்றுக் கொண்டாலும், முக்கியமான சில கேள்விகள் முன் எழுகின்றன: மிகவும் பொறுப்பற்ற அருவருக்கத்தக்க அறிக்கைகளை வெளியிடும் நெஞ்சழுத்தத்தை இந்த உதிரிகள் எங்கிருந்து பெற்றார்கள்? எவர் கொடுத்த தைரியம்? ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகும் அந்த உதிரிகளால் எப்படி இவ்வளவு பெரும் ஆதரவு திரட்ட முடிகிறது? இந்த எல்லா கேள்விகளுக்குமான விடைகள், நடந்த அனைத்துச் சம்பவங்களின் உண்மை பின்னணியை அம்பலப்படுத்தும். அந்த உண்மை, பாஜக அதிகார பூர்வச் செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா மற்றும் ஊடகப் பிரிவு தலைவர் நவீன் ஜிண்டால் பொது விதிக்கு விலக்கான உதிரிகள் அல்ல, மாறாக விதிகளே அவர்கள்தான் என்ற உண்மை வெளிவரும்!

பாஜகவின் இந்த 'உதிரிகள்' உண்டாக்கியப் பிரச்சனையிலிருந்து வெளியே மீண்டு வர இந்திய அரசும், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களும் இரவு பகலாகக் கூடுதல் பணியாற்றுகின்றன. ஆகப் பெரும் தேசத்தை ஆள்வது அவர்கள் கொண்டிருக்கும் குறுகிய கண்ணோட்டத்தைவிட மிகப்பெரும் கடமை பொறுப்பு என்பதை ஆளும் கட்சி தற்போது புரிந்து கொண்டிருக்கலாம். வாய் வார்த்தையாய் "சப்கா சாத், சப்கா விகாஸ், சப்கா விஸ்வாஸ்" என்றெல்லாம் முழக்கங்களை உற்பத்திச் செய்வதில் நிபுணர்களாய் இருக்கலாம். ஆனால் முழக்கங்களை நடைமுறையில் நனவாக்கி அமலாக்குவதில் அவர்கள் முழுமையாகத் தோற்றுவிட்டார்கள்.

அந்தத் தோல்விக்கான விலையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆகக் கடுமையாக நாடு செலுத்திக் கொண்டிருக்கிறது. உள்நாட்டில் அரசின் சமூகப் பொருளாதாரக்

கொள்கைகள் காரணமாக மக்களின் துன்ப துயரங்கள் மலையெனக் குவிகிறது. மக்களின் உண்மையான இந்த வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக ஆர்எஸ்எஸ் பாஜக மக்களின் கவனத்தைத் திசை திருப்ப வகுப்புவாதப் பதற்றத்தைத் தூண்டுகின்றன. மத அடிப்படை வாதம் மற்றும் வெறுப்பு அரசியல் அவர்கள் கைகளில் 'பிரித்தாளும்' கருவிகளாகின்றன. இந்தப் பயனுக்காகவே அவர்களின்





**மூலப் பொருட்கள், இயந்திரங்கள், கருவிகள், காப்புநிதிகள் ஆகியவற்றின் உடைமையாளர்களுக்கு தொழிலாளி வர்க்கத்தின் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதற்கு வகை செய்கின்றன. - ஏங்கல்ஸ்**

# ப்யும் தொழிலாளர்கள்
# சின் மெத்தனமும்!




சாக்கடைகள் மற்றும் ரயில் பாதைகள் உள்ளிட்ட இடங்களில் கையால் மலம் அள்ளும் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களை மட்டும் குறித்தது.

சமூக – பொருளாதார, சாதிவாரி கணக்கெடுப்பின்படி, 1.82 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களில், குறைந்தபட்சம் ஒரு உறுப்பினராவது துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

2018–19 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மிக சமீபத்திய கணக்கெடுப்பில், 18 மாநிலங்களில் உள்ள 170 மாவட்டங்களில் 54,130 பேர் கையால் துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் கண்டறிந்துள்ளது.

சாதிவாரி கணக்கெடுப்பு 1.82 லட்சம் குடும்பங்களைக் கணக்கிட்டுள்ளது. இந்திய அரசு வெறும் 54,130 பேரை கண்டறிந்து உள்ளது. எனவே அரசாங்க கணக்கீடுகள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. சரியான கணக்கீடுகளாக இல்லை. இதன் காரணமாக மறுவாழ்வு திட்டச்செயல்பாடும் சிக்கல்களுக்கு உள்ளாகின்றன.

மேலும், ரூ.40,000 மானியம் வழங்குவது மறுவாழ்வு திட்டத்தின் ஒரு பகுதியாகும். அடையாளம் காணப்பட்ட அனைத்து நபர்களுக்கும் இந்த மானியத்தை வழங்கியதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் பிரச்சினை என்னவென்றால், பெரும்பாலானவர்கள் அடையாளம் காணப்படவில்லை. அதனால் தான் இந்த உதவி தகுதியான நபர்களில் பெரும்பாலானவர்களைச் சென்றடையவில்லை.மேலும்,

**நிவாரணங்கள் மட்டும் இல்லாமல் சுயதொழில் அடிப் படையில் மாற்று தொழிலில் ஈடுபட உதவுவதும் மறுவாழ்வு திட்டத்தின் குறிக்கோள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு ரூபாய் 40,000 போதுமானதா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. அதாவது இத்தொகையை பரிந்துரை செய்த அதிகாரியின் ஐந்து நாள் ஊதியம் தான் இது. இதில் வருமானம் ஈட்டும் சொத்துக்களை வாங்குவது, புதிய திறன்களைக் கற்றுக் கொள்ள ஏற்படும் செலவுகள் மற்றும் பிற ஏற்பாடுகள் ஆகியவையும் அடங்குமாம்! என்ன கொடுமை இது!**

அது மட்டுமின்றி, வங்கிக் கடன் வழங்கி தொழில் முனைவோர் ஆவதற்கு மாற்று வாழ்வாதாரம் வழங்கும் திட்டம் அடிப்படையில் தோல்வி அடைந்தது என்பது வெளிப்படையானது. வங்கிகள் இதற்கான கடன்களை மிகக் குறைவாகவே வழங்கியுள்ளன. மேலும் ஒன்றிய அரசின் ஒதுக்கீடுகள் கூட மிகவும் குறைவாக சீரற்றதாக உள்ளன. சுயதொழில் முயற்சிகளை அடிப்படையாகக் கொண்ட மறுவாழ்வு என்பது சமுதாயத்தில் இந்தக் குடும்பங்களுக்கு எளிதானதல்ல, பல பாரபட்சமான மனப்பான்மையின் காரணமாக அவ்வளவு எளிதானது அல்ல. எனவே, பல்வேறு விதமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். மேலும் புதிய வழிகளில் சுய தொழில் மூலம் வெற்றி பெற அதிக காலம் ஆகலாம். மேலும் மாற்று தொழில் தொடங்கிய ஆரம்பகாலத்தில் இந்த குடும்பங்கள் உயிர்வாழவும், தொடர்ந்து தொழில் நடத்த முயற்சி செய்யவும், அதிகமான உதவி தேவைப்படுகிறது.

துப்புரவுப் பணிகளில் இந்திய நிலைமைகளுக்கு ஏற்ற பாதுகாப்பான தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்களைக் கண்டறியவும் அதிக முதலீடுகள் தேவைப்படுகின்றன. ஆனால் அத்தகைய முதலீடுகள் செய்யப்படுவதில்லை.

### தமிழ்நாட்டில்...

சமூக – பொருளாதார ஜாதிவாரி கணக்கெடுப்பு 2011ன் படி, தமிழ்நாட்டில் 334 தொழிலாளர்கள் மட்டுமே இருந்தனர் என்றும், 2015 ஆம் ஆண்டு 462 பேர் தான் இருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், 2015 கணக்கெடுப்புக்குப் பிறகு, தமிழ்நாட்டின் எட்டு மாவட்டங்களில் சஃபை கரம்சாரி அந்தோலன் (எஸ்கேஏ) ஆய்வு செய்தது. இது 3,032 பேரை அடையாளம் கண்டு அரசாங்கத்திடம் தரவுகளைச் சமர்ப்பித்தது.

இதன் பின்பும் தமிழ்நாடு அரசின் 2017 கணக்கெடுப்பின்படி, தமிழ்நாடு முழுமையும் திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, சென்னை மதுரை, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் இருந்து மட்டுமே 363 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2013 முதல் 2018 வரையிலான ஆண்டுகளில் 144 பணியாளர்கள் இறந்ததாக ராஜ்யசபாவில், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் குறிப்பிட்டார். நாடு முழுவதும் பதிவான 323 இறப்புகளில் 144 இறப்புகள் (அதாவது 44.5%) தமிழ்நாட்டில் நடந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். அதே சமயம் தமிழ்நாடு நகராட்சிகள் நிர்வாக துறை, ஆர்டிஐக்கு தந்த பதில் ஒன்றில், தமிழ்நாட்டில் கையால் துப்புரவுப் பணியின் போது 51 பேர் இறந்ததாகக் குறிப்பிட்டது.

(2016–2020)ஆகிய ஐந்து ஆண்டுகளில்52 இறப்புகளைப் பதிவுசெய்த உத்திரப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாக 43 இறப்புகளைப் பதிவுசெய்ததன் மூலம், தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்தது. இப்போதும் மரணங்கள் தொடர்கிறது. இந்தப் பிரச்சனையில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்த வேண்டாமா?

சிறந்த மறுவாழ்வுப் பணி மற்றும் பாதுகாப்பான துப்புரவுத் தொழில் நுட்பங்களுக்காக அதிக முதலீடுகள் செய்வதற்கு அரசுகள் முன் வரவேண்டும். இத்திட்டங்களை செயல்படுத்தும் போது தொழிலாளர்களையும் ( அவர்களின் நலனுக்காக பாடுபடுபவர்களையும்) உள்ளடக்கி செய்ய வேண்டும். அதற்கு அரசு முன் வருமா?

தொடர்புக்கு: **85248 67888**

# கொள்கை
# கொண்டவர்கள்

தலைவர்களும் அணிகளும் இனப் பெருமிதம் என்ற பள்ளியில் பிரத்தேகமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

நரேந்திர மோடி மற்றும் அமித்ஷாவை பயிற்றுவித்து உருவாக்கிய அதே பள்ளியிலிருந்துதான் கட்சியிலிருந்து இடை நீக்கம் செய்யப்பட்ட அதிகார பூர்வச் செய்தித் தொடர்பாளர்களும்கூட பயிற்றுவிக்கப்பட்டார்கள். ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். வேறுபட்ட திறன்கள் மற்றும் விதவிதமான சாயல் குரல் தொணிகளில் அவர்கள் அனைவரும், ஹிட்லர் பாசிசத்தின் இந்தியப் பதிப்பான, இந்துத்துவா செயல் திட்டத்தை அமல்படுத்த முயற்சி செய்கிறார்கள்.

தற்போதைய நடப்புக் காலத்தில் இஸ்லாமோபோபியா அவர்களது கொள்கை மற்றும் நடவடிக்கைகளில் முக்கிய பகுதியாக உள்ளது. ஊடக அறைகளில் அறிவுசார் விவாதங்களில் வெளியிடப்படும் அவை, இறுதியில் வகுப்புவாதக் கலவரங்கள் மோதலில் முடிகிறது. இத்தகைய பேச்சுகள் மற்றும் மோதல்கள் நமது இந்தியாவின் மதசார்பற்ற அடித்தளத்தில் ஆழமான காயங்களை ஏற்படுத்துவது குறித்து அவர்கள் ஒருசிறிதும் கவலைப்படுவதில்லை. வகுப்புவாத வெறுப்பு விஷத்தை உமிழ்வது அவர்களுக்கு மிக எளிதாகிவிட்டது. மெஜாரிட்டியிசம் எனப்படும் அவர்களின் பெரும்பான்மைவாத மோசமான திட்டங்களுக்கு உதவிடுவதுபோல பல்வேறு அளவுகளில் இஸ்லாமியத் தீவிரவாதமும் தங்கள் பங்கிற்கு நடக்கிறது. தேச ஒற்றுமையைக் குலைக்கும் இச்செயல்கள் எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் அதற்கான விலையைத் தருவது எப்போதும் அப்பாவி மக்களே. பாஜக வெளியிடும் அறிக்கைகளின் விளைவாக உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும்கூட மக்கள் பெருந்தொல்லைகளைச் சந்திக்க நேர்கிறது.



வெளி உலகுடன் உறவுகளை பலப்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகள் இத்தகைய தீவிர வகுப்புவாதிகளின் பேச்சு மற்றும் செயல்களால் எப்போதும் கடுமையான ஆபத்துக்களைச் சந்திக்கின்றன. மதம் சார்ந்த சமய நம்பிக்கை மற்றும் மதத் தீவிரவாதம் இவற்றைப் பிரிக்கும் கோட்டினை உலகளாவிய அளவில் பலப்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. மதம் வேறு, மதத் தீவிரவாதம் வேறு என்பது உணர்த்தப்பட வேண்டும். ஆனால் சுரண்டல் சக்திகள் எல்லா இடங்களிலும் மக்களையும் கார்ப்பரேட்டுகளின் கொள்ளைகளுக்கு எதிரான அவர்களின் எதிர்ப்பையும் பிளவுபடுத்துவதில் கவனமாக உள்ளன. அந்தச் சுரண்டல் சக்திகளுக்கு இந்த மதத் தீவிரவாதம் அவர்கள் கருதிய பயனை நடத்தி முடிக்க மிக வசதியான கருவியாகிறது. மதம் சார்ந்த எந்தப் பிரச்சனையும் மிக எளிதாகத் தீப் பிடித்து எந்த மட்டத்திற்கும் பற்றி எரிந்து நினைத்துப் பார்க்க முடியாத பாதிப்புகள் மற்றும் களபலிகளை வாங்குகிறது. அரசியலும் நாடுகளுக்கு இடையே நுட்பமான உறவும் இந்த உண்மை குறித்து எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.


இந்தியாவில் சிறுபான்மையினர் நிலைமை மோசமாக இருப்பதாக இரண்டு நாட்களுக்கு முன்பு மத விஷயங்களுக்கான அமெரிக்க முகமை தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. தற்போது இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு (ஓஐசி) இந்திய ஆளும் கட்சியின் செய்தித் தொடர்பாளர் உதிர்த்த அறிக்கைக்கு எதிராகக் கடுமையாக நிலைபாடு எடுத்துள்ளது. கல்ஃப் கோ ஆப்பரேஷன் கவுன்சில் (ஜிசிசி) இது விஷயமாகத் தங்களின் மிகுந்த வேதனையைப் பதிவு செய்ய இந்தியத் தூதரகங்களின் தலைமைத் தூதர்களை நேரில் வரப் பணித்தது. சில நாடுகளில் இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்க அறைகூவல் அழைப்பும் விடப்பட்டிருந்தது. இந்த அமைப்பின் பெரும்பாலான நாடுகளுடன் இந்தியாவுக்கு நீண்ட கால நீடித்த பொருளாதார, சமூக மற்றும் அரசியல் உறவு நல்ல முறையில் இருந்து வருகிறது. இந்த நாடுகளுடன் வர்த்த உறவு இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகும்.

அத்தகைய முக்கியமான தருணத்தில் மிக நுட்பமான பிரச்சனைகளில் பொறுப்புள்ள எந்த அரசியல் கட்சியும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள “உதிரிகளை” பொறுப்பற்ற முறையில் அறிக்கைகள் வெளியிட அனுமதிக்காது. ஆனால் பாஜக ஆட்சியில் அடிக்கடி குறுகிய இடைவெளிகளில் இவை நடந்த வண்ணம் உள்ளன. உதிரிகளின் பெயர்கள் மாறலாம், சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் மாறலாம். ஆனால் அவை அனைத்திலும் விஷம் ஒன்றுதான். நதிமூலம் ரிஷி மூலம் தேடுவது போல, அவற்றின் மூல ஆதார இடம் இனவாதப் பெருமிதத்தின் இந்துத்துவா கோட்பாடு. அந்தக் கோட்பாடு இதற்கு முன் நேற்று கலாச்சார அமைச்சகத்தை, ஆயிரமாயிரம் ஆண்டுகள் கொண்ட இந்திய மக்கள் இனத்தின் (மரபணு) தூய்மை பற்றி ஆய்வில் ஈடுபடுவதாக அறிவிக்கத் தூண்டியது. அதே கோட்பாடு இந்திய அடையாளத்தைக் கட்டி எழுப்பிய மதசார்பற்ற தொடர் நீரோட்டத்தைக் காயப்படுத்துவதாகப் பாபர் மசூதியை இடிக்கத் தூண்டியது.

அந்தக் கோட்பாடு இன்று நாட்டின் ஒவ்வொரு மசூதிக்கும் அடியில் இந்து கடவுள் சிலைகளைத் தேடத் தூண்டியுள்ளது. அந்தக் கோட்பாடு மற்றும் அதன் வெறுப்பு உலக அரசியலில் இந்தியப் பெருமிதத்தின் மீது சேற்றை வாரி இறைத்துள்ளது. இதே கோட்பாடுதான் இனப் பெருமிதம் என்ற கட்டுக் கதையைப் பரப்பி கைக் கூலிகளையும் ஒதுக்கப்பட்ட உதிரிகளையும் அதன் போதையில் ஆழ்த்தி உள்ளது.

இந்திய அரசு அழிவேற்படுத்தும் அந்த வெறுப்பு கோட்பாட்டிலிருந்து தன்னைத் தள்ளி வைத்து நடைபோடத் தயாரா? அத்தகைய எண்ணம் ஏதும் இந்த அரசுக்கு உண்டா?

தமிழில் : நீலகண்டன்,



**சரக்குகளின் விலை அல்லது பண வடிவம் என்பது பொதுவாக அவற்றின் மதிப்பு வடிவத்தைப் போலவே அவற்றின் கண்கூடான தசை உருவத்திலிருந்து முற்றிலும் வேறான ஒன்றாகும்.**

**- மார்க்ஸ்**

# மழலையர் பள்ளிகளை தொடர்ந்து நடத்த வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

தமிழ்நாடு முழுவதும் அரசுப் பள்ளிகளில் இயங்கிவரும் 2 ஆயிரத்து 381 மழலையர் பள்ளிகள் மூடப்படுவதாகவும், இவைகளில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்களை முன்னர் அவர்கள் பணியாற்றிய பள்ளிகளுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது. இது அடித்தட்டு, ஏழை மக்களை கடுமையாக பாதிக்கும்.

தனியார்துறை பள்ளிகளின் கவர்ச்சிகரமான விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு, ஏமாற்றமடையும் மக்களின் நலன்களை பாதுகாக்க அரசு பள்ளிகளில் ஆங்கில வழி போதனையும், மழலையர் பள்ளிகளும் தொடங்கப்பட்டன. கடந்த 2020 ஆண்டில் கொரோனா நோய்த்தொற்று பரவல் காரணமாக நாடு முடக்கம் செய்யப்பட்டதில் பெரும் பகுதி மக்கள் வேலைகளையும், வருமானத்தையும் இழந்து நிற்கும் நிலையில், தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் தயக்கமின்றி சேர்க்க மழலையர் கல்வியும், ஆங்கில வழி போதனையும் பெரும் ஊக்கம் அளித்தது.

இந்த நிலையில் மழலையர் பள்ளிகளை மூடுவது, அரசு பள்ளிகளில் மாணவர்கள் வருவதை தடுத்து, தனியார் பள்ளிகளுக்கு நெட்டித் தள்ளும் செயலாகும். கடுமையான கட்டண வசூலில் ஈடுபட்டு வரும் தனியார் பள்ளிகளில் தொடர்ந்து பயில முடியாமல், இடைநிற்றல் (drop-out) அதிகரிக்கும் என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும். மழலையர் பள்ளிகளை தொடர்ந்து நடத்துவதுடன், ஆரம்பப் பள்ளிகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, மேலும், மேலும் மாணவர்களை ஈர்க்கும் வகையில் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# காவிரி மேலாண்மை ஆணையத் தலைவரின் வரம்பு மீறிய செயல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

கருநாடக மாநில அரசு காவிரி நதிநீர் பகிர்வு தொடர்பாக நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் உச்சநீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கும் எதிராக மேகேதாட்டு அணை கட்டுவதில் தொடர்ந்து பிடிவாதம் காட்டி வருகிறது.

காவிரி நதி நீர் பகிர்வில் நடுவர் மன்றம் வழங்கிய இறுதி தீர்ப்பு மீதான மேல் முறையீடுகளை விசாரித்த உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரின் அளவில் 14.75 டிஎம்சி குறைத்தும், பெங்களூரு பெருநகரத்தின் குடி தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு 4.75 டிஎம்சி தண்ணீர் கூடுதலாக ஒதுக்கீடு செய்தும் 2018 ஆம் ஆண்டில் தீர்ப்பளித்தது. மேலும் ஒரு மாநிலத்தில் ஓடும் ஆற்றுத் தண்ணீர் அந்த மாநிலத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல, அது தேசத்தின் சொத்து என்று தெளிவுபடுத்தி, காவிரி நதிநீர் பங்கீட்டில் தொடர்புள்ள தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் காவிரி நீராதாரத்தில் கருநாடக அரசு எந்தவொரு மாறுதலும் செய்யக் கூடாது என்றும் எச்சரித்துள்ளது. இந்தத் தீர்ப்பு இறுதியானது என்று கூறிய உச்ச நீதிமன்றம் தீர்ப்பை செயல்படுத்த காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைத்தது. இதன் 16 வது கூட்டம் வரும் 17.06.2022 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் மேகேதாட்டு அணை கட்டுவது குறித்து விவாதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது மேகேதாட்டு அணை கட்டும் முயற்சிக்கு தமிழ்நாடு ஆரம்ப நிலையில் இருந்து ஆட்சேபணையும் எதிர்ப்பும் தெரிவித்து வருகிறது. இது தொடர்பாக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முதலமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடி எடுத்த முடிவுகளை ஒன்றிய அரசின் நீர்வளத்துறை அமைச்சரிடம் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் குழு பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் நேரில் தெரிவித்துள்ளது. இவைகள் அனைத்தையும் அலட்சியப்படுத்தி விட்டு மேகேதாட்டு அணை கட்டுவது தொடர்பாக விவாதிக்கப்படும் என கூறியிருப்பது ஆணையத்தின் அதிகார வரம்பை மீறிய செயலாகும். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆணையம் அதன் நிகழ்ச்சி நிரலில் இருந்து மேகேதாட்டு அணை குறித்த பொருளை உடனடியாக நீக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# மூத்த எழுத்தாளர் கு.சின்னப்பபாரதி மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இலக்கிய உலகின் முன்னணி படைப்பாளி கு.சின்னப்பபாரதி (87) காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு வேதனையுற்றோம்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த சின்னப்பாரதி சமூக சீர்திருத்தங்களில் முனைப்புக் காட்டியவர். பகுத்தறிவு சார்ந்த அறிவியல் கருத்துக்களை முன்னெடுத்து வந்தவர். மாணவப் பருவத்தில் இடதுசாரிக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அதன் வழிநின்று இறுதி வரை பயணித்தவர்.

இலக்கிய படைப்புகளில் கு.சின்னப்பபாரதியின் ‘‘தாகம்’’, ‘‘சர்க்கரை’’, ‘‘பவளாயி’’ ஆகிய நவால்கள் பல மொழிகளில் பயணித்து, பரவலான வாசிப்பு வட்டத்தை பெற்றுள்ளன. ‘‘சுரங்கம்’’ நாவல் சுரங்கத் தொழிலாளர்களின் சமூக வாழ்வை துல்லியமாக பிரதிபலித்துள்ளது.

முதுமையை எட்டிய நிலையில் கு.சின்னப்பபாரதி ‘‘இலக்கிய கருத்தரங்கு நினைவு அறக்கட்டளை’’ அமைத்து புதிய படைப்பாளிகளை ஊக்கப்படுத்தி வந்தவர். இவரது இலக்கியப் பணி பல விருதுகளை வென்று, பாராட்டுதல்களை பெற்றுள்ளது. சமூகத்தை உள்வாங்கி, பிரதிபலித்து அதன் எதிர்கால பயணத்திற்கு சரியான திசைவழி காட்டும் படைப்பாளியை இலக்கிய உலகம் இழந்துவிட்டது. அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், இலக்கிய நண்பர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# முற்போக்கு எழுத்தாளர் சின்னப்ப பாரதி மரணம்

## அனைத்திந்திய முற்போக்குப் பேரவை இரங்கல்

அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது:

மிகச்சிறந்த முற்போக்குச் சிந்தனையாளரும், எழுத்தாளரும், நாவலாசிரியருமான கு. சின்னப்ப பாரதி அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. தனது எழுத்துக்களின் மூலம் முற்போக்குக் கருத்துக்களை தமிழக மக்களின் உள்ளங்களில் விதைத்தவர் சின்னப்ப பாரதி. தாகம், சர்க்கரை, சங்கம், பவளாயி, தலைமுறை மாற்றம்,சுரங்கம், பாலை நில ரோஜா என்ற ஆறு புதினங்களை படைத்துள்ளார்.

அவரது படைப்புகள் ஆங்கிலம், பிரெஞ்சு, சிங்களம், மலையாளம், கன்னடம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவரது மரணம் தமிழக மக்களுக்கும், முற்போக்கு இலக்கிய உலகிற்கும் மிகப்பெரிய இழப்பாகும். அவருக்கு அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் தமிழ்நாடு மாநிலக் குழு தனது அஞ்சியை செலுத்திக் கொள்கிறது. அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### மேகதாது அணை குறித்து

# காவிரி ஆணையக் கூட்டத்தில் விவாதிக்க முடிவு

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கர்நாடக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வரும் மேகதாது அணை குறித்து காவிரி ஆணையக் கூட்டத்தில் விவாதிக்க இருப்பதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

காவிரியின் தமிழக பாசன பயன்பாடு உரிமையை ஒப்புக்கொள்ள மறுத்து வந்த கர்நாடக அரசுடன் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும், தொடர்ந்து கர்நாடகம் தமிழக உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இந்த நிலையில் தான் 1956 நதிநீர் தாவா சட்டப்படி காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

18 ஆண்டுகளுக்குப் பின்நடுவர் மன்றம் அளித்ததீர்ப்பும், இதைத் தொடர்ந்து உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டல்படி காவிரி ஆணையம் மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. ஒவ்வொரு தீர்ப்பிலும் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தண்ணீர் அளவு குறைக்கப்பட்டாலும் தமிழகம் வேறு வழி இல்லாமல் ஏற்றுக் கொண்டது.

மேற்கண்ட நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி காவிரி பாசன பயன்பாடு வழிதனில் எந்த ஒரு புதிய கட்டுமானங்களும் புதிதாக கட்டக் கூடாது என தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. நீர்வழித் தடங்களில் உள்ள இதன் முன் உள்ள கட்டுமானங்கள் குறித்து பேச வேண்டுமெனில் சம்பந்தப்பட்ட பிற மாநிலங்களின் ஒப்புதல் வேண்டும் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கர்நாடக அரசு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே, எந்த எதிர்ப்பு வந்தாலும் மேகதாது அணையை கட்டுவோம் என்று அறிவித்ததுடன், கட்டுமானத்திற்கு முதல் கட்டமாக ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. அரசியல் சட்ட வழி முறைகளுக்கு அப்பால் கர்நாடக அரசு, அனுமதி பெறாத ஒரு அணைக்கு நிதி ஒதுக்கீடு செய்ததை கண்டிக்க வேண்டிய மத்திய அரசு கண்டும் காணாமல் இருந்தது. இந்த நிலையிலும் கர்நாடக மாநில.. மத்திய அமைச்சர்கள் டெல்லி சென்று மேகதாது அணைக்கான அனுமதி கேட்டு வலியுறுத்தியுள்ளனர்.

வரும் 17ஆம் தேதி கூட இருக்கும் காவிரி ஆணையக் கூட்டத்தில் கர்நாடக அரசு வலியுறுத்தும் மேகதாது அணை கட்டுமானத்தை விவாதப் பொருளாக வைத்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இந்திய ஒருமைப்பாட்டை அரசியல் சட்ட வழிமுறைகளை காக்க வேண்டிய மத்திய அரசும், ஆணையமும் ஒருதலைபட்சமாக நடப்பது என்பது ஏற்கத்தக்கதல்ல. மேலும் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு கொடுத்துள்ள வழக்கு நிலுவையில் உள்ள போதே, மீறி காவிரி ஆணையம் விவாதிப்பது என்பது கண்டிக்கத்தக்கது. உடனடியாக காவிரி ஆணையம் மேகதாது அணைக்கான பொருளை கூட்ட நடவடிக்கையில் இருந்து நீக்கிட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# சாதி வெறியின் உச்சம் இளைஞரின் கை கால்கள் வெட்டப்பட்டன



## களத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

தர்மபுரி மாவட்டம் தொப்பூர் பகுதியை சேர்ந்த பதினேழு வயது இளைஞன் ஜீவா அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்தவன் அவனுடைய நண்பன் அன்பரசன் மாற்று சமூகத்து பெண்ணை காதலிக்கிறான் என்பதால் சாதி வெறி கும்பல் திட்டமிட்டு இந்த இளைஞர்களை பின் தொடர்ந்து வந்து அவர்கள் வந்த இரு சக்கர வாகனத்தின் மீது வண்டியை மோதி கீழே விழுந்த இளைஞர்களை அரிவாளால் வெட்டியுள்ளனர்.

இதில் ஜீவா என்ற இளைஞனின் வலது காலை இரண்டு பேர் இழுத்துப் பிடித்துக் கொண்டு மற்றொருவர் அரிவாளால் கொடூரமாக வெட்டியுள்ளார். வலது கால் வெட்டப்பட்டு துண்டானது. வலது கை தோள்பட்டையில் வெட்டப்பட்டு தோள் எலும்பு துண்டாகி இருக்கிறது. உயிருக்கு போராடிய மூன்று பேரில் இரண்டு பேர் சேலம் மருத்துவமனையிலும், ஜீவா என்ற இளைஞன் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து வருகின்றனர்.

சாதி மறுப்பு திருமணத்தை எதிர்க்கும் சாதிவெறி பஞ்சாயத்துக் கும்பல் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. இவர்களுக்கு பின்னால் சனாதன கும்பல் இயங்கி வருகிறது வடமாநிலங்களில் நடைபெறும் சாதி ஆணவக் காட்டுமிராண்டித்தனம் தமிழகத்திலும் தலைதூக்கி வருகிறது. இந்த வழக்கில் காவல்துறை இது வாகன விபத்து என்ற ரீதியில் செயல்படுவதாக செய்தி வருகிறது. ஆனால் இது சாதி வெறி, கொலைவெறி தாக்குதல் இந்த வழக்கில் எஸ்சி எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவேண்டும். கொலை முயற்சி வழக்காக இது பதிவு செய்யப்படவேண்டும்

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர் வழக்கறிஞர் கீ.சு.குமார், மாவட்ட செயலாளர் சுப்பிரமணி, சிபிஐ மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, இளைஞர் பெருமன்ற மாநில தலைவர் வெங்கடேஷ், வடசென்னை ஜனசக்தி பொறுப்பாளர் கருணாகரன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் குப்பன் ஆகியோர் பாதிக்கப்பட்ட ஜீவாவை நேரில் சந்தித்து நிதி அளித்து ஆறுதல் தெரிவித்தனர்.

## மாற்றுத்திறனாளி

# லேப் டெக்னீசியன்களுக்கு பணிநிரந்தரம் வழங்க வேண்டும்!

## தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பு கோரிக்கை

தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மாற்றுதிறனாளிகள் உள்ளிட்ட 33 பேர் லேப் டெக்னீசியன்களாக **(Lab technician)** தற்காலிக அடிப்படையில், மாதம் ரூபாய் 8000 தொகுப்பூதியத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்டனர். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, பணி நிரந்தரம் செய்யப்படாமல் ,தற்காலிகமாகவே பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக பணி நிரந்தரம் வழங்க வேண்டும்.

மாற்று திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் உள்ள 4 சதவிகிதம் இட ஒதுக்கீடு சரியான முறையில் வழங்கப்படுகிறதா என கண்காணிக்க ஒரு குழு அமைத்ததிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, மாற்று திறனாளிகள் மீது அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும்:

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம், இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும், பதிவு மூப்பு அடிப்படையிலும் பணி நியமனம் பெற்ற 22 மாற்று திறனாளிகள் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் வாரிசுகள் உள்ளிட்ட மொத்தம் 33 பேர் தொழில்நுட்ப ஆய்வகர்களாக **(Lab technician)** பணியாற்றுகிறார்கள்.

2010 ஆம் ஆண்டில் திமுக ஆட்சிக் காலத்தில் பணி ஆணை வழங்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தனர். இவர்கள் விஸிஙி என்ற அமைப்பு உருவாகும் முன்பே பணி அமர்த்தப்பட்டவர்கள். பத்தாண்டுகளாக தொடர்ந்து, எவ்வித இடைநிற்றலும் இல்லாமல், பணியாற்றுகின்றனர். அன்றிலிருந்து இன்று வரை மாதந்தோறும் வெறும் ரூ.8000 மட்டுமே தொகுப்பூதியமாக பெற்றுக் கொண்டு பணிபுரிகிறார்கள்.

கொரானா காலத்தில் ,மாற்று திறனாளிகள் பணிக்கு வரத் தேவையில்லை என அரசு அளித்த சலுகையைக் கூட பயன்படுத்திக் கொள்ளாமல், எல்லோரும் பணி புரிந்தனர். அவர்களில் சிலருக்கு கொரானா ஊக்கத்தொகை கூட இது வரை வழங்கப்படவில்லை.

தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் மாற்றுத் திறனாளி லேப் டெக்னீசியன்களுக்கு பணிநிரந்தரம் வழங்க வேண்டும்.

மாற்று திறனாளிகள் இரண்டு ஆண்டுகள் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்தால் அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற 16.10.2008 தேதி யிட்ட (நிளி 151) அரசாணை உள்ளது. அந்த அரசாணையை நடைமுறைபடுத்தி பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். **GO (4D)13 date** 30.3.2013 என்ற அரசாணைபடி இரண்டாண்டு தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த தொழில்நுட்ப ஆய்வகர்களை காலமுறை ஊதியதிற்கு கீழ் அரசு கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதே போல், இந்த மாற்றுத் திறனாளி ஆய்வக நுட்புனர்களுக்கும், பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். மாற்றுத் திறனாளிகளான அவர்களை நீண்ட தொலை விற்கு இடமாறுதல் செய்து 30.05.2022 அன்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்த இடமாறுதல் உத்தரவை ரத்து செய்ய வேண்டும். பெரும்பாலும் பெண்களாகவும், திருமணமான வர்களாகவும், குழந்தைகள் உள்ளவர்களாகவும் உள்ள இந்த பணியாளர்களுக்கு சமூக நீதி வழங்கிட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி

சேலம் மாவட்டம், ஆத்தூர் மறைந்த எல்லப்பன் அவர்களின் மனைவியும், ஆத்தூர் ஜனசக்தி முகவர் ஈ.ஆர்.கே. அவர்களின் தாயாருமான சரஸ்வதி அம்மாள் தனது 93வது வயதில் காலமானார். தாயாரின் நினைவைப் போற்றும் வகையில் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.500 வழங்கப்பட்டது. மாவட்ட செயலாளர் ஏ.மோகன், பொருளாளர் எம்.ராமன், மாநிலக்குழு உறுப்பினர்கள் பி.பரமசிவம், க.பாரதி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், எஸ்.முருகன், என்.எம். சடையன், ஆத்தூர் ஒன்றிய செயலாளர் ஆர்.பொன்னுசாமி, மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி.தினேஷ், இஸ்கப் மாவட்ட செயலாளர் ஈ.ரவி மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள், இடைக்குழு செயலாளர்கள், கட்சி உறுப்பினர்கள் ஏராளமானோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவை மாநகரம், எஸ்.ஐ.எச்.எஸ். காலனி மேற்கு, பெத்தேல் நகர், ஸ்ரீஅஷ்ட காளியம்மன் கருப்பராயன் கோயில் 20ஆம் ஆண்டு திருவிழா 2022 மே 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கட்சியின் சூலூர் தெற்கு வட்டாரக்குழு உறுப்பினர் பி.சக்திவேல், இருகூர் கிளைச் செயலாளர் ஆர்.வீராசாமி ஆகியோரிடம் கோயில் நிர்வாகிகளும், கட்சித் தோழர்களுமான பி.கிருஷ்ணன், அ.சுப்பிரமணி உள்ளிட்ட நிர்வாகிகள், கோயில் விழாக் கமிட்டி சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.1000 அளித்தனர்.

●●●

கோவை, சூலூர் தெற்கு வட்டாரம், இருகூர் கட்சிக் கிளை உறுப்பினர் கோ.மாரிச்சாமி – முத்துச்செல்வி ஆகியோர் மகள் மா.பொன் இருளீஸ்வரிக்கும் – மதுரை திருமங்கலம் ஆ.பாண்டி – சாந்தி ஆகியோரது மகன் ப.சோனமுத்துவுக்கும் ஜூன் 1 அன்று திருமங்கலத்தில் மணவிழா இனிதே நடைபெற்றது. விழாவில் பங்கேற்ற கட்சியின் சூலூர் வட்டாரக்குழு உறுப்பினர் பி.சக்திவேல் அவர்களிடம் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.1000 வழங்கப்பட்டது.

●●●

கோவை, சூலூர் வட்டாரம், செல்வராஜபுரம் கட்சி கிளை உறுப்பினர், ஏஐடியூசி டெம்போ – டேக்சி தொழிலாளர் சங்க நிர்வாகி தோழர் கே.மூர்த்திநாதன் – ரத்தினம் ஆகியோரது இளைய மகன், பாலதண்டாயுதம் இரத்ததான இயக்க இரத்தக் கொடையாளர் எம்.திலீப் – எஸ்.வாசுகி (மாதம்பட்டி, கோவை) ஆகியோர் மணவிழாவில் ஜூன் 1 அன்று அரசூர் தங்கநாயகி அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. மணவிழாவில் பங்கேற்ற கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமியிடம் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.1000 வழங்கப்பட்டது.

●●●

கோவை, தொண்டாமுத்தூர் ஒன்றியம், கட்சி உறுப்பினர் சூலூர் ராமசாமி – கனகபுஷ்பம் ஆகியோரின் மகன் ரா.லோகேஷ்வரன் – செ.பவித்ரா(சீரநாயக்கன்பாளையம், கோவை) ஆகியோரது மணவிழா வரவேற்பு ஜூன் 2 அன்று தொண்டாமுத்தூரில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, சூலூர் தெற்கு வட்டார பொருளாளர் கே.கண்ணன், சூலூர் கிளைச் செயலாளர் சூ.பே.நடராசு, சூலூர் கிளை துணைச் செயலாளர்கள் ஆர்.ஏ.முருகேசன், பூ.மா.பெருமாள் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 அளிக்கப்பட்டது.

●●●

கோவை, சூலூர் தெற்கு வட்டாரம், கண்ணம்பாளையம் வடக்கு கட்சிக் கிளை உறுப்பினர், இந்திய மாதர் தேசிய சம்மேளன கோவை மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.சுதா – செல்வராஜ் தம்பதியர் புதுமனை புகுவிழா ஜூன் 3 அன்று கண்ணம்பாளையம் தியாகி வெங்கட்ராயக் கவுண்டர் வீதியில் இனிதே நடைபெற்றது. விழாவில் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, ஏஐடியூசி மாவட்டப் பொருளாளர் பி.சுப்பிரமணியன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 அளிக்கப்பட்டது.

## இந்த வார தம்பிக்குறள்

### 74. மக்களே ஆசான்


**மக்கள்தான் மாபெரிய ஆசான் அஃதறியின்**
**மிக்காகும் மேன்மை மிகுந்தது.**

நாம் அறிவு பெறுவது நம்மைச் சுற்றிவாழும் மக்களிடமிருந்துதான்! ஆகவே மக்கள்தான் ஆசானுக்காசானாய் இருக்கின்றனர். இதை உணர்ந்தால், மேன்மை உண்டாகும்.

**அனைத்துஉம் ஆற்றவல்லார் மக்களால்லால் மற்றார்**
**இணையில்லை யாரும் அவர்க்கு.**

அனைத்துச் செயல்களையும் செய்ய வல்லவர் மக்களே! அவர்களுக்கு நிகர்யாரும் (எந்த அறிஞரும்) ஆக மாட்டார்கள்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

தோதாத்ரி அவர்களின் தத்துவார்த்தம் தொடர் கட்டுரை, துவண்டு கிடக்கும் தோழர்களுக்கு புத்துயிர் ஊட்டி எழுப்புவதாக அமைந்துள்ளது.

தொடரட்டும் அவரது பணி.

**– ரூபன் சந்திரசேகரன்,** கெங்கவல்லி, சேலம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

நஞ்சில் தோய்ந்த நாக்குகள் தலையங்கம் நஞ்சு தோய்ந்த நாக்கை சுட்டுப் பொசுக்குகிறது.

“நிலை கெட்டுப்போன நயவஞ்சகர்களின் நாக்குதான் உலகத்திலேயே பயங்கரமான ஆயுதம்“ என்ற பட்டுக்கோட்டையாரின் வாக்கை எடுத்துக் காட்டி முடித்திருப்பது மிகவும் சிறப்பு.

**– சந்திரப்பன்,** ஆரல்வாய் மொழி

**ஆசிரியர் ஜனசக்தி,**

தோழர் வி.ராதா ஒரு சகாப்தம். ஜனசக்தியோடு தொப்புள் கொடி உறவு கொண்டவர். சோட்டா ராதா என்று அழைக்கப்படுபவர். ஜனசக்தி வரலாற்றில் நிகழ்கால சாட்சியம் என்று உயிர்ப்புடன் எடுத்துக்காட்டி வி.ராதாவின் சுருக்கமான வரலாற்றை வடித்துள்ளார் சி.மகேந்திரன்.

**– வெள்ளைச்சாமி,** வத்தலகுண்டு

**ஆசிரியர் ஜனசக்தி,**

தேசிய கல்வி கொள்கையை, இணைய வழிப்பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தினால் ஏழை கிராமப்புற ஒடுக்கப்பட்ட மற்றும் பட்டியலின பழங்குடி மாணவர்களும் மற்றும் பொருளாதாரத்தில் முன்னேறிய மாணவர்களுக்கும் அதிகமான இடைவெளி ஏற்பட வாய்ப்புள்ளது என்று கே.கதிரவன் கூறியுள்ளது பொருத்தமான ஒன்று.

**– ராஜேந்திரன்,** ஒரத்தநாடு

### இராஜபாளையம் நகராட்சி 27வது வார்டு

## அவலநிலையை கண்டித்து சிபிஐ ஆர்ப்பாட்டம்

இராஜபாளையம் நகராட்சி 27வது வார்டில் புதிய சாலை போட ஏற்கனவே நன்றாக இருந்த சிமெண்ட சாலை உடைக்கப்பட்டு ஒருமாதமாகிறது. அப்பொழுது வாருகாலும் உடைந்து சாலை எல்லாம் சாக்கடை ஆறாக ஓடுகிறது. குடிநீர் குழாயும் உடைந்து வீடுகளுக்கு தண்ணீரும் வருவதில்லை. இந்த அவல நிலையை கண்டித்தும் உடனே நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் நகராட்சி அலுவலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. நகர துணை செயலாளர் வேலுச்சாமி தலைமை வகித்தார். கிளை செயலாளர் கணேசன் முன்னிலை வகித்தார். மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் வி.இரவி, நகர செயலாளர் பி.கே.விஜயன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

### வாய்க்காலை தூர்வாரக் கோரி

## கோரைப்புற்களுடன் கோரிக்கை மனு

தஞ்சையில் இருந்து நாகை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்கும் பணி நடைப் பெற்று வருகிறது. இந்த சாலையின் இருபுறங்களிலும் இருந்துவந்த வடிகால் வாய்க்காலானது அம்மாபேட்டையில் இருந்து பல்லவராயன்பேட்டை வரை தூர்ந்து போய் அடர்ந்த புதர்கள் மண்டி உள்ளது. இதனால் மழைக்காலங்களில் தண்ணீர் வடிவதில் தேக்கம் ஏற்பட்டு நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் அவலம் உள்ளது. உடனடியாக போர்க்கால அடிப்படையில் இந்த வாய்க்கால்களை மாவட்ட நிர்வாகம் தூர்வார வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதர் மண்டிய கோரைப்புற்களுடன் கோரிக்கை மனுவை, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய செயலாளர் வெங்கடேசன் வழங்கினார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் செந்தில்குமார், தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பாலு,ஒன்றிய நிர்வாகிகள் திருநாவுக்கரசு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## "வாழ்வில் வளம் பெற வள்ளுவம்" நூல் வெளியீட்டு விழா




சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் ஜூன் 11 அன்று நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சார்பில் "வாழ்வில் வளம் பெற வள்ளுவம்" எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. ஒன்றிய மற்றும் தமிழக அரசின் பல்வேறு உயர் பொறுப்புகளில் பதவி வகித்து ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியான இரா.பூரணலிங்கம் அவர்கள் எழுதிய இந்த நூலை நீதியரசர் ஆர்.மகாதேவன் அவர்கள் வெளியிட ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியான எம்.ராஜாராமன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவுக்கு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன் அவர்கள் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிக்கு வருகை புரிந்தவர்களை நிறுவனத்தின் பொது மேலாளர் தி.ரெத்தினசபாபதி அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

பத்திரிகையாளர் இந்து என்.ராம் மற்றும் தமிழக சுகாதாரத்துறைச் செயலர் ஆர்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான முன்னாள் இந்நாள் ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஏற்புரை ஆற்றிய நூலாசிரியர் இரா.பூரணலிங்கம் அவர்கள் தனக்கும் திருக்குறளுக்குமான தொடர்பு பள்ளிக்காலத்தில் மிகக் குறைந்த அளவே இருந்ததென்பதையும் கோவிட் தொற்றுக் காலத்தில்தான் அதனைத் தான் முழுமையாகப் புரிந்து படித்து மிகவும் வியந்துபோனதாகவும் குறிப்பிட்டார். அதன்பின்னர் திருக்குறள் குறித்த பல்வேறு உரைகளைப் படித்துப் பார்த்த பின்னர் மிகவும் ஆர்வத்தோடு தன் முயற்சியில் இந்த நூலை பல்வேறுபட்டவர்களுடன் ஆலோசித்து எழுதியதாகவும் தெரிவித்தார். நியூ செஞ்சுரி நிறுவனத்தார் மிக அழகாகப் பதிப்பித்திருக்கும் இந்த நூல் அனைவரிடமும் குறிப்பாக பள்ளி மாணவர்களிடம் சென்றடையவேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்தினார். நிகழ்ச்சியின் நிறைவாக டாக்டர் மு.ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறினார்.

## "விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்" நூல் வெளியீட்டு விழா

சுதந்தரப் போராட்ட வீரர், முத்தமிழ் வித்தகர் விஸ்வநாததாஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் திருவாரூர் முத்தமிழ் பண்பாட்டு பாசறையால் வெளியிடப்பட்டது. திருவாரூர் ஹோட்டல் செல்விஸ் பிளாட்டினம் அரங்கு நிறைந்த மக்கள் கூட்டத்தில் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் "விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்" என்ற நூலை வெளியிட்டார். நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் சார்பாக திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.க.மாரிமுத்து நூலை பெற்றுக்கொண்டார். நூலை எழுதிய வீ.தர்மதாஸ் நூலின் சிறப்புகளை எடுத்துரைத்தார். பாசறையின் செயலர் கந்தன், பாசறையின் தலைவர் ஆரூர்.சீனிவாசன் பேராசிரியர், புலவர் எண்கண் சா.மணி, வானிலை ஆய்வறிஞர் ந.செல்வகுமார், கண்வங்கி கலியபெருமாள், பெண்ணிய ஆளுமை மக்கள் மருத்துவர் அகிலா, பெண்ணிய ஆளுமை மக்கள் மருத்துவர் பு.ஜெயகுமாரி தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற செயலர் வீ.தர்மதாஸ் உள்ளிட்ட அனைவருக்கும் சேவை செம்மல் நினைவு கேடயங்கள் வழங்கப்பட்டது. மாநாட்டை வாழ்த்தி நகரமன்ற தலைவர் புவனபிரியா, ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் தேவா உள்ளிட்டோர் பேசினர்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட 11-வது மாநாடு




தூத்துக்குடியில் உள்ள டி.ஏ.திருமண மண்டபத்தில் கு.பாபு, மாநகர வார்டு உறுப்பினர் பு.தனலெட்சுமி, பி.பரமராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டு கொடியினை மூத்த தோழர் மரியம்பீவி ஏற்றி வைத்தார். மறைந்த மாவட்ட செயலாளர் அழகுமுதுபாண்டியன் நினைவாக கொண்டுவரப்பட்ட நினைவு ஜோதியினை கோ.பழனிச்சாமி பெற்றுக் கொண்டார். வரவேற்புரை யினை சி.மாடாசமி ஆற்றினார். மாநாட்டினை தொடங்கி வைத்து திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில துணை செயலாளருமான கே.சுப்பராயன் உரையாற்றினார். தேசியகுழு உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கோ.பழனிச்சாமி மாநாட்டினை நிறைவு செய்து வாழ்த்திப் பேசினர்.

மாவட்ட செயலாளராக ப.கரும்பன், துணை செயலாளர்களாக வ.பாலமுருகன், கு.பாபு, பொருளாளராக த.சுப்பிரமணியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தூத்துக்குடி மாவட்டம், வரலாற்றுப் புகழ்மிக்க சுதந்திர போராட்ட வீரர்களை கொண்டது. தூத்துக்குடி மாநகரத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் பொருட்டும் கப்பல் கட்டும் தளம் அமைக் வேண்டுமென மக்களின் கோரிக்கை நீண்டநாட்களாக உள்ளது. எனவே தமிழ்நாடு அரசு கப்பல் கட்டும் தளம் அமைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தின் பிரதான தொழிலான உப்பளம் அமைந்துள்ளது. மேலும் உப்பளத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள மழைக்கால நிவாரணத்தொகையினை தாமதமின்றி உடனடியாக வழங்கிட வேண்டுமென தமிழ்நாடு அரசை வலியுறுகிறோம். தூத்துக்குடியில் காற்றினை, நீரினை, நிலத்தினை மாசுப்படுத்தி மக்களுக்கு புற்றுநோய்களை உருவாக்கிய நச்சுகொல்லி ஸ்டெர்லைட் ஆலையை திறப்பதற்கு நாசகார ஸ்டெர்லைட் நிறுவனம் மக்களை திசை திருப்பும் வேலையை பணபலம் கொண்டு செய்து வருகிறது. அதனை தமிழ்நாடு அரசு கவனத்தில் கொண்டு அந்நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டு;ம.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதான சாலைகளிலுள்ள மேம்பாலங்கள் பழுதடைந்துள்ளன, எனவே அவற்றினை சீர்ப்படுத்திடவும், அடிக்கடி அதனால் ஏற்படும் போக்குவரத்து இடர்பாடுகளை போக்கிடவும், நடவடிக்கையினை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும். எட்டயபுரம் தாலுகாவிற்கு உட்பட்ட கிராமப்புறங் களிலுள்ள மாணவர்களின் நலன் கருதி எட்டயபுரத்தை மையாக வைத்து அரசு கலைக்கல்லூரி அமைத்திட வேண்டும். மகாகவி பாரதி பிறந்த எட்டயபுரத்தை தலைமை யிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் கோவில்பட்டி, புதூர், விளாத்திகுளம், கயத்தார் ஆகிய ஒன்றியங்களின் எல்கைக்குட்பட்ட கிராமங்களை ஒருங்கிணைத்து எட்டயபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைத்திட வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பாசன மானாவரி குளங்களை எதிர் வரும் மழைக்காலங்களுக்கு முன்பாக தூர்வாரி பாசனத்திற்கு ஏற்றவாறு குளங்களை சீரமைக்க வேண்டும். ஆழ்வை ஒன்றியத்திற்குட்பட்ட தென்கரை குளத்தை மராமத்து செய்யப்பட வேண்டும்.

ஸ்ரீவைகுண்டம், ஏரல், ஆழ்வை பகுதியில் வாழை சாகுபடி மிகவும் பிரதானமான தொழில், அதிகமான விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களுக்கும் வாழ்வாதாரமாக உள்ளது. அம்மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குளிர்சாதன கிடங்கு பேட்டா நகரத்தில் அமைத்து கொடுக்க வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

ஏரல் தாலுகாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்திட வேண்டும்.

கோவில்பட்டி, கயத்தார் மற்றும் எட்டயபுரம் தாலுகா பகுதிகளில் இயங்கும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வினை வழங்கிட தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மாதர் தேசிய சம்மேளனம் அகஸ்தீஸ்வரம் தாலுகா மாநாடு

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் அகஸ்தீஸ்வரம் தாலுகா மாநாடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் வடக்கு தாமரை குளத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ஆர்.செல்வராணி ழிதிமிகீ மாவட்ட அமைப்பாளர் தலைமை தாங்கினார். வசந்தி, சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அருள் குமார் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் அருணாச்சலம் வாழ்த்தி பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருளாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ் சிறப்புரையாற்றினார். என்.எஸ். ராணி நன்றி கூறினார்.

பரிமளா தலைவராகவும், கல்பனா செயலாளராகவும், என்.எஸ்.ராணி பொருளாளராகவும் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டனர்.

திமுக தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு நிபந்தனை இன்றி அனைத்து குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கிட வேண்டும்.

மின் கட்டணத்தை மாதம் தோறும் அளவீடு செய்து வாக்குறுதிகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




## உசிலப்பட்டியில் மாநில உரிமை மீட்பு விளக்க கூட்டம்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் மாநில உரிமை மீட்பு விளக்க கூட்டம் நடைபெற்றது. திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அருமைத் தலைவர் தா.பாண்டியன் அவர்களுக்கு புகழாரம் செய்யும் நிகழ்வாக அவரது படத்தை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

கூட்டத்தில் பகுத்தறிவார் கழக தலைவர் அ.மன்னர் மன்னன், பவுன்ராசு, உசிலை சட்டமன்ற முன்னாள் திமுக எம்எல்ஏ பெ.ஆசையன், மதிமுக நகர செயலாளர் ஜே.டி. குமார்,முனியாண்டி, மார்க்சிஸ்ட் கட்சியின் ராஜா, இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் உசிலை ஒன்றிய செயலாளர்ஜெயக்கொடி, ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் உசிலை ஜீவா மற்றும் ஏஐடியூசியின் ராமர், பழனிச்சாமி , மலையாள உட்பட பலர் பங்கேற்றனர்.

# வி.ராதாகிருஷ்ணன் 101 வது பிறந்தநாள் விழா

ஜனசக்தி தோழர் வி.ராதாகிருஷ்ணன் அவர்களின் நூறாண்டு நிறைவு 101 வது பிறந்தநாள் விழா அம்பத்தூர் நியூ செஞ்சுரி காலனி அவரது இல்லத்தில் எளிமையாக கொண்டாடப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி கலந்துகொண்டு வி.ராதா கிருஷ்ணன் அவர்கள் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்கள், கட்சிக்கும் ஜன சக்திக்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு குறித்து விளக்கிப் பேசினார்.

நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாநில துணைப் பொதுச் செயலாளர் கே இரவி, ராஜேஸ்வரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா கருணாநிதி, அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா விஜயகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ். கண்ணன், கவிஞர் ஜீவபாரதி, கவிஞர் பழனி சுந்தரேசன், மார்க்சிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டக்குழு உறுப்பினர்கள் சி.சுந்தர்ரா, லெனின் சுந்தர், சிஐடியு ரவிச்சந்திரன், ராமு, சிபிஐ மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளர் ப.மாரியப்பன், நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.வி.ஜெகநாதன், அம்பத்தூர் பகுதி துணைச் செயலாளர் ஆர்.லோகநாதன்.

ஜனசக்தி மேலாளர் இளசை கணேசன், ஆவடி மாநகர செயலாளர் எஸ் மயில்வாகனன், இந்திய சோவியத் கலாச்சார கழகத்தின் முன்னாள் செயலாளர் தங்கப்பன், நியூ செஞ்சரி ஜசிஎப் காலனி கிளை உறுப்பினர்கள் ஆர்



வேலு, பி அமிர்த லட்சுமி

சி சந்திரமணி, வெண்ணிலா துரைசாமி மற்றும் நண்பர்கள் தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

எளிமையான நிகழ்ச்சியை அவரது குடும்பத்தார் கீதா, ராமலிங்கம், டாக்டர் சாந்தி ,டாக்டர் மனோகர், டாக்டர் சுவாதி, மற்றும் ஜான்சி ஆகியோருடன் இணைந்து தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் இரா துரைசாமி, நியூ செஞ்சுரி ஐசிஎப் காலனி கட்சி கிளை செயலாளர் என் கோபிநாதன் ஆகியோர் ஒருங்கிணைத்த னர்.

நேரிலும், தொலைபேசி, வாட்ஸ்அப், பத்திரிக்கைகள் மற்றும் சமூக ஊடகங்களில் வாழ்த்துக்களை தெரிவித்த அனைத்து தோழர்கள் நண்பர்கள் உள்ளிட்டோருக்கு அவரது குடும்பத்தின் சார்பிலும் ,இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நிறைவாக தோழர் ராதா அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார்.

# கரீப் பருவத்திற்கு 3 முதல் 5 சதம் மட்டுமே விலை உயர்த்தி ஒன்றிய அரசு அறிவிப்பு

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டனம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

வேளாண் விளைபொருள் மற்றும் உற்பத்திக்கான செலவு திட்டமிடல்குழு பரிந்துரையை ஏற்று ஒன்றிய அரசு விவசாய விளைபொருட்களுக்கு நிகழாண்டை விட 3 சதம் முதல் ஐந்து சதம் வரை மட்டுமே விலையை உயர்த்தி அறிவித்திருக்கிறது.

மேலும் கோதுமை, நெல் ஆகியவை தற்போது இந்தியாவிற்கும் வெளிநாடு ஏற்றுமதிக்கும் பெரிய அளவில் தேவைப்படும் நேரத்தில் கூட விவசாயிகளுக்கு விலையை உயர்த்தி கொடுத்திட ஒன்றிய அரசுக்கு மனமில்லை. இந்தவிலை உயர்வு என்பது ஏற்கத்தக்கதல்ல. இடுபொருட்கள் மற்றும் ஏனைய செலவுகள் 15 முதல் 20 சதம் வரை கடந்த ஓராண்டில் உயர்ந்திருக்கும் நிலையில் 3 முதல் 5 சதம் விலை உயர்வு என்பது விவசாயிகளை வஞ்சிக்கும் செயலாகும். டி.ஏ.பி.பொட்டாஸ் போன்ற இரசாயன உரங்கள் 15 சதம் வரை உயர்ந்திருக்கிறது.

இரசாயன உரங்களின் தட்டுப்பாட்டால் கூடுதல் விலை கொடுத்து அல்லது துணைப் பொருட்களையும் வாங்க வேண்டிய நிலை உள்ளது. உரம் கிடைக்காது மகசூல் குறைவையும் விவசாயிகள் சந்தித்து வருகின்றனர். இந்த நிலையில் நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 100 அதேபோல் பிற பொருட்களுக்கும் பொருத்தமில்லாத விலையை அறிவித்துவிட்டு வேளாண் கமிஷன் பரிந்துரைப்படி உற்பத்திக்கான செலவுடன் 50 சதம் சேர்த்து அறிவித்ததாக ஒன்றிய அரசு பெருமைப்பட்டுக் கொள்கிறது.

வேளாண் விளை பொருட்களுக்கான உற்பத்தி செலவு என்பது சி2+படி அதாவது உற்பத்தி செலவு, நிலமதிப்பு, குடும்ப பாதுகாப்பு பராமரிப்பு செலவு மற்றும் இதற்குரிய வட்டியையும் சேர்த்து உற்பத்தி செலவாக கணக்கிட்டு இத்துடன் 50 சதம் சேர்த்து வழங்கிட வேண்டுமெனத்தான் வேளாண் கமிஷன் பரிந்துரையாகும். இதை வலியுறுத்தி தான் கடந்த 13 மாதங்களாக இந்தியா முழுவதும் விவசாயிகள் ஒரு ஆண்டுக்கும் மேலாக போராடிவந்த சூழலில் இதை ஏற்று பரிசீலிப்பதாக மத்திய அரசு ஒப்புக்கொண்ட நிலையில் தான் போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த முறையில் அமுல்படுத்த வேண்டிய ஒன்றிய அரசு ஒப்பந்தத்திற்கு மாறாக மீண்டும் விவசாயிகளை ஏமாற்றி வஞ்சிக்கும் செயலை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டிக்கிறது. ஒப்பந்தப்படி சி2+ அடிப்படையில் வேளாண் விளை பொருளுக்கு உடனடியாக அதற்கேற்ப விலையை உயர்த்தி வழங்கிட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# அ.அசரப் அலி இல்ல திருமண விழா





இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டக்குழு உறுப்பினரும், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் கோவை மாவட்டச் செயலாளருமான அ.அசரப் அலி – அ.கீதா தம்பதியினரின் மகள் இஷ்ரத் ஃபரிதா, மேட்டுப்பாளையம் ஜெ.மைக்கேல் ஜான்சன் – எம்.விஜயா தம்பதியினரின் மகன் எம்.விஜய் ஆகியோரின் இணையேற்பு விழா ஜூன் 5 அன்று கோவை மாவட்டம், தடாகம் சாலை, லூனா நகர் வித்யா காலனியில் உள்ள கே.வி.எம்.திருமண மஹாலில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாமன்ற உறுப்பினர் கே.புருசோத்தமன் வரவேற்புரை நிகழ்த்த, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் கே. சுப்பராயன் தலைமையேற்று இணையேற்பு விழாவை நடத்தி வைத்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளரும் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளருமான மு.வீரபாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் த.லெனின், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருட்டிணன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் இரா.திருமலை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் சி.பத்மநாபன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோவை மாவட்டச் செயலாளர் ஆர்.ஆர்.மோகன் குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மேற்கு மண்டல பொறுப்பாளர் சுசி.கலையரசன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் க.பாரதி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் சு.பழனிச்சாமி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் சி.தினேஷ், கோவை மாநகராட்சியின் முன்னாள் மேயர் காலனி வெங்கிடாசலம் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் மௌ.குணசேகர், கட்சியின் மேற்கு மண்டலச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட தலைவர் பி.முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், மல்லிகா புருசோத்தமன், பிரபா ரவீந்திரன், எம்.டி. மோகன் உள்ளிட்டோரும் கட்சியின் முன்னணி தலைவர்களும், தோழர்களும் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலப் பொறுப்பாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

மணமக்கள் சார்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரூபாய் 5000, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்திற்கு ரூபாய் 3000, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்திற்கு ரூபாய் 3000, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்திற்கு ரூபாய் 3000 நிதியாக வழங்கப்பட்டது.

# சி.பி.ஐ. புதிய கிளை தொடக்க விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய கிளை துவக்கி கொடியேற்று விழா திருவண்ணாமலை வட்டம், பழையனூர் கிராமத்தில் நடைபெற்றது. கிளை செயலாளர் ஆர்.குமார் தலைமை தாங்கினார். கே. வெங்கடேசன் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் வே.முத்தையன் கட்சி கொடியேற்றி சிறப்புரை செய்தார். மாவட்ட துணை செயலாளர் இரா. தங்கரா, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் த.ராசேந்திரன், மாவட்ட குழு உறுப்பினர் சு.கிருஷ்ணராஜ், ஆர்.ராமமூர்த்தி, ஜெயராமன், அங்கப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். முடிவில் துணை செயலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

**நியாயவிலை கடை ஊழியர்களுக்கு நிறுத்தி வைத்த**

# பஞ்சப்படியை உடனே வழங்குக

## ● ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்

வத்திராயிருப்பில் ஏஐடியுசி கூட்டுறவு சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஏஐடியுசி பண்டகசாலை கூட்டுறவு ஊழியர்கள் சங்க தலைவர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ பேசு கையில் , நியாயவிலை கடை ஊழியர்களுக்கு 31 சதவீத பஞ்சப்படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது . அதை உடனடியாக வழங்க வேண்டும். வழங்கப்படும் பொருட்களை மக்கள் நலன் கருதி பைகளில் பார்சல் முறையில் வழங்க வேண்டும் என்றார். வட்ட செயலாளர் கோவிந்தன் உள்ளிட்டோர் பேசினார். ஆர்ப்பாட்டத்தில் கூட்டுறவு சங்க ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.




# மாதர் சங்க சீர்காழி ஒன்றிய பேரவை

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஒன்றியத்தில் மாதர் சங்க ஒன்றிய பேரவை இந்திரா காந்தி தலைமையில், கொடியினை ரமாதேவி ஏற்றிவத்து பேரவை தொடங்கப்பட்டது. இதில் 80க்கும் மேற்பட்ட மாதர்கள் கலந்துகொண்டு பல தீர்மானங்களை நிறைவேற்றினர். ஒன்றிய செயலாளராக தேவகி, தலைவராக இந்திரா காந்தி, துணைச் செயலாளராக ரமாதேவி, துணைத் தலைவராக பரமேஸ்வரி, பொருளாளராக வாசுகி ஆகியோர் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டனர். இதில் கட்சியின் மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன், சு.சுந்தரய்யா, கட்சியின் ஒன்றிய செயலாளர் வே.நீதி சோழன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புரட்சியாளர் சேகுவேரா 94வது பிறந்தநாள் விழா

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம், மெய்யூர் ஊராட்சி இந்திராநகர் கிளையில் புரட்சியாளர் சேகுவேரா 94வது பிறந்தநாள் விழா கிளை தலைவர் ப.மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் கே.வி.சேகுவேராதாஸ் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட துணை செயலாளர் எம்.நாகராஜ், தொகுதி தலைவர் செ.இன்பராஜ், சந்திரமோகன், சஞ்சை, புத்தர், சுரேஷ், சரவண் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

# மாயாண்டி பணிநிறைவு விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

கிருஷ்ணன்கோவிலில் கிருஷ்ணாபுரம் மின்சாரவாரிய சிறப்புநிலைமுகவர் எ.மாயாண்டி அவர்கள் பணிநிறைவு விழா நடைபெற்றது. செயற்பொறியாளர் திருநாவுக்கரசு தலைமை வகித்தார். முனியாண்டி வரவேற்றார். சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் , வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, ஏம்பளாயீஸ் பெடரேசன் மாநில தலைவர் மணிகண்டன் உள்பட பலர் வாழ்த்தி பேசினார்கள். அபொழுது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ 1000 வழங்கப்பட்டது.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் கோவை மாவட்டச் செயலாளர் கே.சுமதி ஆர்.கந்தசாமி தம்பதியினரின் மகன் கே.பிரசாந்த், கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம் டி.பி.வி. மில் கிளையின் முன்னாள் செயலாளர் சி.வெள்ளிங்கிரி வி.ராதாமணி தம்பதியினரின் மகள் வி.ரம்யா ஆகியோரது திருமண வரவேற்பு விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட துணைச் செயலாளர் சி.சிவசாமி ஆகியோரிடத்தில் மணமக்கள் சார்பில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.3000 வழங்கப்பட்டது.

# திமிங்கில வேட்டை

இயற்கையின் படைப்பில் பல்வேறு அதிசயங்கள் இருக்கின்றன. கடல், மலை, காடுகள் என அனைத்திலும் இயற்கை பல்வேறு அதிசயங்களை தன்னுள் புதைத்து வைத்திருக்கிறது. ஆஹா ! கடலின் மடியில் எத்தனை உயிர்கள். எத்தனை அற்புதங்கள் ! இவற்றைப் பார்ப்பதிலும், அனுபவிப்பதிலும் மனிதர்களுக்கு எத்தனை பரவசங்கள். கடல் மனிதர்களுக்கு குதுகலங்களை வாரி வாரி வழங்கக் கூடியவை. அதனால் தான் கடல் நீரில் காலடி பட்டாலே மனிதன் உள்ளக் கிளர்ச்சி அடைகிறான். இப்படி மனிதர்களை குதூகலப்படுத்தும் கடலின் பிள்ளைதான் திமிங்கலம். கடலில் மௌன ஓவியங்கள் போல் உலாவரும் திமிங்கலங்கள் பரம சாது, யாருக்கும் ஊரு விளைவிக்காதவை. இப்படி வாழ்வதுதான் யாருக்கும் பிடிப்பதில்லையே, எனவே இப்படிப்பட்டவர்கள் எளிதாக வேட்டையாடப் படுகிறார்கள். தன்னை தீண்டாதவரை எந்த திமிங்கலமும் கப்பலையோ, மனிதர்களையோ தாக்கியதே இல்லை. அப்படிப்பட்ட உயிரின் மீது மனிதனுக்கு ஏன் வஞ்சம் ஏற்படுகிறது என்பது வியப்பிற்குரியது ! பொருளாதார நலன் என்று வருகிறபோது சாதுவாவது? சண்டாளர் ஆவது? எல்லாம் ஒன்றுதான்.




இயற்கையின் பெரும் பிரிவுகளில் ஒன்றான கடலைப் பற்றி அதிகம் ஒன்றும் தெரியாத நிலையில், அதன் மீதான தாக்குதல் மட்டும் மனிதகுலம் தொடர்ந்து தொய்வின்றி நடத்தி வருகிறது. அந்தத் தாக்குதல்களில் ஒன்றுதான் திமிங்கல வேட்டை.

இந்த பூவுலகின் விருந்தினர்கள் நாம். அதை மறந்துவிட்டு அதன் எஜமானர்களாக சில சமயம் மாறி விடுகிறோம். அதன் விளைவுதான் மனிதகுலம் இன்று அனுபவித்து வரும் துன்பங்களுக்கு எல்லாம் காரணமாகிவிடுகிறது. மனிதனின் பேராசைக்கு பலியாவது இயற்கை மட்டுமல்ல, வேட்டையாடும் அந்த மனிதனும் தான் என்பதை நாம் உணர்வதில்லை. இயற்கைக்கு எதிராக மனிதன் நடத்திய ஒரு தாக்குதலின் கதை தான் எழுத்தாளர் ஹெர்மன் மெல்வில் எழுதிய திமிங்கல வேட்டை. திமிங்கல வேட்டை என்ற இந்த புதினம். வீண் வஞ்சம், வீராப்பு காரணமாக குறிப்பிட்ட ஒரு திமிங்கலத்தை கொல்ல புறப்பட்டுப் போன கடலோடிகள் சிலரின் கதை இது. உலகின் தலைசிறந்த பத்து நாவல்களில் ஒன்றாக கருதப்படும் 'மோபி டிக் ' என்ற பிரம்மாண்ட நாவல். தற்போது தமிழில் மோகன ரூபன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது . கடலைப் பற்றியும் அதில் வாழும் உயிரினங்களைப் பற்றியும் அதை வேட்டையாட புறப்படும் வேட்டைக்காரர்களின் குரூரங்களையும் நாம் அறிந்துகொள்ள முடியும். இந் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். – **இன்சுவை பாரதி**

**ஆசிரியர் : ஹெர்மன் மெல்வில், தமிழில் : மோகன ரூபன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்,**
**16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14**
**பக்கங்கள் : 204 விலை: ரூ.175**

## நூல் நயம்

# தனிநாயக அடிகளாரின் ஒப்பிலக்கியச் சிந்தனைகள்

மேற்கத்திய சிந்தனை மரபின் தாக்கத்தால் தமிழில் உருவான அறிவுத்துறைகளில் ஒப்பிலக்கிய மும் ஒன்றாகும். நமது அறிஞர் பெருமக்கள் தமிழ் செவ்வியல் இலக்கியங்களை உலக செவ்வியல் இலக்கியங்களுடன் ஒப்பிட்டுக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். இதில் குறிப்பிட்டு சொல்லத்தக்க ஒருவர் தனிநாயக அடிகளார் ஆவார். அவரது ஒப்பிலக்கிய சிந்தனைகளை வெளிக்காட்டும் வகையில் இந்நூலை முனைவர் பா.ஆனந்தகுமார் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியங்களை உலக அரங்கில் உரையாடலுக்காக முன் வைத்தவர்களில் தனிநாயகம் அடிகளாருக்கு தனித்த பெருமை உண்டு. இலக்கியத்தை சமூகத்தோடும், வரலாற்றோடும் தொடர்புபடுத்திப் பார்க்கும் அறிவியல் அடிப்படையில் அமைந்த பிரென்ச் ஒப்பிலக்கிய பார்வையே தனிநாயகம் அடிகளாரிடம் மேலோங்கி காணப்படுகிறது.




இலக்கியங்களுக்கு இடையிலான இனைவு களை,வேற்றுமைகளை கவனப் படுத்துகின்ற போது அவற்றுக்கான காரண, காரியங்களையும் அடிகளார் தெளிவாக விளக்கியுள்ளார். பழந்தமிழ் அகப்பாடல்களில் இயற்கை பாடப்பட்டிருக்கும் திறத்தை கிரேக்க, ஐரோப்பிய,சமஸ்கிருத மொழி இலக்கியங்களில் இயற்கை பாடப்பட்டிருக்கும் திறத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.

மலேசியாவில் அவர் பணியாற்றியது இந்தியவியல் துறை. எனவே, தமிழ் குறித்த உரையாடலை இந்திய சிந்தனை என்ற பொது தளத்தில் வைத்தே அவர் தொடங்க வேண்டி இருந்தது. மேலும் அவர் பணியாற்றிய காலத்தில் ஐரோப்பிய காலனி ஆதிக்கம் கல்விப்புலத்தில் கட்டமைத்து இருந்த கிரேக்கம் மையம்,ஐரோப்பிய மையம், சமஸ்கிருதம் மையம் என்கிற ஆதிக்கப் பார்வைகள் மேலோங்கி இருந்தன. இங்கு தமிழுக்கான இடம் இல்லை. எனவே, இத்தகைய ஆதிக்க பார்வைகளோடு உரையாடியே தமிழ் சிந்தனை மரபை, தமிழ்ப் பண்பாட்டின் தனித்த அடையாளங்களை நிறுவ வேண்டிய தேவையும் சூழலும் அடிகளாருக்கு இருந்தது. கீழ்திசை நாடுகள், குறிப்பாக இந்தியா, தமிழ் புறக்கணிக்கப்படுகின்ற ஆய்வு சிக்கலை தனிநாயக அடிகளார் தனது பல ஆய்வுகளில் எடுத்துக்காட்டியுள்ளார். அடிகளாரின் தமிழியல் ஆய்வுகளை, ஒப்பிலக்கிய கண்ணோட்டத்துடன் அறிமுகப்படுத்துவதாக இச்சிறு நூல் அமைகிறது. எனவே இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– சமரன்

**நூலாசிரியர் : முனைவர் பா.ஆனந்தகுமார்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 36 விலை: ரூ.30**

**வாரம் தோறும் வெளிவரும்**
**ஜனசக்தி - நூல் நயம்**
**புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.**
தொடர்புக்கு : **8220468816**

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## வெனிசூலாவில்

# நேட்டோ எதிர்ப்பு மாநாடு:

இந்த மாதம் 28, 29 மற்றும் 30 ஆகிய மூன்று நாட்கள் ஸ்பெயின் நாட்டு தலைநகர் மேட்ரிட்–ல் நேட்டோ அமைப்பின் மாநாடு நடைபெற உள்ளது. இந்தச் சூழலில், 28 மற்றும் 29 ஆகிய இரண்டு நாட்கள் வெனிசூலா நாட்டு டச்சிரா மாகாணத்தில் உள்ள சான் கிரிஸ்டோஃபல் மாநகரில் நேட்டோ எதிர்ப்பு மாநாடும் நடைபெற உள்ளது என்று வெனிசூலா நாடாளுமன்ற உறுப்பினரான ஜூலியோ சாவேஸ் ரஷ்ய செய்தி நிறுவனமான ஷ்பூட்னிக்கிடம் தெரிவித்துள்ளார். டச்சிரா மாகாணம் கொலம்பிய நாட்டின் எல்லைப்புறத்தில் அமைந்துள்ளது. கொலம்பிய நாடு நேட்டோவில் இணைய முயன்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கிரிஸ்டோஃபல் மாநகரில் நடைபெற உள்ள நேட்டோ எதிர்ப்பு மாநாட்டில் இலத்தீன் அமெரிக்க நாடுகள் மட்டுமின்றி இதர பிராந்தியத்தில் உள்ள எண்ணற்ற நாடுகள் பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது போன்ற நேட்டோ எதிர்ப்பு நடவடிக்கைகள் பெல்ஜியம் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் நடைபெறும் என்று ஜூலியோ சாவேஸ் தெரிவித்துள்ளார். கொலம்பியா, பூகோள ரீதியில் வெனிசூலாவின் எல்லைப்புற அண்டை நாடாக இருப்பதாலும், நேட்டோ அமைப்புடன் நெருக்கமாக உள்ள நாடாக இருப்பதாலும், கூலிப்படையினரின் வெனிசூலா ஆக்கிரமிப்புச் செயல்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்தப் பின்னணியில், வெனிசூலாவில் நடைபெறும் நேட்டோ எதிர்ப்பு மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

நேட்டோ அமைப்பு நீடித்திருப்பதற்கான வரலாற்றுப்பூர்வ காரணங்கள் எதுவும் தற்போது இல்லை. எனவே, அந்த அமைப்பு கலைக்கப்பட வேண்டும் என்று உலகம் முழுவதும் பரவிப் படர்ந்துள்ள கம்யூனிஸ்டுகள் மற்றும் இடதுசாரி ஜனநாயக அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

# துப்பாக்கி வன்முறைக்கு எதிராக அமெரிக்க மக்கள் பேரணி




அண்மைக்காலமாக அமெரிக்காவில் அதிகரித்து வரும் துப்பாக்கி வன்முறையை எதிர்த்தும், துப்பாக்கி சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்று கோரியும் அமெரிக் காவின் பல்வேறு பகுதிகளில் மக்கள் அணிதிரண்டு பேரணியாகச் சென்றனர்.

அமெரிக்காவின் டெக்சாஸ், நியூயார்க், ஒக்லஹோமா, கலிபோர்னியா உள்ளிட்ட பல பகுதிகளில் ஏற்படும் தொடர் வன்முறைகளைத் தடுக்க கடுமையான துப் பாக்கி சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று ஆயி ரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பேரணியாகச் சென்றனர். பேரணியில் பங்கேற்ற கொலம்பியா மேயர் முரியல் பவுசர் பேசும்போது, " பொறுத்தது போதும். நான் இன்று ஒரு மேயராகவும், தாயாகவும், லட்சக்கணக்கான அமெரிக்க மக்களின் சார்பாகவும் பேசுகிறேன். நமது குழந்தைகளைத் துப்பாக்கி வன்முறை யிலிருந்து பாதுகாக்க வேண்டும். நாடாளுமன்றம் அதற்கான பணியைச் செய்ய வேண்டும்" என்று முழங்கினார்.

மேலும், இப்பேரணியில் சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டு புதிய துப்பாக்கி சட்டம் வேண்டும் என்று பேசினர். இந்த நிலையில், சிகாகோவில் கடந்த வாரத்தில் மட்டும் துப்பாக்கி வன்முறைக்கு 5 பேர் பலியாகி உள்ளனர். அண்மையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள தொடக்கப் பள்ளியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 19 சிறுவர்கள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர். இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்ட 18 வயதான இளைஞர் போலீஸாரால் கொல்லப்பட்டார். பள்ளிச் சிறுவர்களைப் பாதுகாக்கப் போராடிய இரண்டு ஆசிரியர்களும் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் அமெரிக்காவை அதிர்ச்சியடையச் செய்தது.

இந்த நிலையில், அமெரிக்க பிரபலங்கள் பலரும் அமெரிக்காவில் துப்பாக்கி வாங்குவது தொடர்பாக சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்றும், துப்பாக்கி வாங்குவதற்கான வயதை அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

முதலாளித்துவ பொருளாதார சமூக அமைப்பில் பலவித சமூக நோய்களும், வன்முறைகளும் அதிகரிக்கும் என்பது சமூக விஞ்ஞானத்தின் அடிப்படையான பாடங்களில் ஒன்று ஆகும். இதனை அமெரிக்க நிகழ்வுகளும் நிரூபித்து வருகின்றன.

# மரண தண்டனையை ஒழித்தது மலேசியா

மரண தண்டனைகள் ரத்து செய்யப்படுவதாக மலேசிய அரசு அறிவித்துள்ளது. இனி மரண தண்டனைகளுக்கு பதிலாக மாற்று தண்டனைகள் வழங்கப்படும் என்றும் மலேசிய அரசின் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மலேசிய சட்டத்துறை அமைச்சர் வான் ஜுனைதி ஜாஃபர் கூறும்போது, "தூக்கு தண்டனைக்கு எதிரான மசோதாவை அமைச்சரவை ஒப்புக்கொண்டது. மரண தண்டனைக்குப் பதிலாக என்னென்ன தண்டனை களை வழங்கலாம் என்பது குறித்து மேலும் ஆய்வு நடத் தப்படும். மரண தண்டனை விவகாரத்தில் எடுக்கப் பட்ட முடிவு, அனைத்துத் தரப்பினரின் உரிமைகள் பாதுகாக் கப்படுவதையும், அவற்றுக்கு உத்தரவாதம் அளிப்பதையும் உறுதி செய்வதில் மலேசிய அரசாங்கத்தின் முனைப்பைக் காட்டுகிறது" என்று தெரிவித்தார்.

மலேசிய அரசின் இந்த முடிவின் மூலம், அந்நாட் டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 1000க்கும் அதிக மானவர்களுக்கு அந்தத் தண்டனை நிறைவேற்றப் படாது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மலேசியாவில் போதைப்பொருள் கடத்தல், கொலை உள் ளிட்ட 11 குற்றங்களுக்கு மரண தண்டனைகள் வழக்கப் பட்டு வந்தன. மரண தண்டனைகளுக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்த நிலையில், மரண தண்டனையை மலேசிய அரசு ஒழித்துள்ளது கவனிக்கத் தகுந்ததாகும்.

இந்தியாவிலும் மரண தண்டனைக்கு எதிரான கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடாகும். இந்திய நாடாளுமன்ற மாநிலங் களவையில் நியமன உறுப்பினராகப் பொறுப்பு வகித்த பிரித்திவிராஜ் கபூர் 1958ஆம் ஆண்டில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கான தனி நபர் சட்ட முன்வடிவை கொண்டு வந்தார்.

1961ஆம் ஆண்டில் மாநிலங்களவையில் சாவித்திரி தேவி நிகாம் இதே நோக்கத்தை முன்வைத்து தனி நபர் சட்டமுன்வடிவை கொண்டு வந்தார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 2016ஆம் ஆண்டு ஜூலை 29 அன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய தேசிய செயலாளர் டி.ராஜா, மரண தண்டனைக்கு எதிராக தனிநபர் சட்டமுன் வடிவை கொண்டு வந்தார்.2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியான இந்திய சட்ட ஆணையத்தின் 262வது அறிக்கையில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். உச்சநீதிமன்றமும் கொள்கை அளவில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர் மரண தண்டனை கூடாது என்று இந்தியா அழுத்தம் திருத்தமாக உரைத்திட வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



க.மு.வீரபாண்டியன்



# மொழியும் மொழிக் கலப்பும்!

**கலந்திருப்பதும், சார்ந்திருப்பதும், உலக வாழ்வியலில் தவிர்க்க இயலாத ஒன்று. உயிரினங்கள் துவங்கி மனிதர்கள் வரை ஒன்றை ஒன்று சார்ந்த சார்பியலில் உலகம் தழைக்கிறது.**

புதிய பிறப்பு இயற்கையின் மீது மனித உழைப்பு தோற்று விக்கும் புதிய செல்வங்கள் என மண்ணைச் சார்ந்து மரம், மரம் சார்ந்து நிழல் இப்படிதான். இரவு சார்ந்து பகல், பகல் சார்ந்து இரவு எனப் பூமி சுழல்கிறது உயிரினம் வாழ்கிறது. அனைத்திலும் மாறுதல் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதில் மொழியும் அடங்கும்.

மொழி மாறுதலுக்குள்ளாகிறது, ஓசை, நயம், பொருள் என மாறுதலுக்குள்ளாகிறது. அனைத்திலும் கலப்புறுவதை ஏற்கிற உலகம் மொழியில் கலப்படத்தை அதாவது மொழி தூய்மை கெடுவதை ஏற்பதில்லை.

லத்தீன், பிரெஞ்சு, எபிரேயம், கிரேக்கம், பிராகிருதம், ஹீப்ரு, சீனா, தமிழ், சமஸ்கிருதம் என தொன்மை மொழி களாகட்டும்.

ஆங்கிலம் போன்ற வரலாற்றில் இடையில் தோன்றிய மொழிகளாகட்டும் அனைத்துமே தம் மொழி தூய்மை கெடுவதை ஏற்பதில்லை. ஒவ்வொன்றும் தம் தூய்மைக்காகப் போராடியே வந்துள்ளன.

இருப்பினும் உற்பத்தி, விநியோகப் படை எடுப்பு – புலம் பெயர்தல், வணிகம், சுற்றுப் பயணம் என உலகம் தவிர்க்க இயலாத சூழலால் – மானுட மொழிகள் ஒன்றோடு ஒன்று கலக்கிறது – ஒன்றை ஒன்று நிரப்பிக் கொள்கிறது.

சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழும் போதும், அறிவு வளர்ச்சியில் அபார முன்னேற்றம் ஏற்படும்போதும், மொழியும் அதற்கேற்றவாறு தன்னை புதுப்பித்துக்கொள்ள நேரிடுகிறது. அதாவது மொழி புதுமைப் புனைவை ஏற்கிறது.

புதிய புதிய தொழில்நுட்ப கருவிகள் – அறிவியல் நுட்பங்கள் தோன்றி வளரும் போது எத்தகைய மொழியிலும் அதற்குரிய வார்த்தைகள் உண்டா? கருத்துக்கள் உண்டா? என்றால் இல்லை என்றே கூறலாம்.

இங்கு மொழி புதிய சொற்களை படைத்துக் கொள்ள வேண்டும். அதுவரை ஏதாவது, வழக்குமொழி அல்லது சூழ லுக்கு ஏற்றவாறு பிறமொழி ஏற்றுத் தீரும் கட்டாயமும் உள்ளது.

திடீர் புயலுக்கும், நோய்த் தொற்றுக்கும், கடல் அலை சீற்றத்திற்கும் கூட புதிது புதிதாய் பெயர் சூட்டுகிறார்கள். உலக மொழிகள் இதனை ஏற்க வேண்டிய கட்டாயமும் இருப்பதை கருத்தில் கொள்ள வேண்டும். சுனாமி, வார்தா கொரானா கோவிட் 19 என..

மனித வாழ்வில் அறிதல், தெரிவித்தல், இவற்றின் குறியீட்டு முறைதான் மொழி.

சமுதாய உழைப்பு உற்பத்தி வளர்ச்சிப் போக்கில் தோன்றிய ஒரு புறக்கணிக்க முடியாத நிகழ்வாகும். இன்றியமையாத மனிதகுல இணைப்புக் கருவி இது.

மொழி மக்களை ஒன்றுபடுத்துகிறது, அவர்களின் தனித்தன்மைகளையும் பொதுத் தன்மைகளையும் காக்கிறது.

**மார்க்ஸ் – ஏங்கல்ஸ் போன்ற மேதைகள் யாவரும் உழைப்பிலிருந்துதான் மொழி பிறந்தது என்கிறார்கள்.**

உணவு தேடி அலைந்து திரிந்த போதும், வேட்டையாடும் அவசியம் ஏற்பட்ட போதும், கூட்டாக இருக்க வேண்டிய சூழலில் – எண்ணங்களை வெளிப்படுத்த மொழி தேவைப்பட்டது.

உழைப்பு தான் விலங்கினை, விலங்கு மனிதனாக உந்தியது. மனித தோற்றுருவுக்கு உந்தித் தள்ளியது. உழைப் பிலிருந்து தோன்றிய மொழி பின்னர் உழைப்புத் திறன்களை செம்மைப்படுத்தியது. அதனை வளர்த்தெடுத்தது.

உழைப்பு மொழி – உற்பத்தி – மொழி என சமூகம் படிமுறை களைக் கண்டது – இதனோடு பண்பாடும் வளர்ந்தது.

சமுதாயம் இல்லாமல் உழைப்பு – மொழி இல்லை என் றாகியது.

உழைப்பும் – மொழியும் இல்லாமல் சமுதாயம் இல்லை என் றாகியது. மக்கள் வாழ்வோடு, மூச்சோடு பின்னிப்பிணைந்தது மொழி. பாவேந்தர் சொல்வது போல் தமிழ் மூச்சானது.

மொழி தோன்றிய நாளிலிருந்து அதனைப் பயன்படுத்திய மக்கள் கூட்டம், அதனை வளர்த்தும் பாதுகாத்தும் வந்துள்ளது.

சமூக உற்பத்திமுறை முன்னேற முன்னேற மொழியும் முன்னே றியது. மொழி முன்னேற முன்னேற சமூகமும் முன்னேறியது.

மிகவும் தொன்மை மக்கள் பின்னர் இடைநிலை மக்கள் நவீன மனிதர்கள் என அனைவரும் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்டு வந்துள்ளனர். அறிவியல் தொழில்நுட்பம் – நுட்ப அறிவையும், நுட்ப அறிவு – நுட்ப மொழிகளையும் கோரி நின்றது.

இருப்பிடங்களைத் தேடி அலைந்த பிரதேச மனிதன் – அரசியல் மனிதன் – இன்றைய அரசியல் கலாசார மனிதன் என அனைவருமே பிற மொழியோடுதான் பின்னிப்பிணைந்து வந்தனர். பிறமொழி கலப்பில்லாத – பிறமொழி நிரப்பிக் கொள்ளாத அதாவது தூயமொழி என்று ஒன்று இல்லை என்றே கூறலாம்.

பிரஞ்சு மொழியில் லத்தீன், ஜெர்மன் செமிடிக் கலந்திருக்கிறது.

ரஷ்ய மொழியில் – ஜெர்மன், பிரஞ்சு கலந்திருக்கிறது. துருக்கி மொழியில் அரபும் – பாரசீகமும் கலந்திருக்கிறது. போர்ச்சுகலில் – ஸ்பானிஷ் கலந்திருக்கிறது. சிங்கள மொழியில் பாலி, தமிழ், சமஸ்கிருதம் கலந்திருக்கிறது.

பஞ்சாபியில் இந்தி கலந்திருக்கிறது. இந்தியில் உருது கலந்திருக்கிறது. கன்னடத்தில் தமிழ் பிராகிருதம், சமஸ்கிருதம் கலந்திருக்கிறது.

மலையாளத்தில் தமிழும் – சமஸ்கிருதமும் கலந்துள்ளது. கிரேக்க மொழிகளில், பாரசீக மொழிகளில், ஆர்மீனிய மொழிகளில் தமிழ் கலந்திருக்கிறது.

தமிழில், பிரெஞ்சு மொழி கலந்திருக்கிறது. உதாரணத்திற்கு கிரேவி என சாப்பாட்டுக் குழம்பை கூறுகிறோம்.

தமிழில் ஆங்கில மொழி, கிரேக்க மொழி, ஆர்மீனிய மொழி, தென்னிந்திய, வட இந்திய மொழிகள் யாவும் கலந்துள்ளன.

தங்கள் தாய்மொழியில் பிற மொழிக் கலப்பை உலக மொழி அறிஞர்கள் பலர் எதிர்த்தே வந்துள்ளனர்.

ரஷ்யாவில் டால்ஸ்டாய், புஷ்கின், லெனின் அனைவரும் பிற மொழிக் கலப்பை எதிர்த்தே வந்துள்ளனர்.


பிரான்சு தேசம் ‘மொழி கழகம்‘ எனும் அமைப்பை தோற்றுவித்து – பிறமொழிக் கலப்பை எதிர்க்க மக்கள் இயக்கமே நடத்தியது (நேருவின் உலக வரலாறு).

இத்தாலியில் முசோலினி, ரோம் மொழியில் ஆங்கிலம் கலந்து பேசுவோரைத் தண்டிக்க இயக்கமே துவக்கினார். அவருக்கு மொழிப் பற்றை விட – பிற மொழி வெறுப்பு அதிகம் இருந்தது. பின்னர் இத்தாலி மக்கள் முசோலினியின் மொழி வெறியை நிராகரித்தனர்.

ஜெர்மனியில் மார்க்சும் மொழித் தூய்மைக்குப் பாடுபட்டார். இதன் பொருள் பிறமொழி எதிர்ப்பல்ல. ‘தாய் மொழி’ பாதுகாப்பே, தமிழிலும், பிறமொழி கலப்பைத் தடுக்க தொல்காப்பியர் காலத்திலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டில் மறைமலைஅடிகள், திரு.வி.க. ஜீவா போன்றோர் தனித்தமிழ் இயக்கம் கண்டனர். அயோத்திதாசர், பெரியார், சிங்காரவேலர், அண்ணா, கலைஞர் எனப் பலர் பங்களிப்பு செய்தனர். அத்துடன் மெட்ராஸ் எனப் பெயரை மாற்றி தமிழ்நாடு எனப் பெயர் சூட்டத் தோழர் பி.இராமமூர்த்தி, பி.பூவேஷ் குப்தா, நேசமணி, மா.பொ.சி., சங்கரலிங்கனார் போன்ற இன்னும் பல மேதைகள் ஆற்றியப் பங்களிப்பை நாடறியும்.

அதே போல தமிழ் அறிஞர்கள் பலர் பரிதிமாற் கலைஞர், சுந்தரனார், சோமசுந்தர நாவலர், சூரிய நாராயண சாஸ்திரி, நீலாம்பிகை அம்மையார், சோமசுந்தர பாரதி, உ.வே.சாமிநாத அய்யர், மு.கதிரேசன், பா.வே.மாணிக்க நாயக்கர், சிதம்பரம் செட்டியார், வேங்கடசாமி நாடார், இளவழகனார், இலக்குவனார், இராசமாணிக்கம், வ.சுப.மாணிக்கம், பெருஞ்சித்தரனார், மு.வ., சுப்ரமணிய பிள்ளை, பாரதி, பாவேந்தர் பட்டுக்கோட்டை, கண்ணதாசன், மருதகாசி, உடுமலை நாராயண கவி, தமிழ் ஒளி, குழந்தை அப்பாதுரை, நா.வா. பொன்னம்பலனார், ஐராவதம் மகாதேவன், சுப்ரமணிய அய்யர், வல்லிக்கண்ணன். ஜெயகாந்தன், தொ.மு.சி., இளவேனில், பிரபஞ்சன், சிவதம்பி, கைலாசபதி என அனைவருமே தாய் தமிழுக்கும் மொழி தூய்மைக்கும் அரும்பாடு பட்டனர். எனினும் தங்கள் எழுத்தில், பேச்சில் பிறமொழி கலந்திருப்பதை உணர்ந்தனர். எவ்வளவு கவனத்தோடு பேசினாலும் எழுதினாலும் வாழ்வியல் முறைகளில் பிறச் சொல் இயல்பாகிவிடுகிறது. பிறமொழி கலப்பு கேடுதான் சிதைவுதான் எனினும் வாழ்வின் மொழியில் அனுசரிப்பு இதனை ஏற்கிறது.












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 18.06.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# அண்ணாமலையே ஆகஸ்ட் 9-ல் திருப்பூருக்கு வந்து பார்!

**காவல் துறையில் பணியாற்றி அத்துறைக்கு துரோகமிழைத்து பாஜகவிற்கு தாவிய அண்ணாமலையார் நாள்தோறும் பேட்டியளித்து, அறிக்கை விடுத்து தனது இருப்பை வெளிப்படுத்தி சுய விளம்பரம் தேடிக் கொள்ளும் நபர். தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் பலராலும் அரைவேக்காடு அண்ணாமலை என்று வர்ணிக்கப்படும் நபர். கோவையில் அளித்த பேட்டியில் “தமிழகத்தில் லூலூ மால் வந்தால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் சிறு, குறு தொழில் முனைவோர்தான். ஆனால், இது குறித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.**



தமிழகத்தில் முன்னொரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது. ஆனால் தற்போது அதற்கான சுவடு இல்லை” என்று திருவாய் மலர்ந்திருக்கும் அண்ணாமலையார் எவ்வளவு பெரிய அரைவேக்காடு என்பதனை உறுதிப்படுத்தி இருக்கின்றார்.

சிறு, குறு தொழில்களை முடக்கும், அழிக்கும் கொடிய கொள்கையை பின்பற்றுவது அவர் தலைவராக இருக்கும் பாஜகவின் ஒன்றிய அரசு என்பது கூட தெரியாமல், அல்லது தெரிந்தும் தெரியாதது போல் பாவனை செய்து, கம்யூனிஸ்ட் கட்சி அதனை எதிர்க்கவில்லை என்று கூறுகின்றார்.

அந்நிய பெரு நிறுவனங்களை, வால்மார்ட் போன்ற நிறுவனங்களை அனுமதிக்காதே, சிறு, குறு தொழில்களை அழிக்காதே என்று கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்களை, தீர்மானங்களை, அறிக்கைகளை அறியாத அரைவேக்காடே, தகவல்களை சரியாக தயார் செய்து கொண்டு பேட்டி கொடு. தகவல்களை திரட்ட முடியவில்லை எனில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களிடம் கேட்டு தெரிந்து கொள்!

கம்யூனிஸ்ட் கட்சி முன்னொரு காலத்தில் இருந்ததாம், தற்போது அதற்கான சுவடு கூட இல்லையாம். அட அரை வேக்காடு அண்ணாமலையே! நாள்தோறும் கம்யூனிஸ்ட் தோழர்கள் செங்கொடி உயர்த்தி போராடிக் கொண்டிருப்பது உன் காமாலை கண்களுக்கு புலப்படவில்லையா?

அதிலும் குறிப்பாக உனது கட்சியின் ஆட்சியால், மக்கள் விரோத கொள்கையால், நாடு முழுவதும் உள்ள மக்கள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் மக்களின் வாழ்க்கை சீரழிந்து நிற்கின்றது.

மதவெறி பிடித்த உனது வன்முறை கூட்டத்தால், அருவருக்கத்தக்க பேட்டியால், வன்முறையால் நாடே கொந்தளிப்புக்கு உள்ளாகியுள்ளது மட்டுமல்ல, உலகின் பல நாடுகள், இந்தியாவுடன் நட்பு கொண்ட நாடுகள் உட்பட இந்தியாவிற்கு எதிரான கண்டனக் குரல்களை எழுப்புகின்றன.

உன்னைப் போன்ற உளறுவாய் மனிதர்களால் என் தேசம் கண்டனத்திற்கு உள்ளாகி வெட்கி தலைகுனிந்து நிற்கின்றது.

இவை போன்ற எண்ணற்ற பிரச்சினைகளுக்காக நாள்தோறும் குரலெழுப்பும் கம்யூனிஸ்ட்கள் உன் கண்களுக்கு புலப்படவில்லையா?

போகட்டும், கம்யூனிஸ்ட் சுவடு இல்லை என நா கூசாமல் கூறும் அண்ணாமலையே!

ஆகஸ்ட் மாதத்தை உனக்குத் தெரியுமா? அம்மாதத்தில் நாடு விடுதலை பெற்றது என்பதும் தெரியுமா? அந்த விடுதலைக்கு வித்திட்ட, நாடே பொங்கி எழுந்திட்ட ஆகஸ்ட் 9ஆம் நாளை தெரியுமா? உனக்கும் உன் கூட்டத்திற்கும் அந்நாட்களின் முக்கியத்துவம் தெரியாது! ஏனெனில், அந்நாளில் நடைபெற்ற போராட்டங்களுக்கும், உன் கூட்டத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை – இல்லை என்பது மட்டுமல்ல, அன்றைய விடுதலைப்போரில் உன் கூட்டத்தார் பங்கேற்கவில்லை என்பது மட்டுமல்ல, வெள்ளையர்களுக்கு வெண்சாமரம் வீசிய கூட்டம் தான் உன்னுடைய கூட்டம்.

ஆகவே ஆகஸ்ட் 9 குறித்தோ, அல்லது ஆகஸ்ட் 15 குறித்தோ உன் கூட்டத்திற்கு கவலை இல்லை.

ஆகஸ்ட் 9ல் தான் வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்ட நாள்.

ஒருவர் இருவர் அல்ல, ஒட்டுமொத்த இந்திய மக்கள் அனைவரும் ஒருசேர ஒலித்த குரல், ஓங்கி ஒலித்திட்ட அக்குரல் இன்றும் இந்திய மக்களிடம் ரீங்காரம் இடுகின்றது.

சுவடு கூட இல்லை என்று கூறிய கூமுட்டையே ஆகஸ்டு 9ஆம் நாள் நேரம் ஒதுக்கி திருப்பூர் மாநகருக்கு வா! கொடிகாத்த குமரன் உயர்த்திப் பிடித்த மூவர்ணக் கொடியை தன்மீது விழுந்து தாக்கிய அனைத்தையும் தாங்கி, தான் பிடித்த கொடியை தரையில் விழாது உயர்த்திப் பிடித்த குமரன் நகருக்கு வா! வந்து பார்!

பயிற்சிபெற்ற, சீருடை அணிந்த, மக்கள் தொண்டரணியினர் பல்லாயிரம் பேர் மிடுக்கு நடைபோட்டு அணிவகுத்துச் செல்லும் அழகைக் காண வா!

சீருடை அணிந்த இளம் பெண்களின் அணிவகுப்பை காண வா!

எங்களின் தாய்மார்கள், சகோதரிகள் செவ்வாடை அணிந்து படையென பல்லாயிரம் பேர் திரள்வதைக் காண வா!

இவர்களைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் சிவப்புச் சட்டை அணிந்து, செங்கொடியை உயர்த்திப் பிடித்து பெரும் பேரணியாய் திரள்வதைக் காண வா!

**பயிற்சிபெற்ற, சீருடை அணிந்த, மக்கள் தொண்டரணியினர் பல்லாயிரம் பேர் மிடுக்கு நடைபோட்டு அணிவகுத்துச் செல்லும் அழகைக் காண வா!**

**சீருடை அணிந்த இளம் பெண்களின் அணிவகுப்பை காண வா!**

**எங்களின் தாய்மார்கள், சகோதரிகள் செவ்வாடை அணிந்து படையென பல்லாயிரம் பேர் திரள்வதைக் காண வா!**

அவர்கள் எழுப்புகின்ற முழக்கங்களை உன் காதுகளால் கேள்!

மக்கள் விரோத, ஜனநாயக விரோத, சர்வாதிகார, பாசிச மோடி அரசே வெளியேறு என்று முழக்கமிடுவதை கேட்க வா! வந்து பார்!

சுவடு இல்லை என்று கூறும் நீயானாலும் அல்லது எந்த கொம்பன் ஆனாலும் எங்களின் அடிச்சுவட்டை அழிக்க முடியாது!

சுவடு தெரியவில்லை என்று கூறும் உனக்கு துணிவிருந்தால் ஆகஸ்ட் 9ல் திருப்பூருக்கு வந்து பார்!

வரும்போது சும்மா வராதே. உன் காமாலை கண்ணுக்கு கண்ணாடி அணிந்து வா!

உன் செவிட்டுக் காதுகளை சரி செய்துகொண்டு வா!

அணிவகுப்பைப் பார்! முழக்கத்தைக் கேள்! நாங்கள் யார் – எங்களின் சுவடுகள் என்ன என்பதை அறிவாய்!

**– கிராமத்தான்**




## இந்தியாவின் ஒற்றுமையை காப்பாற்றுகின்ற

# நேர்மையானவரே ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும்

### டி.ராஜா பேட்டி



திருச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாககுழு உறுப்பினர் த.இந்திரஜித் இல்ல திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்ற அகில இந்திய பொதுச் செயலாளர் ராஜா செய்தியாளர்களை சந்தித்த போது கூறியதாவது:

அகில இந்திய மாநாடு ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் அக்டோபரில் தேசம்காக்கும் திருப்பு முனை மாநாடக நடைபெற உள்ளது

இந்தியவில் தற்போது ரூபாய் மதிப்பு வீழ்ச்சி அடைந்து உள்ளது இந்தியாவின் பொருளாதாரம் நிலை குலைந்து இருப்பதை காட்டுகிறது

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு வந்துள்ளது ஜனாதிபதியாக யாரை தேர்ந்தெடுப்பது என்பது குறித்து மதசார்பற்ற ஜனநாயக கட்சிகளுடன் பேச்சு வார்த்தை தொடங்கியிருக்கிறது

அரசியல் சாசனத்தை உயர்த்தி பிடிக்கக் கூடிய ஜனநாயகத்தை காப்பாற்ற கூடிய இந்தியாவின் ஒற்றுமையை காப்பாற்றுகின்ற நேர்மையானவரே ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆனால் பாஜக தனக்கு பெரும்பான்மையான பலம் இருப்பதால் அந்தக் கட்சி சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளரை வெற்றிபெற வைத்துவிடலாம் என நினைக்கிறது

இந்தியாவில் பாஜகவுக்கு எதிராக உள்ள மாநில கட்சிகள் ஒன்றுபட்டால் ஜனாதிபதி தேர்தலில் பாஜக வெற்றி பெறுவது கேள்விக் குறியாகிவிடும்

பா ஜ க –ஆர் எஸ் எஸ் ஆகியவற்றின் கூட்டு இந்தியாவின் அரசியல் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது

முகமது நபியை பற்றி பாஜகவைச் சேர்ந்த செய்தி தொடர்பாளர்கள் விமர்சித்து உலக அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பல நாடுகள் கண்டனங்களை தெரிவித்துள்ளன. இந்திய நாடு ஒரு குடியரசாக தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால் பாஜக– ஆர்எஸ்எஸ் கூட்டணியை முறியடிக்க வேண்டும்

பாஜக தமிழகத்தில் எப்படியாவது காலூன்ற வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டு இருக்கிறார்கள்

ஆதீனங்கள் தாமாக முன்வந்து வரவு செலவு கணக்கை கொடுக்க வேண்டும். இந்தியாவில் மதங்களுக்கு இடையே நல்லிணக்கம் காப்பாற்றப்பட வேண்டும் மதத்தின் பெயரால் மக்கள் இடையே விரோதம் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடாது. ஜாதி மத பேதம் இல்லாத புதிய சமுதாயம் உருவாக கொள்கை ரீதியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போராடி வருகிறது இவ்வாறு கூறினார். இவ் செய்தியாளர் சந்திப்பின் போது மாநில செயலாளர் இரா. முத்தரசன் ஏ.ஐ.டி.யு.சி. மாநில பொது செயலாளர் டி.எம்.மூர்த்தி, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் குணசேகரன், திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் திரவிடமணி, மாமன்ற உறுப்பினர் சுரேஷ், புறநகர் மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் ஜனசக்தி உசேன் ரமேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.